




# தமிழரசு



16-6-'78

50 காசு





சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக் கட்டப்பட்டது!



- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

ARASU CEMENT TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

*மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:*

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.

# இந்த இதழில்



தமிழரசு

மலர் : 8 இதழ் : 24

16—6—1978

**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையை இவ்விதழில் எடுத்து வெளியிட்டுள்ளோம். படிப்பு முடிந்து, வாழ்வுக் களத்தின் நுழைவாயிலிலே நிற்கின்ற மாணவச் சமுதாயத்துக்குப் பேரறிஞர் அண்ணாவின் அறிவுரை,இளைய தலைமுறையினர் தம் இதயத்திலே பசுமரத்தாணிபோல் பதிய வைத்துக் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் வானொலி உரையும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் வானொலி உரையும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. கூட்டுறவுத் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் ஏற்பட்டுள்ள புதிய வேகம் —ஆற்றியுள்ள பணிகள்— —சிறப்புற ஆற்றப்பட உள்ளவை— அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர்கள் அழகுபட எடுத்துச் சொல்லியுள்ளார்கள், தங்கள் உரைகளிலே....!

கிராமியக் கலைகள்—தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் நாகரிகத்தைப் பிரதிபலிக்கச் செய்வன; மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கிராமியக் கலைகளின் தொன்மையை, சிறப்பியல்புகளை, தமிழ் மக்களோடு எந்த அளவுக்கு அவை பின்னிப் பிணைந்து இருக்கின்றன என்பதையெல்லாம் அழகு தமிழில் வடித்துத் தந்துள்ளார்.

'அண்ணா எனும் இலக்கியவாதி' எனும் இலக்கியத் திறனாய்வு கட்டுரைத்தொடர் இவ்விதழுடன் நிறைவு பெறுகிறது! 'அண்ணாவின் நோக்கம் சீர்திருத்தம் — அவர் கையாண்ட தமிழ் அதற்கு ஒரு கருவி. பேச்சு நடையிலும் எழுத்து நடையிலும் அண்ணாவின் சகாப்தம் என்று அழைக்கப்படும் ஒரு சகாப்தத்தையே பேரறிஞர் அண்ணா உருவாக்கினார்' என்ற அசைக்க முடியாத உண்மையை அழகுபட எடுத்து விளக்கி, தொடர் கட்டுரையை முடித்துள்ளார், தமிழரசு கூட்டாசிரியர், பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகளைப் பல்வேறு கோணங்களில் திறனாய்வு செய்ய 'அண்ணா எனும் இலக்கியவாதி' ஓர் அருமையான தூண்டுகோல் என்றால் அது மிகையாகாது!

சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் பயனுள்ள கட்டுரைகளும், செய்திகளும், இவ்விதழில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மாநில தேசியசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத்தலைவர் திரு. எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்களின் கட்டுரையும் — சிறுசேமிப்புத்துறை இயக்குநர் அவர்களின் கட்டுரையும்—சிறுசேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

மற்றும் பல்வேறு சுவையான செய்திகளும், பயனுள்ள கட்டுரைகளும் இவ்விதழில் உண்டு.

அடுத்த இதழ், தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலராக, அதிக பக்கங்களுடன்—கண்கவர் வனப்புடன் வெளிவருகிறது. **

## உள்ளே....

| | பக்க எண் |
|---|---|
| அறிவுப்படை வெற்றி பெறுக | 2 |
| பொருளாதார மேம்பாட்டை நோக்கி .. .. .. | 5 |
| உவகையூட்டும் ஒப்பற்ற கலைகள் .. .. | 9 |
| தமிழகத்தில் வேளாண்மை மறுமலர்ச்சி .. .. | 12 |
| சிறுதுளி பெருவெள்ளம் .. | 14 |
| சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகக் கல்வி .. .. | 17 |
| ஒரு ஸ்டெதாஸ்கோப் கட்டடம் கட்டுகிறது .. | 20 |
| பாவையர்க்கோர் பல் தொழில் பயிலகம் .. | 23 |
| காந்தம் .. .. | 27 |
| சேமிப்பு ஒரு சமய சஞ்சீவி .. | 33 |
| இராமநாதபுரத்து சேதுபதி ஓவியங்கள் .. | 37 |
| காயிதே மில்லத் பிறந்தநாள் விழா .. | 41 |
| அண்ணா எனும் இலக்கியவாதி | 46 |

# அறிவுப்படை வெற்றி பெறுக!

பேரறிஞர் அண்ணா



பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்து நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே சூல் கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம்.

தன் தோகைகளை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ!

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல் தனைக்கொண்டு தானே அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கின்றாள்?— இல்லை—மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை யுமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளிலுள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு—பொற்குவியல் — புள்ளிக் கலாப மயில் —கார் மேகம் — நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள் இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொதுவுடைமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள்.

எந் நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந் நாட்டினில் தொடர் தொடராய், அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும்; நன்று இது, இது தீது; நமதிது, பிறர் தந்ததிது; மரபு இது, மருள் இது — என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க றிவுப் படை எழுந்தபடி இருந்திட வேண்டும்; அதற்கான பயிற்சிக் கூடம் பல்கலைக் கழகம்; நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலை அமைந்துள்ள நக்கீரக் கோட்டம்.

ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும் ; இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம் —என்றுரைக்கின்றார் — எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ராண்டு ரசல் என்னும் பெருமகனார்.

## தமிழ்ப் பண்பாடு

**தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!**

**ஆனால்....தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்!**

**—பேரறிஞர் அண்ணா.**

ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச் சென்றார்கள். இவை போன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை; இடையில் அவை மறந்தோம்; அல்லலுற்றோம்; இன்று அவனியின் பிற்பகுதியிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; நமக்குண்டு அந்தக் கருவூலம் நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம் ; நாம் தமிழர் என்பதனை அறிகின்றோம். நானிலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கிறோம்.

பட்டம் பெற்றிடும் இத்திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள். ஐயமென்ன? ஆயினும் உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று, உறுதி கொண்டிடவும் உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந்நாள்.

எல்லாம் பிற நாடுகளிலே உள, நம் நாட்டிலே ஏதும் இல்லை என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து, எமக்கு ஈந்திடுக, என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத் தக்க, ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணிபோல, மங்கியதோர் ஓவியம் போல உளது; மாசு துடைத்திடுவோம். மணியொளியைக் காட்டிடுவோம் என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கியுள்ள காலம் இது.

அச்சத் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டுநிலை உயர்த்தல், பிற நாடுகட்கு நம் தனிச் செல்வம் ஈது எனக் காட்டிடல், அளித்திடல் இவை எமது பணி என்று கூறிடுவீர். இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும், செயலாலும் காட்டிட வாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை—இவை யெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ, நமது உடைமை என்ற பாசங் காட்டியோ நெளிந்திடக் கண்டிடின் விட்டு வைத்திடாமல் அவற்றை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடல் வேண்டும்.

அவர் கூறியுள்ளார், ஆகவே அஃது அறிவுடையதாகவே இருந்திடல் வேண்டும்—என்று எண்ணி இருந்திடாமல், அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தாராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடந் தந்து, உண்மையெனில் உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம்; அன்று எனில் உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம் என்று முழக்கமிட்டு அறிவுத் துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.


இந்நாட்டுத் தேள் எனின், கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேள் எனில், பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின் எமதாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை; அதனைத் தந்திடவும், அதன் மூலம் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்றிடவேண்டும்.

பல்கலைக் கழகங்கள் வளர்ந்துள்ளன; வளருகின்றன; கல்விக் கூடங்கள் பெருகி வருகின்றன ; எனினும் இன்றும் மக்கள் தொகையுடன் பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனை சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான் நாட்டு நிலை உயர்த்திட, நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கின்றனர். நீவிர் இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை, பேரதாமை, அறியாமை, கயமை என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர். பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வுபெற முந்திக் கொள்ளும் நிலையினர் என்ற நிந்தனையை நீக்கிடுக ! நீள்வெற்றி பெற்றிடுக!

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலைகுலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே, மனக் குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது.

நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவர்களிடம் கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை



தெரிவித்துள்ளார்கள். நாம் நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம் நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாறாக, அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதுமில்லை ; அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப் படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களின் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதனைக் காண நேரிடுவதாலும் அவர்களியல்பு திரிந்துவிடுகிறது; நேர்வழி அடைபடுகிறது ; கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகிறேன்.

எனவே இளைஞனும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திட வேண்டுமெனில், மற்றையோர் தமது சொல்லும் செயலும் பொது நலனுக்கு உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக் கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகிறேன்.

அதேபோது, மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமை மிக்கது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தமது செயலை வகுத்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தத்தையின் கழுத்திலே பூட்டவோ கத்தும் கடல் மூழ்கி முத்தெடுப்பர்? தனக்கென வந்துள்ள தையலன்றோ அதற்கு உரியாள்!

அரைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பெரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினர்க்கு நல்வாழ்வு தந்திட; எனக்கென்ன தருகின்றனர், ஏனிந்தத் தாமதம் என்ற கணை தொடுக்க மட்டுந்

தானே? எவரும் அது போல் கூறார்!

கல்விக் கூடங்களின் எண்ணிக்கை பெருகி, அரசுகளின் வருவாய்த் துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில் கல்விக் கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது. படிப்படியாக இந்நிலையினைச் செம்மைப் படுத்த அரசு முயன்று பணியாற்று வருகிறது. ஆண்டு பல ஆகக்கூடும். அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு; அதற்கே பெரும் பொருள் ஈந்திட வேண்டியுள்ளது. அதுவும் எந்நிலையில் இப்பொருளைப் பெறுகின்றோம், தருகின்றோம் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

முழு வயிறு காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வில் சுவை காணார், வலியோரின்-பகடைக். காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே கோட்டையாய், கொடி மரமாய், பாதையாய், பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது — வரியாகப் பெறப்படுகிறது. அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளி வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை எத்தனை ஏழைமைக் கிடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றார் என்பதனை - மாணவர் உணர்ந்திடின் - அவர் உணர்வர் - அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும்; ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனை தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்றறிவர். அஃது மாணவருலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும். எதிர்காலம் அவர்களுடையது; அதனை இருளற்றதாக் கிடுவது அவர் பொறுப்பு. அதற்கான ஆற்றல் மிக்கார் அவர்கள். ஒவ்வொரு நாட்டிலும், சிறப்பு மிக்க கட்டங்களில் மாணவர்கள் முன்னணியில் நின்று பணிபுரிந்தனர் என்பதனை வரலாறு காட்டுகின்றது. இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடுங் காலம், நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும்.

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக் கூடிய இலட்சியங்கள் நம்முன் நிற்கின்றன. ஆனால் அதே வரிசையில் வசீகரப் பூச்சுக்களுடன், மயக்க மூட்டத் தக்க பேச்சுக்களையும் குறிக்கோள் என்ற பெயரால் நிற்க விடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும் —இது குறிக்கோள்; அனைவரும் ஏற்கத் தக்கது. இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்.

நாட்டின் ஒற்றுமைக்காக உன் மொழி, உன் மரபு, அழிந்திடவும் ஒருப்பட வேண்டும்; பிறமொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாது; தன் மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது. இதனை இலட்சியம் என்றோ, திட்டம் என்றோ கூறுவது இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும். அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்— இஃது எல்லோரும் ஒப்புக் கொள்ளத் தக்க இலட்சியம். நாட்டுச் செல்வம் பெருகட்டும்; அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது, இலட்சியமாகாது—அதனைக் கேலிகூத்தாக் குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடியின்பம் —இனிய, எளிய இலட்சியம்.


கூடி வாழ்வோம்; உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு—என்று முறை வகுத்திடல் கூடி வாழ்வதாகாது. ஆட்டுக் குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய் 'என்னோடு ஒன்றாக ஆடு இணைந்து விட்டது. நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில் 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக்கூடாது என்பதனை அறிவுறுத்தவேண்டும்.

பட்டம் பெற்றோரே, உமது தெளிவுரை கிடைத்து மக்கள் இது போன்ற விளக்கம் பெற்றிட வேண்டுமென விழைகின்றேன்.

இன்று புறப்படும் படை அறிவுப் படை. இதனை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, சென்று வருக, வென்று வருக என்று கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதங் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசு ஆகட்டும்; பண்பாடு உமது கவசமாகட்டும்; அறிவு உமது படைக்கலனாகட்டும்; அறநெறி உமது வழித் துணையாகட்டும், உறுதியுடன் செல்வீர்; ஊக்கமுடன் பணிபுரிவீர்; ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ, தரணிக்குத் துணை நின்றிடும் தகுதி பெற, சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

—மதுரைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாப் பேருரையிலிருந்து..



# வளரும் தமிழகம்

# பொருளாதார மேம்பாட்டை நோக்கி..

உலகத்தில் வாழும் சமுதாயங்களில் மிகவும் மூத்த ஒன்றாகத் தமிழ்ச் சமுதாயம் கருதப்படுகின்றது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடியினர் என்கின்ற சிறப்பும் தமிழ் மக்களுக்கு உண்டு. எகிப்திய மக்கள் நாகரிகத்தின் தொட்டிலில் குழவிப் பருவத்தில் இருந்தபோது தமிழக மக்கள் காளைப் பருவ மிடுக்கோடு, கடலில் கலம் செலுத்தி வலம் வந்திருக்கிறார்கள். இதெல்லாம் பாராண்ட தமிழனின் பண்டைப் பெருமைகள். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் இன்று சொல்வதில் ஓர் மகிமை இல்லை.

இன்றைய தமிழகம், வாழ்வின் முன்னேற்றத்திற்கு என்னென்ன காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஒன்று. நேற்றைய பெருமையினை மட்டுமே பேசி, இன்று செய்ய வேண்டியதை இழப்பது அறிவுடைமை ஆகாது. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை இந்தியத் திருநாடு எத்தனையோ துறைகளில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, கரம்பு நிலத்தைக் கழனி ஆக்கிப் பசுமைப் புரட்சி என்னும் மகத்தான சாதனையினைச் செய்து முடித்தது. நவீன ஆலயங்கள் என்று அழைக்கப்படும் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் சுற்றுப்புற, சுகாதாரத்தை மேம்படுத்தி, மருத்துவ உதவிகளைப் பரந்த அளவில் அளித்து மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கைத் தீபத்தை ஏற்றி வைத்தோம். பட்டி தொட்டிகளில் வாழும் மக்களுக்குக் கல்வி வழங்கிச் சிந்தனைப் புரட்சிக்குப் பாதை அமைத்தோம். இருந்தும் பிரச்சினைகள் தீரவில்லை. வளர்ந்த படியேதான் இருக்கின்றன.

வளரும் சமுதாயத்தின் பிரச்சினைகள் முடிவுக்கு வருவதில்லை. பிரச்சினைகள் தீர்ந்து விடுவது தேக்கத்தின் அடையாளம். வளரும் தமிழகம் என்று வானொலி கொடுத்துள்ள தலைப்பிலேயே இது வளர்ந்த தமிழகம் என்பதும், வளர்ந்து கொண்டிருக்கும் தமிழகம் என்பதும், தொடர்ந்து வளர இருக்கின்ற தமிழகம் என்பதும் தெளிவாகும். இந்தத் தலைப்பில் வானொலியில் தமிழகத்தின் பல்வேறு மாண்புமிகு அமைச்சர்கள் இதற்கு முன்பு தங்களின் துறைகள்பற்றி உரையாற்றி இருக்கிறார்கள். துறைகள் பலவாயினும் நோக்கம் ஒன்றே. சமூக வளர்ச்சிக்குத் தமிழக அரசு செய்திடும் நல்ல பல பணிகளை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம், அரசுப் பணிகளை அவர்கள் புரிந்து கொள்ளவும், அரசுப் பணிகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் உதவியாகிறது.

'சிறு துளி பெரு வெள்ளம்' என்பார்கள். சிதறிய துளிகள் சடுதியில் மறைந்து விடுகின்றன. ஒருங்கிணைந்த துளிகள் வெள்ளமாக உருப்பெற்று விடுகின்றன. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

இந்த எளிய உண்மையை ஆதாரமாகக் கொண்டுதான் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம். இதில் ஜாதி, இன, மொழி வேறுபாட்டுக்கு இடமில்லை. எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் வாழவேண்டும். ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும் வாழவேண்டும் என்கிற அடிப்படைக் குறிக்கோளோடு இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டை நோக்கி இந்த இயக்கம் வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழகக் கூட்டுறவுத் துறை பல்வேறு நிலைகளிலும் பலதரப்பட்ட அமைப்புகளின் மூலமாக மக்களின் வாழ்க்கை மேம்பாடடைய உதவி புரிந்து வருகிறது. குறிப்பாக வேளாண்மைக் கடன் வசதி, விற்பனை வசதி, வேளாண் விளை பொருள்கள். பதனிடுதல், நுகர் பொருட்கள் பங்கீடு ஆகிய துறைகளில் இயக்கம் சீரான முறையில்முன்னேற்றம் அடைந்து வருகிறது.

வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவதில் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளன. அவை 1975-76ஆம் ஆண்டில் 103 கோடி ரூபாய் கடன் வழங்கின. ஆனால் 1976-77ஆம் ஆண்டிலோ 125 கோடி ரூபாய் கடன் வழங்கின. 1976-77ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களில் 47 சதவீதம் சமுதாயத்தில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டது. நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்

களாக 1975-76ஆம் ஆண்டில் 19 கோடி ரூபாய் வழங்கியிருந்தன. ஆனால் 1976-77ஆம் ஆண்டிலோ 19 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன்களாக வழங்கின. இது போலவே விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் 1975-76-ல் 28 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளை பொருள்களை விற்பனை செய்தன. 1976-77ஆம் ஆண்டிலோ 36 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளை பொருள்களை விற்பனை செய்தன. நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்கள் 1976-77ஆம் ஆண்டில் 147 கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்களைச் சில்லறையில் விற்பனை செய்தன.

இந்தப் புள்ளி விவரங்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்கூடக் கூட்டுறவு அமைப்புகள் வசதி குறைவான மக்களுக்கு வாழ்வளிக்க எத்தகைய முனைப்போடு செயல்பட்டு வந்திருக்கின்றன என்று தெரியவரும்.

என்னதான் இந்திய நாட்டைத் தொழில் மயமாக்க நாம் பாடுபட்டாலும் இந்தியப் பொருளாதாரம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைந்திருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

உழவர்களுக்குத் தேவையான குறுகிய காலக் கடன்களையும் நடுத்தரக் காலக் கடன்களையும் கிராமங்களில் அமைந்துள்ள 4,700 வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. இவை யாவும் மாவட்ட அளவில் அமைந்த பதினைந்து மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் யாவும் மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மொத்தம் 45 இலட்சம் உழவர் குடும்பங்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளோம். இவர்களில் 39 இலட்சம் உழவர் குடும்பங்கள் வேளாண்மைக் கடன் வசதி, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகி உள்ளனர். இம்மாநிலத்திலுள்ள மொத்த உழவர் குடும்பங்களில் இது 88 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. 1978-79ஆம் ஆண்டு இறுதிக்குள் இதை மேலும் உயர்த்த அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது.

1976-77-ல் குறுகிய காலக் கடனாகவும், நீண்ட காலக் கடனாகவும் உழவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 79 கோடி. 1976-77-ல் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.125 கோடி. நடப்பு ஆண்டில் அது 135 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79-ல் 145 கோடி ரூபாய் கடனாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை வெறும் புள்ளி விவரங்கள் அல்ல. உழவர் பெருங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி, விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள சில பல நடவடிக்கைகள் ஆகும்.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றின் காரணமாகப் பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகின்றபோது உழவர்கள் வாங்கியுள்ள குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன், மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் ஆகியவை தத்தம் நிலையில் வேளாண்மைக் கடன் வசதி நிலைப்படுத்து நிதியை ஏற்படுத்தி, தங்களது நிகர ஆதாயத்திலிருந்து இந்நிதிக்குத் தொகை வழங்கி வருகின்றன.

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வழங்குவதற்காகக் கூடுதல் கடன்களையும் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ள பகுதிகளில் புதிய கடன்களையும் வழங்கி வருகின்றன. செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதித்த பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குத் தாளடிப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 50 ரூபாய், சம்பாப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு 20 ரூபாய் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, உரத்திற்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு 150 இலட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள எல்லா உழவர்களுக்கும் வழங்கப்பட்ட பூச்சி கொல்லி மருந்துகளுக்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக 1978ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரையில் வழங்க அரசு வகை செய்துள்ளது.

நடப்பு ஆண்டில் நீண்ட காலக் கடன்களாக 18 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிட்டு, 31-12-'77 வரை 7 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனில் 40 சதவீதம் வரை இரசாயன உரமாகவும், வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. துணி, பாடப் புத்தகங்கள், மாணவர்களுக்காக மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவையும் கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கல்லூரி, பல்கலைக் கழக மாணவர்களின் பண்டகசாலைகளின் திறனை வலுப்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கொண்டு வந்துள்ளது. கல்லூரி மாணவர் பண்டகசாலை ஒன்றுக்கு ரூ. 15,000ம், பல்கலைக் கழக மாணவர் பண்டகசாலை ஒன்றுக்கு ரூ. 30,000ம் சராசரியாக உதவி அளிக்கப்படுகிறது. எட்டுக் கல்லூரி மாணவர் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளிக்குமாறு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்குச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்துக்கு மட்டுமே நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. இயன்றவரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு செயற் குறிப்புகளை அனுப்பி இத்திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக அளவு நிதி உதவி பெறக் கருதப்பட்டுள்ளது. இப்பண்டக சாலைகள் தங்களுடைய பணியாளரமைப்புச் செலவினைச் சரிக்கட்ட மாநில அரசு நிதிகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு பண்டகசாலைக்கு 1,000 ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு நிர்வாக உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

தமிழக அரசைப் பொறுத்த வரையில் பிற்படுத்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் ஆகியோரின் நலனில் விசேஷமான அக்கறை செலுத்த விரும்புகிறது.

## தமிழ்நாடு, புதுவையில்

**தமிழ்நாடு, புதுவை வட்டாரத்தில் சிறு சேமிப்பு வசூல் 1977-78ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 5 கோடியே 77 இலட்சம் அதிகரித்துள்ளது.**

**1976-77ஆம் ஆண்டுக்காலத்தில் ரூ. 28 கோடியே 44 இலட்சத்துக்குச் சற்றுக்கூடுதலாக இருந்த சிறுசேமிப்பு வசூல் 1977-78ஆம் ஆண்டில் ரூ. 34 கோடிக்கு அதிகமாகச் சென்றுள்ளது.**

**புதுவையில் சிறுசேமிப்பு வசூல் 4 இலட்சத்திலிருந்து ரூ. 16 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த வட்டாரத்தின் நிகர மொத்த வசூல் உயர்வுக்கு அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிக் கணக்கில் கணிசமான உயர்வு ஏற்பட்டுள்ளதும் ஒரு காரணமாகும்.**

பின்தங்கிய பகுதிகளில் அல்லது சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் தேவையை நிறைவு செய்யச் சிறு கிளைகளை ஏற்படுத்திய கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும், வலுவான தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசு கொண்டு வந்துள்ளது. நலிந்த பிரிவினரில் மிக நலிந்த பிரிவினரான நகரப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதி மக்களுக்குப் பணிபுரிய "ஜனதா அங்காடி" என்றழைக்கப்படும் சிறு கிளைகளைத் தொடங்கும் புதிய திட்டம் ஒன்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினருக்காக 54 சிறிய கிளைகளையும், நலிந்த பிரிவினரில் மிக நலிந்த பிரிவினருக்காக 59 சிறிய கிளைகளையும் (ஜனதா அங்காடிகள்) தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் சிறிய கிளைகளுக்கான 6 செயற்குறிப்புகளுக்கும், மேலும் சிறிய கிளைகளுக்கான (ஜனதா அங்காடிகள்) 22 செயற்குறிப்புகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இயன்ற அளவு எவ்வளவு முடியுமோ அவ்வளவு செயற்குறிப்புகளை அனுப்பி இந்திய அரசிடமிருந்து இத்திட்டத்தின்கீழ் அதிக அளவு நிதி உதவியைப் பெறக் கருதப்பட்டு உள்ளது. அப்போதுதான் கிராமப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள சிறிய கிளைகள்—ஜனதா அங்காடிகள் மூலமாகச் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்ற முடியும்.




இவர்கள் மட்டுமின்றி தொழிலாளர்களின், குறிப்பாக சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பயனுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான நிதி உதவியை அரசிடம் இருந்து பெற்றுத் திண்டுக்கல்லில் நடப்பு ஆண்டில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நன்மை பயக்க வேண்டிய கூட்டுறவுத் துறை சிற்சில சமயங்களில் முறைகேடுகளுக்கும், ஒழுங்கீனங்களுக்கும் இடம் கொடுத்து விடுவதாகப் புகார்கள் இருப்பது மறுப்பதற்கில்லை. தமிழக அரசைப் பொறுத்த வரையில் இந்தத் தீமையை உடனடியாகக் களைவதில் விசேஷ அக்கறை காட்டி வருகிறது.

நமது மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் முறைகளில் நடைபெற்ற கையாடல், முறைகேடுகள் இவற்றைக் குறித்துப் புலனாய்வு செய்வதற்காகத் தனி விசாரணைக் குழு ஒன்றை அரசு 1976 ஜூன் திங்களில் அமைத்தது. தலைமைச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு வங்கிகள், விற்பனைச் சங்கங்கள், மொத்தப் பண்டகசாலைகள் ஆகியவை உட்பட 50 கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த தனது அறிக்கையை இக்குழு அனுப்பியது. இக்குழு கூட்டுறவுச் சங்கங்களில் செய்யப்பட்ட முறைகேடுகள் பலவற்றை, அதாவது முறையற்ற வகையில் பணியாளர்களை நியமனம் செய்தது, மோட்டார் வண்டிகள், தொலைபேசிகள், நிதிகள் முதலியவற்றைத் தவறாகப் பயன்படுத்தியது, தேவையற்ற விளம்பரங்கள் செய்தது, பினாமிப் பெயர்களில் கடன் வழங்கியது, அந்த அந்தக் கூட்டுறவுச் சங்க நிறுவனங்களின் நலனைப் பாதிக்கும் செலவுகள் முதலியவற்றைச் செய்தது ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளது. இம்முறைகேடுகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு ஊழலற்ற நிருவாகத்தை மக்களுக்கு அளிக்க வேண்டுமென்பதில் மிகுந்த நாட்டம் கொண்டு செயல்பட்டு வருகிறது. ஊழல் ஒழிய வேண்டுமானால் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. கூட்டுறவுத் துறை என்பதே ஒத்துழைப்பின் மையமாகக்கொண்டு நடைபெறும் ஓர் இயக்கம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களும் கூட்டுறவுத் துறை மூலம் மக்களுக்குச் சேவை செய்வதில் மிகுந்த நம்பிக்கை வைத்து இருந்தனர். நவீன ஆட்சி முறை மக்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி வெற்றி பெறுவது சாத்தியமில்லை. ஆகவே, கூட்டுறவுத் துறை வெற்றிபெற்று மக்களுக்குச் சேவை செய்ய அனைத்துத் தரப்பினரின் முழுமையான ஒத்துழைப்பை வேண்டுகிறேன்.

மக்கள் குரலே மகேசனின் குரல் என்றார் பேரறிஞர் அண்ணா. கூட்டுறவுத் துறை வளம் பெற்றுப் பணிபுரிய எப்போதும் நீங்கள் குரல் கொடுக்கலாம். அதைக் கேட்டுச் செயல்பட புரட்சித் தலைவரின் தமிழக அரசு தயாராக உள்ளது.

நன்றி, வணக்கம்.

(21-5-78-ல் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.)

# பள்ளி சேமிப்புத் திட்டம்

**சிறு சேமிப்புத் திட்டம் என்பது மத்திய அரசின் அஞ்சல் நிலைய சேமிப்பையே குறிக்கும். மக்களின் சேமிப்பைச் சிறு சேமிப்புத் திட்டத்தின் வாயிலாக நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.**

**சேமிப்பைத் திரட்டும் பணியில் ஆண், பெண் முகவர்களும் அரும்பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் கமிஷன் அடிப்படையில் பணியாற்றுகிறார்கள். பொதுமக்களின் சேமிப்பைத் திரட்டுவது இவர்களின் பணியாகும்.**

**பள்ளிகளில் 'சஞ்சாயிகா' எனப்படும் பள்ளி சேமிப்புத் திட்டம் மாணவர்களால் மாணவர்களுக்காக நடத்தப்படும் ஒரு திட்டமாகும். இதில் பள்ளி மாணவர்கள் தமக்குக் கிடைக்கும் காசின் ஒரு பகுதியைச் சிறுகச் சிறுகச் சேமிக்கிறார்கள்.**

**சென்னையில் பல பள்ளிகளில் 100 சத மாணவர்கள் இத்திட்டத்தில் பயன் பெற்று வருகிறார்கள்.**

**[தகவல் : தேசிய சேமிப்பு நிறுவனம்]**

# மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு

மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழுவினை 1978-79ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசு திருத்தி அமைத்துள்ளது. திருத்தியமைக்கப்பட்ட இக்குழுவின் தலைவராக முதலமைச்சரும், துணைத் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களும் இருப்பார்கள். இக்குழுவின் உறுப்பினர்கள் 1—5—78 முதல் 30—4—79 வரை பதவி வகிப்பார்கள். திருத்தியமைக்கப்பட்ட மாநில ஆலோசனைக் குழு கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாக இருக்கும் :

**உறுப்பினர் பெயர்கள் :**

| | | |
|---|---|---|
| (1) | தலைவர் | திரு எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாடு முதலமைச்சர். |
| (2) | நிதி அமைச்சர் | திரு கே. மனோகரன், |
| (3) | துணைத் தலைவர் | திரு எஸ். எஸ். இராசேந்திரன், (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) 3-3, எல்டாம்ஸ் சாலை, சென்னை-18. |

**அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் :**

1. திருமதி சிந்து நந்தகோபால்,
தலைவர், மாநில சமூக நலவாரியம், சென்னை.

2. திரு எம்.பி.எஸ். ஹென்றி,
தென் இந்திய ஆலை அதிபர்கள் சங்கம்,
கோயம்புத்தூர்.

3. திரு சி. பிரபாகரன்,
தலைவர்,
தென் இந்திய ஐக்கிய பண்ணையார் சங்கம்,
கூனூர்.

4. திரு எச்.சி. கோத்தாரி,
தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம்,
சென்னை.

5. திரு டி.வி.எஸ். ராஜு,
தலைவர்,
தென் இந்திய திரைப்பட வர்த்தகக் கழகம்,
122, அண்ணா சாலை, சென்னை-2.

6. திரு எம். வி. பரமேஸ்வரன்,
செயலாளர்,
சிறு சேமிப்பு முகவர்கள் சங்கம்,
சென்னை.

7. திரு எஸ். ரங்கராஜன்,
தலைவர்,
தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்,
சென்னை-9.

8. திரு ஜி. இராமானுஜம்,
தலைவர்,
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை-14.

9. திரு எம். ஏ. எம். இராமசாமி,
செட்டிநாடு இல்லம்,
கிரீன்வேஸ் சாலை, சென்னை-28.

10. திரு எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்,
70, முதல் மெயின் ரோடு,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.

11. திரு எஸ். கோபாலன்,
ஓய்வு பெற்ற தேசிய சேமிப்பு வட்டார இயக்குநர்,
சென்னை.

12. திரு என். வி. நாயுடு,
முன்னாள் தேசிய சேமிப்பு ஆணையர்,
தேச நாயக்கன்பாளையம் அஞ்சல்,
ஜக்கர்பாளையம், கோயமுத்தூர்.

**அரசுச் சார்புடைய உறுப்பினர்கள் :**

1. அரசுச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை-9.

2. தலைமை அஞ்சல் அதிகாரி,
தமிழ்நாடு, சென்னை-2.

3. சிறு சேமிப்பு இயக்குநர்—உறுப்பினர்—
செயலாளர்.

4. தேசிய சேமிப்பு வட்டார இயக்குநர்,
சென்னை-2.
இணைச் செயலாளர்.

மாநிலத்தில் சிறு சேமிப்பு இயக்கத்தை ஊக்குவிக்கவும், பரப்பவும் வேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து, அரசுக்கும், தேசிய சேமிப்பு நிறுவனத்திற்கும் ஆலோசனைகள் கூறுவதும்—உதவிபுரிதலும் இக்குழுவின் பணிகளாக அமையும்.

## சிறுசேமிப்பு பற்றி ஆய்வு நடத்த நிபுணர் குழு

சிறு சேமிப்புத் திட்டங்கள் மற்றும் சேமிப்பை ஊக்குவிக்க வர்த்தக வங்கிகள் மேற்கொண்டுள்ள திட்டங்களை விரிவாக ஆராய்ந்து, தேவையான மாற்றங்கள் பற்றி யோசனைகள் கூறுவதற்காக ஆறு உறுப்பினர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்துள்ளது.

ஆமதாபாத்திலுள்ள இந்திய நிர்வாகப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு சி. ரங்கராஜன் அவர்கள் இந்தக் குழுவின் தலைவராவார்.

மராட்டிய அரசின் செயலாளர் திரு ஆர். பி. சாரி, புதுதில்லி நிதித்துறை இயக்குநர் திரு ஏ. பக்சி, புதுதில்லி ரிசர்வ் வங்கி துணைப் பிரதம அதிகாரி திரு என். பி. ஜெயின், புதுதில்லி அஞ்சல் தந்தி இயக்குநர் அக இயக்குநர் திரு டி. ஈ. ராமன் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள். தேசிய சேமிப்பு இணை ஆணையாளர் உறுப்பினர்-செயலாளராக இருப்பார்.




**ப**ழங்காலத்தில் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தனர். தங்கள் மனத்தில் தோன்றிய கருத்துக்களை இசை வடிவிலும், ஆடல் பாடல்களிலும், நாடகங்கள் வாயிலாகவும், ஓவியங்களாகவும் தோன்றச் செய்தனர். இதனையே கலையென்று சொல்லால் குறித்தனர். செயல் திறமையைக் காட்டுவதும், பொலிவுடன் விளங்கும் வகையில் செய்வதும், சுவை பயக்கும் வகையில் இசைப்பதும் பற்பல காரியங்களுக்கு உதவுவதுமான அறிவையும் ஆற்றலையுமே அவ்வாறு குறிப்பிட்டனர்.

தொழிலில் ஈடுபட்டிருப்போர் உடற்சோர்வை மறந்து ஊக்கம் பெற இசைபாடுகின்றனர். மற்றொரு சாரார் களிப்பூட்ட இசையும், நாடகமும் களியாட்டமும் புரிகின்றனர். தங்கள் உள்ளத்து உணர்ச்சிகளை இலக்கண வரம்பு என்ற கட்டுதிட்டத்திற்கு உட்படுத்தாமல், அதே நேரத்தில் பொருட்செறிவுடனும் நயத்துடனும் இசைக்கப்படும் பாடல்கள் ஆகும் இவை.

இவ்வண்ணம் இசை நுணுக்கங்கள் பெரிதும் இல்லையெனினும், மனத்தைத்தொடுகின்றவகையில் பாடப்பட்டவைகள், கிராமச் சூழ்நிலையில் கிடைத்த வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, நடத்தப்படும் நடனங்கள், நாடகங்கள், கூத்துகள், களியாட்டங்கள் முதலானவற்றைக் கிராமியக் கலைகள் எனலாம். இந்தகைய ஆடல்பாடல்கள் தொன்று தொட்டு, தலைமுறை தலைமுறையாக கிராம மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு அமையப் பெற்றதனால், மக்களின் ஆதரவைப் பெற்று வளர்ந்து வந்துள்ளன.

இக்கிராமியக் கலைகள்தான் நாளடைவில் இலக்கண, இலக்கிய வரம்புகள் பெற்று நுண்கலைகளாக மலர்ச்சியுற்றன. தமிழ் மொழி பழங்காலந்தொட்டே இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாகச் சிறப்பிக்கப்படுகிறது.



மாண்புமிகு
**செய்தி-அறநிலையத் துறை**
அமைச்சர்
**திரு ஆர். எம். வீரப்பன்**

தமிழ்நாட்டில் நாட்டுப் பாடல்கள் வாழ்க்கைத்துறை ஒவ்வொன்றிலும் உள்ளன. ஏற்றம் இறைப்போர், வண்டி ஓட்டுவோர், ஓடம் விடுவோர், நாற்று நடுவோர், கட்டடம் கட்டுவோர் மற்றும் திருமணப் பாட்டுகள், தாலாட்டுகள் இசைப்போர், தங்கள் வாழ்க்கை நிலையை ஒட்டிய எல்லா நிகழ்ச்சிகளிலும் பாடப்படுகின்ற பாடல்கள் பல உள்ளன. இறந்த வீட்டில்கூட ஒப்பாரி என்ற நாட்டுப் பாடல்களைக் கேட்கிறோம். இவை பெரிதும் பொருட்செறிவும், இசை நயமும், சில சமயங்களில் கேளிக்கை, வேடிக்கை, நையாண்டி நிறைந்தனவாகவும் இருக்கின்றன.

கிராமியப் பாடல்கள் சிலவற்றிற்குக் குறிப்பிட்ட பெயர்களும் உண்டு. ஆனந்தக் களிப்பு, நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, லாவணி முதலியன இந்த வகைகளைச் சாரும், கும்மி, கோலாட்டம், பொம்மலாட்டம், புரவி, மயில்நடனம், தேவர் ஆட்டம், நிழலாட்டம் முதலியனவும் கிராமச் சூழ்நிலைகளில் ஏற்பட்டவையாகும்.

தமிழ்நாட்டுக்கு மட்டும் பெருமை சேர்க்கக்கூடியது வில்லுப்பாட்டு. இரவு முழுவதும் கிராமங்களில் இசைக்கப்படும் வில்லுப்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் அல்லது புராணக் கதைகளை இசையோடு விளக்குவதாக உள்ளன.

கிராமப்புறங்களில் மேடை இல்லாமல், விரிவான ஆடையலங்காரங்கள் இல்லாமல், சாதாரண வேடம் பூண்டு நடிக்கப்படும் தெருக்கூத்து, புராண இதிகாசக் கதைகளை எடுத்துச் சொல்லும் சிறப்பானதொரு பொழுதுபோக்குச் சாதனமாக இன்றும் பயன்பட்டு வருகிறது.

இவையன்றி, கரகம், காவடி ஒயிலாட்டம், சதிர் ஆட்டம் முதலியனவும் கிராமியக் கலைகளேயாகும். காலட்சேப விரிவுரைகள் மக்களால் பெரிதும் விரும்பப்படும் கலையாகும். இதன் பாட்டும் கதையும் மக்களைப் பெரிதும் ஈர்க்கின்றன. மக்களுக்கு நல்ல அறிவுரைகளைப் புகட்ட இம்முறை பெரிதும் உதவுகின்றது.

கிராமங்களில் போற்றிப் பாராட்டி விரும்பப்படும் ஒரு விளையாட்டுச் சிலம்பம், கோவில் திருவிழாக்களிலும், திருமணங்களிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் சிலம்ப விளையாட்டு நடைபெறுகிறது. இக்கலையில் தேர்ச்சி பெற, இளைஞர்கள், குறிப்பாக



கிராம மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். திறமை மிக்க சிலம்ப ஆட்டக்காரர்களைப் போற்றிப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. ஒரு வீரனுக்கு உள்ள மரியாதை இவர்களுக்குக் கிடைக்கிறது.

ஓவியக் கலையை ஒட்டியதே கோலம் வரையும் கலையுமாகும். வீட்டில் முன்புறம் நாள்தோறும் வெவ்வேறு விதமான கோலங்கள் இடுவதற்குத் தமிழ்ப் பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். விழாக் காலங்களில் கிராமத் தெருவை அடைத்துக் கோலம் இடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது. குறிப்பாகப் பொங்கல் விழாக் காலங்களில் கிராமங்களின் பொலிவைச் சிறப்பிக்கச் செய்வது இத்தகைய கோலங்களேயாகும்.

கலை, கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம்; இன்பம் இதன் பயன். கிராமியக் கலைகள் ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு வாழ்க்கையை இன்பமயமாக மாற்ற, துன்பங்களை மறைக்கப் பயன்பட்டு வருகின்றன. ஓவியம், சிற்பம், நாட்டியம், நாடகம் இவைகளின் பயன்களும் அவ்வாறுதான்-நம் மக்கள் செய்தொழில்களிலும், நெய்த ஆடைகளிலும், கட்டிய கட்டடங்களிலும்கூட கலை அழகு மிளிரச் செய்தனர். மண்பாண்டங்கள், செப்புப் பாத்திரங்கள் ஆகியவைகளையும் அழகுறச் செய்தனர். ஆறுகளைக் கடக்கப் பயன்பட்ட ஓடங்களில்கூட யானை, குதிரை, சிங்கம் போன்ற உருவுங்கள் அமைக்கப்பட்டன. ஊர்ந்து செல்லப் பயன்பட்ட வண்டிகளில் கூட சிற்பக் காட்சிகள் மிளிர்ந்தன. இவ்வாறு வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கலைகள் ஊடுருவியிருந்தன.

சங்ககால இலக்கியங்களில் பாணர் என்றழைக்கப்படும் இசை வல்லுநர்கள், விறலியர் என்னும் ஆடல் பெண்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று கிராமியப் பாடல்களும், ஆடல்களும் நிகழ்த்தினர் என்று அறிகிறோம். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திலிருந்து பல வகைக் கிராமியப் பாடல்களும், நடனங்களும் தமிழகத்தில் இருந்தனவென்று அறிகிறோம். அகநானூறு, புறநானூறு பாடல்களிலிருந்தும் பலவகை கிராமியப் பாடல்கள் இருந்ததை அறிகிறோம். பிற்காலத்தில் தோன்றிய குறவஞ்சி, பள்ளு, தாலாட்டு, அம்மானை முதலியனவும் இவ்வகையின்பாற் பட்டவையேயாகும்.

குலவைப் பாட்டு, உடுக்கு அடித்துப் பாடுதல், தெம்மாங்கு முதலியனவும் கிராமியக் கலைகளாகும்.

மக்களால் போற்றி வளர்க்கப்பட்ட இக்கலைகளில் பல தொடர்ந்து போற்றுவாரும், ஆதரிப்பாருமின்றி நலிந்து வருகின்றன. ஒரு சில கலைகள் மட்டும் இன்றும் மக்களிடையே செல்வாக்கடைந்துள்ளன. இக்கலைகளை, மறைந்து போகாமல், ஆதரவளித்து ஊக்குவிக்கவேண்டியது மக்களுடைய கடமையும், அரசின் பொறுப்பும் ஆகும்.

நம் புராதனக் கலைகள் மறைந்து போகாமல் மீண்டும் தழைத்தல் வேண்டுமென்னும் நோக்கத்துடன்தான் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. கலைகளில் ஈடுபட்டுள்ளோர் நலிந்து போகாமல் காப்பதற்கும், அவர்களுக்கு ஊக்கமளித்துக் கலையை வளர்ப்பதற்கும் என்றே இவ்வமைப்பு செயல்படுகிறது.

சமூகத்தில் இக்கலைஞர்களுக்குச் சீரும் சிறப்பும் கிடைக்க வேண்டுமென்று சிறந்த கலைஞர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் ‘கலைமாமணி’ என்ற விருது அளிக்கப்படுகிறது. இதுவரை 426 கலைஞர்களுக்கு இவ்வாறு விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன. ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலை மேதைகளில் நலிந்த நிலையில் உள்ளவர்களுக்கு ரூ. 1,000 வீதம் பொற்கிழி வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகிறது. அரசு நடத்தும் விருந்துகளிலும், பொருட்காட்சி, குடியரசு தின விழா போன்ற ஏற்பாடுகளிலும் கிராமியக் கூத்து போன்றவைகளுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படும் கலைக்குழுக்களில் இவர்களுக்கும் இடமளிக்கப்படுகிறது.

இக்கலைகள் மறைந்துபடாமலிருக்கவும், கலைஞர்கள் இத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு கௌரவமான வாழ்க்கை நடத்தவும் அரசு மட்டும் உதவியளித்தால் போதாது. மக்களும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். ஆங்காங்கே நடைபெறும் விழாக்கள், திருமணங்கள், மாநாடுகள், கூட்டங்கள், கோவில் திருவிழாக்கள் முதலியவற்றில் அவர்கள் பங்கு கொள்ளுமாறு செய்தும், நிறைவான ஊதியம் அளித்தும் ஊக்குவித்தல் வேண்டும்.

இக்கலைகளைப் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடத்தி நூல் வெளியிடல், புதிய கலைஞர்களை உருவாக்க பயிற்சிப் பள்ளிகள் நடத்துதல், ஏற்கெனவே உள்ள தனியார் பயிற்சி நிலையங்களுக்குப் பண உதவி அளித்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

நாட்டுப் பாடல்களை மக்களிடையே பரப்புவதற்கு அனைத்திந்திய வானொலி பெரும் தொண்டாற்றி வருகிறது என்பது மறுப்பதற்கில்லை. இதைத் தொடர்ந்து விரிவாக்குதல் வேண்டும். அவ்வாறே தொலைக்காட்சி நிலையமும் நாட்டுக் கலைகளை வளர்க்க அத்தகைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல் வேண்டும். பல கிராமங்களில் அந்தந்தப் பகுதிகளுக்கே உரிய கலைகள் உள்ளன.

இவைகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒளிபரப்புதல் வேண்டும். தற்போது அவர்கள் கேட்பாரின்றி ஊக்கமிழந்து, உற்சாகமிழந்து, தக்க வருவாயின்றி அவதிப்படுகின்றனர். அவர்களை நாம் கண்டறிந்து ஊக்குவிக்கத் தவறினோமானால் அக்கலைகள் அவர்களுடன் மாண்டுவிடும். பல கலைகள் அவ்வாறே இன்று ஏட்டில் மட்டும் இருக்கின்றன.

தமிழின் தொன்மையும், தமிழர்கள் சமுதாய வாழ்வும், பண்பாடும் கிராமியக் கலைகளில் மண்டிக் கிடக்கின்றன. அவைகளை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து பேணி வளர்ப்பது நம் அனைவருடைய கடமையாகும்.

(தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திய ஆறாவது கிராமியக் கலை விழாச் சிறப்பு மலரிலிருந்து)

''சுழன்றும்ஏர்ப் பின்னது
உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க உழவுத் தொழிலை விழுமிய தொழிலாக— வாழ்க்கை வழியாகக் கொண்டு உலகம் உய்ய உணவை உற்பத்தி செய்ய உவந்தளிக்கும் உழவர் பெருமக்களே!

கடந்த ஆண்டின் முற்பகுதியில் வறட்சி வாட்டிய போதிலும், பிற்பகுதியில் வரலாறு காணாத புயலும் வெள்ளமும் வெகுவாகச் சேதம் விளைவித்த போதிலும், மனந் தளராமல் கடுமையாக உழைத்து, 84 இலட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து கொடுத்து, தமிழ்நாடு அரசின் இலட்சியம் நிறைவேற ஒத்துழைப்புக் கொடுத்தமைக் காக உங்கள் அனைவருக்கும் முதற் கண் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வளரும் தமிழகம்

தான், வருங்காலத் தலைமுறைகள் நம்மைவிட நிம்மதியாக வாழ்வ தற்கு வழி தேடிக் கொள்ள முடியும்'' என்று அன்றே குறிப் பிட்டார்.

உழவர் பெருமக்களாகிய உங் களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. வருங்காலத் தலை முறைக்காகவும் நாம் உழைக் கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், வழி வழி வருகின்ற தலைமுறைகளுக்காக, நாம் இந்தத் தலைமுறையில் சில சங்கடங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதைத் தேசியக் கடமையாகக் கொள்ளவேண்டும்

உள்ள உழவுத் தொழிலாளர் களின் வயிற்றுக்குச் சோறிட வழிவகை செய்ய வேண்டும்! குழி விழுந்து ஒளியிழந்து போன ஏழை உழவர்களின் கண்களிலே ஒளி பிறக்கச் செய்ய வேண்டும்! வயலையே பஞ்சணை மெத்தை யாகவும், வரப்பையே தலையணை யாகவும், வானத்தையே கூரை யாகவும் கொண்டு வாழ்ந்து வரும் எண்ணற்ற உழவுத் தொழிலாளி களின் குறைகளைத் தீர்க்க வேண்டும். வயிற்றுக்கும் வாய்க் கும் பற்றாத நிலையிலே, வாழ்ந்து வரும் எண்ணற்ற புன்செய் நில உழவர்களின் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டும்!'' என்ற இலட் சியத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உழவர்களின் பிரச்சினை களைத் தீர்க்க முனைந்து வருகி றார்கள்.

கடந்த ஆண்டில் புரட்சித் தலைவரின் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு மேட்டூர் அணையிலிருந்து சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடப்படுமா? காவிரியில் தண்

# தமிழகத்தில் வேளாண்மை மறுமலர்ச்சி



**மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு பி. குழந்தைவேலு**

பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றி, நானும் உங்களைத் ''தமிழகத்தின் பசிப் பிணி மருத்துவர்கள்'' என்று அழைப்பதைக் கடமையாகக் கருதுகின்றேன். நமது முன் னோர்கள் தமிழகத்தின் பசிப் பிணியை மட்டுமல்ல, உலகத்தின் பல பகுதிகளில் அவ்வப்போது நிலவிய பசிப் பிணியையும் தீர்த் துள்ளார்கள்.

ஆகையினால் உழவர் பெருமக் களாகிய உங்களுடைய பொறுப் பும் பெரியது, புகழும் பெரியது! புகழ் பெருகப் பெருக, பொறுப் பும் பெரிதாகிவிடும்! பொறுப்புக் களை ஏற்றுக் கொள்ளும்பொழுது பல சங்கடங்கள் வரக்கூடும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்தே பேரறிஞர் அண்ணா அவர்கள், ''இந்தத் தலைமுறை முழுவதுமே சங்கடத்திற்கு என்றே பிறந்த தலைமுறை என்று சொன்னாலும் தவறு இல்லை. இந்தத் தலைமுறையிலே சங்கடங் களை நாம் தாங்கிக் கொண்டால்

என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

''சிற்றூரும் வரப்பெடுத்த வய
லும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும்
வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்
விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்
லாம் எவரின் தோள்கள்?''

என்று புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்கள் அன்றொரு நாள் வினா வெழுப்பினார். அந்தத் தோள்கள் உங்களின் தோள்கள் —உழவர் பெருமக்களின் தோள் கள்— என்பதைப் புரட்சித் தலைவ ரின் அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவ்வாறு உணர்ந்துள்ளதனா லேயே,' காலமெல்லாம் உழைத்து உழைத்து உருக்குலைந்து, ஓடாகி, கூனிக் குறுகிப் போன ஏழை எளிய உழவர்களை நிமிர்ந்து நடக்கச்செய்யவேண்டும்! வயிறார ஒரு வேளைக் கஞ்சிகூடக் குடிக்க முடியாமல் ஒட்டிய வயிற்றுடன்

ணீர் வருமா? தஞ்சைத் தரணி யில் குறுவைச் சாகுபடி நடை பெறுமா?' என்ற கேள்விக் குறிகள் உங்கள் உள்ளங்களிலெல் லாம் தோன்றின. ''நினைத்ததை முடிப்பவன்'' என்று பெயர் பெற்ற நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பத்தே நாளில் இந்தக் கேள்விக் குறிகளையெல்லாம் ஆச்சரியக் குறிகளாக உரு மாறச் செய்தார்! கர்நாடக முதலமைச்சரைச் சந் தித்து தமிழகத்தின் நிலைமையை எடுத்துக் கூறி, அன்றிரவே கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடச் செய்து உங்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சிவெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தார். புரட்சித் தலைவர், அவர்கள் இம் முயற்சியில் ஈடுபடாதிருந்திருந் தால், சென்ற ஆண்டில் தஞ்சை, திருச்சிமாவட்டங்களில் குறுவைச் சாகுபடி நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகமே. அப்படி சாகுபடி நடைபெறாதிருந்தால், நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்

டிருப்பீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

தமிழகத்தின் நெற் களஞ்சியமாகத் திகழும் தஞ்சை மாவட்டம் காய்ந்துவிடக் கூடாது என்பதற்காகவும்—தமிழக உழவர்களின் நலன் பாதிக்கப்படக் கூடாது, உரிமை பறிக்கப்படக் கூடாது என்பதற்காகவும்—காவிரிப் பிரச்சினையில் என்றென்றும் நிலைத்துப் பயன் தரும் ஒரு நல்ல உடன்பாடு ஏற்படுவதற்காக, நமது புரட்சித் தலைவர் அவர்கள் முயன்று வருகிறார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நல்லெண்ணத்தை நன்கு உணர்ந்து கொண்டுள்ள மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு தேவராஜ் அர்சு அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களும் காவிரிப் பிரச்சினையில் ஒரு சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட உதவி வருகின்றனர்.

கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடி அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் ஆற்று நீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி விட்டு, தமிழகத்தின் வறண்ட பகுதிகளை வளம் கொழிக்கச் செய்வதற்காகப் புரட்சித் தலைவர் முயன்று வருகிறார். இத்திட்டத்தினால் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் வறண்ட பிரதேசங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும். ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர்கள் இத்திட்டத்தினால் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றிட மாண்புமிகு கேரள முதலமைச்சரும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களும் நல்ல ஒத்துழைப்பை மனம் உவந்து அளித்து வருகின்றனர். இதனால் தேசிய ஒருமைப்பாடு வளர்வதற்கும், தமிழகம் வளம் கொழிப்பதற்கும், நமது புரட்சித் தலைவர் அவர்கள் வழிகாட்டியாக விளங்குகின்றார் என்பது தெளிவாகின்றது.

கடந்த ஆண்டில் அதிக மகசூல் தரும் 24 புதிய ரகங்களைத் தமிழ் நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்பு எந்த ஆண்டிலும் இந்த அளவுக்கு இரசாயன உரம் பயன்படுத்தப்படவில்லை என்று பெருமையுடன் கூறத் தக்க அளவிலே கடந்த ஆண்டில் 2.75 இலட்சம் டன் தழைச் சத்து, 0.70 இலட்சம் டன் மணிச் சத்து, 0.80 இலட்சம் டன் சாம்பல் சத்து தரும் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் இரசாயன உரங்களைத் தேவையான காலத்தில்—தேவையான அளவில்—வழங்க தமிழ் நாடு அரசு ஆவன செய்தது என்றால் மிகையாகாது.

கடுமையான மழையினாலும், வெள்ளத்தினாலும், புயலினாலும் பாதிக்கப்பட்ட வேளாண் மக்களுக்கு அரசு இயன்ற வழிகளெல்லாம் துயர் துடைக்கும் பணியாகப் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளது. பல்வேறு நிவாரணப் பணிகளுக்கென ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதுகாறும் 1693 டன் அளவுள்ள வித்துக்கள் சிறு உழவர்களுக்கும், குத்தகைக்காரர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

புயலினால் பாதிக்கப்பட்ட கரும்பு சாகுபடியாளர்கள் 1,363 பேர்களுக்கு ரூபாய் 87,352 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் புயலினால் பாதிக்கப்பட்ட வாழை சாகுபடியாளர்கள் 7,784 பேர்களுக்கு ரூபாய் 5,42,702 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட 5,455 வெற்றிலைக் கொடிக்கால் காரர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 500 வீதம், ரூபாய் 10.23 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு உள்ளது.

புயல்-வெள்ளத்தால் தென்னை மரங்களை இழந்த 24,609 சிறு விவசாயிகளுக்கும், குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூபாய் 2,68,435 செலவில் 98,139 தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

புயல் வெள்ளத்தினால் பூச்சிகளும் நோய்களும் அதிக அளவில் தோன்றிப் பயிர்களை அழிக்க முயன்றதைத் தடுப்பதற்காக, பூச்சிப் பூஞ்சாள மருந்துகளை 25 சத மானிய விலையில் இன்றைய அரசு வழங்கியது. இவ்வாறு மானியம் வழங்கிய வகையில் 31-3-1978 வரை, தமிழ்நாடு அரசுக்கு ரூபாய் 1 கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் மணல் குவிந்து பாழடைந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் நிலங்களை இலவசமாகவும், மற்ற உழவர்களின் நிலங்களை 50 சத மானியத்திலும் சீர்திருத்தம் செய்து கொடுத்து வருகிறது. கடந்த மார்ச்சு மாதம் 31ஆம் தேதி வரை ரூபாய் 1.20 கோடி செலவில் 12,609 ஏக்கரில் குவிந்திருந்த மணல் அகற்றப்பட்டு, சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் விலையை எக்காரணம் கொண்டும் குவிண்டால் ரூபாய் 77க்கு மேல் உயர்த்தக்கூடாது என்று மத்திய அரசு அறிவித்திருந்த போதிலும், நெல் விலைச் சரிவைத் தடுத்து நெல் சாகுபடியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே 1-2-78 முதல் மோட்டா இரக நெல்லை குவிண்டால் ரூபாய் 90 என்றும், நடுத்தர நெல்லை குவிண்டால் ரூபாய் 95 என்றும் வாங்கிடுமாறு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுபடியாகின்ற விலை கொடுக்க வேண்டும் என்பதில் இன்றைய அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. கரும்பில் 8.5 சத சர்க்கரைச் சத்து இருந்தால் டன்னுக்கு ரூபாய் 85 என்று குறைந்த பட்ச விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் தமிழ்நாட்டிலுள்ள 20 சர்க்கரை ஆலைகளிலும் அதற்கதிகமான விலை கொடுக்க தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 10-5-78 அன்று நான்காவது முறையாக விவசாயச் சங்கத் தலைவர்களுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பயனாகப் புரட்சித் தலைவர் அவர்கள் புதிதாகப் பதினைந்து சலுகைகளை அறிவித்துள்ளார்.

ஏழை எளிய சிறுவிவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த மறுநாளே — அதாவது 1-7-77 அன்றே — சிறு விவசாயிகளுக்கான மின்சாரக் கட்டணத்தை 16 காசிலிருந்து 14 காசாகக் குறைத்தார். ஆயினும் விவசாயிகள் திருப்தியடையவில்லை. எனவே, மீண்டும் இதுபற்றிப் பரிசீலனை செய்து விவசாயச் சங்கத் தலைவர்களுடன் ஆலோசனை செய்து, சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 காசாகவும், பெரிய விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 காசாகவும் குறைத்து புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். மற்ற மாநிலங்களைவிட இக்கட்டணம் மிக மிகக் குறைவு. இச்சலுகை 1-6-78 முதல் அமலுக்கு வரும். விவசாயிகளுக்குச் சலுகை அளித்ததன் மூலம் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 6 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும். ஏற்கெனவே மின்சார வாரியத்தின் இழப்பு 42 கோடி ரூபாய். ஆக 48 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது.

மாதந்தோறும் செலுத்த வேண்டிய மீட்டர் வாடகையை ரூபாய் 5லிருந்து 4ஆகக்குறைத்து

புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார். இச்சலுகையும் 1-6-78 முதல் உழவர்களுக்குக் கிடைக்கும். இதனால் மின்சார வாரியத்திற்கு ஆண்டுதோறும் மேலும் 1 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும்.

எல்லாப் பயிர்களையும் சாகுபடி செய்வதற்காக வழங்கப்படும் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சதவிகிதத்தி லிருந்து 10.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு சலுகைகளை அளித்துள்ளதால் தமிழ்நாடு அரசுக்குப் பல கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. ஆயினும் உழவர்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்துள்ள புரட்சித் தலைவர் அவர்கள் அந்த நட்டங்களைப் பொருட்படுத்தாமல் உழவர் களின் நலமே முக்கியமெனக் கருதி இத்தகைய சலுகைகளை அளித்துள்ளார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த 30 ஆண்டுக் கால மாகத் தமிழகத்தில் வேளாண் மைத் துறையும், நீர்ப்பாசனத் துறையும் இரு வேறு அமைச்சர் களின் பொறுப்பிலேயே இயங்கி வந்துள்ளன. வேளாண்மை வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் மிகவும் இன்றியமையாதது. காலத்தில் நீர்த் தேக்கங்களிலிருந்து தண் ணீர் திறந்துவிடப்படாவிட்டால், பருவத்தே பயிர் செய்ய முடி யாது! பருவத்தே பயிர் செய்யா விட்டால் பலனும் எதிர்பார்க் கும் அளவில் இருக்காது. இதை மனத்திற் கொண்டே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையையும், நீர்ப்பாசனத் துறையையும் ஒரே அமைச்சரின் பொறுப்பில் இயங்க ஆணையிட்டுள்ளார். இது ஒரு புரட்சிகரமான முடிவு என்றும், இதனால் பசுமைப் புரட்சி மேலும் தீவிரமடையும் என்றும் பல விவ சாயிகள் பாராட்டிவருகின்றனர்.

பசுமைப் புரட்சிக்குத் தமிழக முதல்வர் அவர்கள் முக்கியத்து வம் அளித்து வருவதால், தமிழ கம் வேளாண்மைத் துறையில் இந்தியாவின் மற்ற மாநிலங்கள் வியக்கும் வகையில் வளர்ந்து வரு கிறது. இவ்வாறு முக்கியத்துவம் அளித்து வருவதாலேயே, கடந்த ஆண்டில் வேளாண்மை உற்பத்தி பெருகியுள்ளது.


வரலாறு காணாத வகையில் வீசிய புயலும், அதனால் ஏற்பட்ட பெரு வெள்ளமும் விளைவித்த சேதத்தினால் நெல் உற்பத்தியில் இரண்டு இலட்சம் டன் அளவிற் கும், இதர பயிர் உற்பத்தியில் ஒரு இலட்சம் டன் அளவிற்கும் இழப்பு ஏற்படுமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், உழ வர் பெருமக்களைக் கண்களெனக் கருதும் புரட்சித் தலைவரின்அரசு, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுத்துக் கொண்ட துணிகர முயற்சியின் காரணமாகவும், தமிழக உழவர் பெருமக்களுக்குத் தமிழக அரசு அளித்த சலுகைகளின் பயனாக வும் 1976-77ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1977-78ஆம் ஆண்டில் 62 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் சராசரியாக ஒரு எக்டேரில் 16.5 கிலோ சத்துள்ள இரசாயன உரங்களே இடப்படுவ தால் ஒரு எக்டேரில் சராசரியாக 1,826 கிலோ அரிசிதான் விளை கிறது. நமது தமிழ்நாட்டில் ஒரு எக்டேரில் சராசரியாக 36.3 கிலோ சத்துள்ள இரசாயன உரங் கள் இடப்படுவதால், தமிழ்நாட் டில் ஒரு எக்டேரில் 2,128 கிலோ அரிசி விளைகிறது. வேளாண்மை யில் பஞ்சாப் மாநிலத்தைக் காட் டிலும் குறைந்த இரசாயன உரம் இட்டு அதிக மகசூல் தமிழகம் பெறுவதற்குப் புரட்சித் தலைவ ரின் அரசு அளிக்கும் ஆக்கமும் —ஊக்கமுமே காரணம். இதி லிருந்து தமிழகம் வளர்ந்து வரு கிறது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி எனத் தெளிவாகத் தெரிகிறது.

''உழுதவன் கணக்குப் பார்த் தால் உழக்கும் மிஞ்சாது'' என்ற நிலைமை இனியும் இருக்கக்கூடாது என்பதற்காக—''மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை'' என்ற நிலைமையை உருவாக்குவதற்காக —நமது புரட்சித் தலைவர் அவர்கள் வேளாண்மைக்கு முத லிடம் அளித்து பசுமைப் புரட்சி யைப் பரப்பிட முயன்று வருகிறார். புரட்சித் தலைவரின் ஆட்சியில் உழவர்களுடைய வாழ்வு வளம் பெறும் என்ற உறுதியைத் தெரி வித்து உழவர் பெருமக்களுடைய நல் ஒத்துழைப்பை வேண்டு கிறேன்.

இவ்வாறு வளர்ந்து வரும் தமி ழகத்தில் விவசாயிகளுக்கு வேண் டிய எல்லாச் சலுகைகளையும் அரசு அளித்த பின்னும் போராட் டம் நடத்துவது, ஆர்ப்பாட்டம் நடத்துவது, பாலங்களை வெடி குண்டு வைத்துத் தகர்ப்பது, பஸ்களைக்கொளுத்துவது, பொதுச் சொத்துக்களுக்குச் சேதத்தை விளைத்துப் பொதுமக்களுக்குத் தொல்லைகள் கொடுப்பது, வளர்ந்து வரும் தமிழகத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும். ஆகை யால், தேச விரோதச் செயல் களில் ஈடுபடுவோரை அரசுக்கு அடையாளம் காட்டி, நல்ல ஒத் துழைப்பை நல்குமாறு விவசாயப் பெருங்குடி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[4—6—78 அன்று சென்னை வானொலியில் ''வளரும் தமிழகம்'' என்ற தலைப்பில் ஆற்றிய உரை]



## முதல்வரின் முத்துக்கள்

நாணயத்தின் ஒரு பக்கம் கலாச்சாரம் என்றால் மறுபக்கம் மொழி.

ஒவ்வொரு கலாச்சாரத்திற் கும் ஓர் எல்லைக்கோடு இருக் கின்றது.

ஒவ்வொரு நாட்டின் மொழியின் வளர்ச்சிக்கு ஏற்பப் பழக்க வழக்கங்கள், தட்பவெப்ப நிலைக்கு ஏற்பக் கலையும், கலாச்சாரமும் இருக்கின்றன. கலாச்சாரம் வளர்ந்தால்தான் பண்பு வளரும்.

* * *

காவியங்களும், காப்பியங் களும் ஒவ்வொரு மனிதனும் எப்படி இருக்க வேண்டும், எப்படி வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்ற நீதி நெறிகளைக் கூறுகின்றன.

ஒவ்வொருவரும் அவைகளில் உள்ள நல்ல கருத்துக்களை எடுத்துக் கொண்டு நன்னெறி யில் செல்கின்ற போக்கினைக் கைக் கொள்ள வேண்டும்.

# சிறு துளி பெரு வெள்ளம்

**"ஒருவர் சேமிப்பதன்மூலம் பிறர் உதவியை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இராது. மற்றும், சேமிப்பு நல்லொழுக்கத்திற்குப் பாதுகாப்பாய் அமைகிறது."**

**— தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்.**

"ஒரு தீமைக்கு இடம்கொடுத்தால், அது இரண்டு குழந்தைகளை அழைத்து வரும்! கொஞ்சம் தேநீர் அல்லது கொஞ்சம் பழச்சாறு ஆகியவற்றை இடை இடையே குடித்து வரலாம் என்றும், சற்றுக் கூடுதலாக விலை மதிப்புள்ள உணவை அருந்தி வரலாம் என்றும், சற்று உயர்ந்த உடைகளை அணியலாம் என்றும், ஓரளவுக்கு நாட்டியம், நாடகங்களைப் பார்த்து வரலாம் என்றும் நீங்கள் ஒருவேளை எண்ணலாம்! இவை பெரிய காரியங்கள் அல்லவென்றும் நீங்கள் கருதலாம். ஆனால் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது நினைவிருக்கட்டும். சின்னச் சின்னச் செலவுகளில் எச்சரிக்கையாக இருங்கள். சிறு துவாரம் இருந்தாலும், அது பெரிய கப்பலை மூழ்கச் செய்துவிடும்!'' என்ற கருத்தில் மேல்நாட்டு அறிஞர் ஒருவர் பேசியிருக்கிறார்.

ஆமாம், சிறுசிறு செலவுகளை-அவசியமற்ற செலவுகளைக் குறைத்து நாம் மிச்சப்படுத்த வேண்டும்.

அவசியமில்லாத பொருள்களை விலைக்கு வாங்கி, ஆடம்பரமாக வாழ்பவன்-விரைவிலேயே இன்றியமையாத பொருள்களையும் விற்க நேரிடும். இப்படிப்பட்ட பலரை நாம் வாழ்க்கையில் சந்தித்து இருக்கிறோம்!

வருவாயை அறிந்து செலவு செய்ய வேண்டும். அதைவிட முக்கியம், ஓரளவாவது சேமிக்க வேண்டும்.

சம்பாதிப்பதையெல்லாம் செலவு செய்பவன், பிச்சையெடுக்க வழி வகுத்துவிட்டான் என்று சொல்லலாம். தங்கத்தை விட்டெறிபவன், செம்பைப் பொறுக்கும்படி நேரிடும் என்ற வெளிநாட்டுப் பழமொழியொன்று என் நினைவுக்கு வருகிறது.

பணத்துக்குச் சிறகுகள் உண்டு! நாம் எச்சரிக்கையாக இல்லாவிட்டால் அது பறந்து போய்விடும்!



**திரு எஸ்.எஸ்.இராஜேந்திரன்**
**மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர்.**

சம்பாதிக்கும்போது, சிக்கனமாக வாழவும், ஓரளவுக்காவது சேமிக்கவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும். சம்பாதிப்பது எல்லாம் செல்வமாகாது— சேமிப்பதுதான் செல்வமாகும்!

இந்த இலட்சியத்தின் அடிப்படையில்தான்-தமிழகத்தில் சிறுசேமிப்பு இயக்கம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே சிறுசேமிப்புத் திட்டம், தமிழகத்தில் விறுவிறுப்பாகவும் வேகமாகவும் அமலாகி வருவதை அனைவரும் அறிவார்கள்.

புரட்சித் தலைவர் அண்ணன் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களைத் தலைவராகக்கொண்ட சிறுசேமிப்பு இயக்கம், புத்துயிர் பெற்றுப் புதுப்பொலிவோடு செயலாற்றி வருவது-எதிரிகளும் ஒப்புக் கொள்ளும் ஓர் உண்மையாகும்.

வெறும் வார்த்தைகளால் அல்ல, அப்பட்டமான புள்ளி விவரங்கள்-இந்த உண்மையைத் தெள்ளத் தெளியக் காட்டி நிற்கின்றன.

சிறுசேமிப்புக்கு 1976-77ஆம் ஆண்டில் நிகர வசூல் 28 கோடியே 44 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் என்றால், 1977-78ஆம் ஆண்டில் 34 கோடியே 9 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு வசூல் 25 சதவிகிதம் அதிகமாகும்!

தபால் நிலைய சேமிப்புக் கணக்கைப் பார்த்தால், இதுவரை இல்லாத அளவுக்கு அதிக வசூலாகியிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் 5 கோடியே 47 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் நிகர வசூலாகியிருக்கிறது.

இந்தியாவிலேயே தமிழகத்திலுள்ள நீலகிரி மாவட்டம் சிறுசேமிப்புத் துறையில், சிறப்பிடம் பெற்றிருக்கிறது. வாழ்க்கையில் பலதரப்பட்டவர்களும் அதிக அளவில் சேமித்ததன் 'காரண



## 1968-ஆம் ஆண்டு சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற சேமிப்புக் கலை விழாச் சிறப்புரை

மாக, அம் மாவட்டத்துக்கு, 'பிஜாத்' என்ற விருதை அளிக்கும்படி, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே முதல் தடவையாக அந்தப் பெரிய விருது, நீலகிரி மாவட்டத்துக்குக் கிடைக்கவிருக்கிறது.

'நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தச் சாதனையைச் செய்ய எந்த முறையைக் கையாண்டாரோ, அந்த முறையை மத்திய அரசு கேட்டு வாங்கி-பிற மாநிலங்களுக்கு அதை அனுப்பி வைத்திருப்பது, நமக்கெல்லாம் பெருமையளிக்கக் கூடியதல்லவா?

தபால் நிலைய சேமிப்பு வங்கி, இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் பெரும் பரிசு பெறுவதற்கான இருவாய்ப்புகளை உங்களுக்கு அளிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

தபால் நிலைய சேமிப்பு வங்கியில் உங்களுக்கு ஏற்கனவே கணக்கிருந்தால், அந்தக் கணக்கில் உள்ள தொகையைக் குறைந்த பட்சம் 200 ரூபாயாகவோ அதற்கு அதிகமாகவோ உயர்த்துங்கள். எந்த நேரத்திலும் இருப்புத் தொகை 200 ரூபாய்க்குக் குறையாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் கணக்கிலுள்ள இருப்புத் தொகை ஏப்ரல் 6 முதல் செப்டம்பர் 30 வரை ரூ. 200-க்குக் குறையாமல் இருந்தால், அடுத்துவரும் சனவரி குலுக்கலில் அது இடம் பெறும். உங்களுடைய கணக்கிலுள்ள இருப்புத்தொகை, அக்டோபர் 6-ந் தேதி முதல் மார்ச் 31 வரை, ரூ. 200-க்குக் குறையாமல் இருந்தால், அடுத்து வரும் ஜூலைக் குலுக்கலில் அது இடம் பெறும்.

இருப்புத் தொகை எப்பொழுதும் ரூ. 200க்குக் குறையாமல் இருந்தால், எல்லாக் குலுக்கல்களிலும் உங்களுடைய கணக்கு இடம் பெறும். உங்களுக்குப் பரிசு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், கணக்கிலுள்ள உங்களுடைய சேமிப்புத் தொகைக்கு, தபால் நிலைய சேமிப்பு வட்டி விகிதப்படி (தற்போது ஆண்டுக்கு 5%) உங்களுக்கு வரிவிலக்குள்ள வட்டி கிடைத்து வரும்.

**பரிசுகள்:**


ஆண்டில் இரண்டு குலுக்கல்கள் உண்டு. ஒவ்வொரு குலுக்கலிலும் ரூ. 20.50 இலட்சம் மதிப்புள்ள 11,116 பரிசுகள் வழங்கப்படுகின்றன.

நீங்கள் பரிசு பெறும் வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளைத் துவக்கலாம். ஆனால் ஒரு தபால் நிலையத்தில் உங்களுக்கு ஒரு கணக்குக்குமேல் இருக்கக்கூடாது. ஒரு நபர் பெயரில் பல்வேறு தபால் நிலையங்களில் உள்ள கணக்குகளில் டெபாசிட் செய்யப்படும் தொகை 25,000 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது.

**31-1-1978 அன்று புதுடில்லியில் நடைபெற்ற 8-வது தபால் நிலைய சேமிப்பு வங்கி பரிசுக் குலுக்கலில், தமிழ்நாட்டில் கோவை அருகே உள்ள கவுண்டன்பாளையம் ராமசாமி நகரைச் சேர்ந்த திரு. வெங்கடேஷ் என்பவருக்கு இரண்டாவது பரிசான ரூ. 50,000 கிடைத்துள்ளது.**

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்ருக் கெடும். —திருக்குறள்.**

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும். —திருக்குறள்.**



இவர் 28-7-1972 முதல் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்தவர். இவர் ரூ. 294 வரை சேர்த்துள்ளார். பரிசு பெற்ற பணத்தை வங்கியில் போட்டு, படிப்பு முடிந்த பின்னர் வியாபாரம் செய்வேன் என்று திரு. வெங்கடேஷ் கூறினார். இவருக்கு 2 சகோதரிகளும் ஒரு தம்பியும் உள்ளனர். இவரது தகப்பனார் பெயர் திரு அனந்த பத்மநாபன். இராஜபாளையத்தில் லைன்மேன் பயிற்சிப் பள்ளி இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வருகிறார்.

**சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம்:**

இது ஓர் எளிதான சேமிப்புத் திட்டமாகும். இந்தத் திட்டம் பணத்தைச் சுலபமாகவும், சுயமாகவும், தானாகவே சேமித்து வைக்கத் துணை புரிகிறது. உங்கள் நிறுவனத்திலுள்ள சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் நீங்கள் சேர்ந்த உடனேயே சம்பளத்திலிருந்து முறையாகத் தொகை கழித்துக் கொள்ளப்படுகிறது. முதலாளியிடம் நீங்கள் கொடுக்கும் அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில், சம்பளத்திலிருந்து சேமிப்புத் தொகையைக் கழித்துக் கொள்ளும் அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஊதிய அளிப்புச் சட்டம், உங்கள் முதலாளிக்கு இந்த அதிகாரத்தை அளிக்கிறது.

சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினராவது மிகவும் எளிதானது. தேசிய சேமிப்புப் பத்திரங்களை வாங்கவோ அல்லது உங்களின் சி. டி. டி./ஆர். டி / டி. டி. கணக்குகளில் டெபாசிட் செய்வதற்கென்றே, உங்களின் சம்பளம் அல்லது ஊதியத்தினின்றும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கழித்துக் கொண்டு, தபால் நிலையத்தினின்றும் பாஸ் புத்தகங்கள் அல்லது பத்திரங்கள் வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளும் அதிகாரப் பத்திரம் ஒன்றை நீங்கள் உங்கள் முதலாளியிடம் தருதல் வேண்டும்.

நீங்கள் செய்யவேண்டியது அவ்வளவே. மற்றவற்றை நிர்வாகத்தினரே செய்து விடுகிறார்கள். ஊதிய அளிப்புச் சட்டத்தின் கீழ், உங்கள் கணக்கில் தான் உங்கள் தொகையை முதலாளி டெபாசிட் செய்ய வேண்டுமாதலால், நீங்கள் செய்யும் சேமிப்புகள் யாவும் பத்திரமாகவே இருக்கும்.

**சிறந்த சம்பளப் பட்டியல் சேமிப்புக் குழுககான அகில இந்திய வெள்ளி சுழற்கோப்பை 1975-76—ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள பர்ன் ஸ்டண்டர்டு கம்பெனி லிமிடெட்டுக்கு, டிசம்பர் 1977-ல் வழங்கப்பட்டது.**

**சஞ்சாயிகா :**

பள்ளி மாணவர்களின் நலனுக்காகப் பள்ளி மாணவர்களாலேயே நடத்தப்படும் சேமிப்பு வங்கிக்குத்தான் 'சஞ்சாயிகா' என்று பெயர். வங்கி மேலாளர், பணம் வழங்கும் எழுத்தர், பெறும் எழுத்தர், கணக்கர் ஆகிய யாவரும் மாணவர்களே. பணத்தை ஒழுங்கான முறையில் சேமிக்கவும், கையாளவும்-சிறுவயதிலேயே கற்றுக் கொள்ளவும் பழக்கப்படுத்திக் கொள்ளவும் இப்பள்ளிச் சேமிப்பு வங்கி உதவுகிறது. மேலும் வங்கித் தொழிலில் சம்பந்தப்பட்ட காசோலை முறை, கொடுக்கல் வாங்கல் முறைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளவும் இவ்வங்கி உதவுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, வருங்காலத்தில் தலைவர்களாகும் பண்பினைச் சிறுவயதிலேயே பெறும் திறனை அளிக்கிறது.

சஞ்சாயிகா நடைமுறையிலுள்ள பள்ளியைச் சார்ந்த எந்த மாணவ மாணவியும் இத்திட்டத்தில் சேரலாம். சஞ்சாயிகாவின் விவகாரங்கள் அனைத்தும் பள்ளியின் முதல்வர் / தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை, இரண்டு ஆசிரியர்கள் மற்றும் இரண்டு மாணவர்கள் அடங்கிய ஒரு நம்பகக் குழுவினரால் நடத்தப்படும். ஆசிரிய மற்றும் மாணவ உறுப்பினர்கள், பள்ளி மாணவ மாணவியரால் ஒரு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக்கூட்டத்துக்குப் பள்ளியின் முதல்வர் தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை தலைமை வகிப்பார். இது குறித்து அவருடைய முடிவே இறுதியானது. நம்பகக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவியில் இருப்பர். அக்குழுவின் அங்கத்தினர் பதவியில் ஏதேனும் காலியாகிவிட்டால், தற்காலிகமாக ஒருவரை நியமிக்க முதல்வர் / தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

1965-ஆம் ஆண்டின் அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள் நிதிகளின் 3-வது விதியினடியில் துணைவிதி 3-ன்படி, பள்ளிக்கு அருகிலுள்ள அஞ்சலக வங்கியில் பள்ளியின் பெயரில் ஒரே ஒரு கணக்கு துவக்கப்பட வேண்டும். சஞ்சாயிகாவின் மூலம் சேர்க்கும் பணத்திற்கு அஞ்சலக வங்கியில் 5 சதவிகிதம் வட்டி அளிக்கப்படும். இவ்வட்டி மாதா மாதம் சேமிப்புத் தொகையின் மீது கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பள்ளியும் இந்தச் சீரிய சேமிப்புத் திட்டத்தைத் துவக்கி, தங்கள் பள்ளி மாணவ மாணவியர் பெருமளவில் சேர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**1975-76-ஆம் ஆண்டில் சஞ்சாயிகா'வில் இந்தியாவிலேயே முதலிடத்தை, ஈரோட்டிலுள்ள கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி பெற்றது. தமிழ்நாடு அரசுச் சார்பில், ஏப்ரல் 1978-ல் அப்பள்ளிக்கு ஒரு கேடயம் வழங்கப்பட்டது.**

சிறுசேமிப்புத் திட்டத்தின் வெற்றிக்கான மாவட்டங்களுக்கு அடிக்கடி நான் சுற்றுப்பயணம் செய்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்து, பேசி, திட்டத்தை வேகம் பெறச் செய்து வருகிறேன்.

பணமில்லாத மனிதன், அம்பு இல்லாத வில்! பையில் கனம் இருந்தால், நெஞ்சில் கனம் அதிகமாகும்! இதை உணர்ந்து சிறிது சிறிதாகச் சேமிக்க வேண்டும்! பலதுளி பெருவெள்ளம்!

ஒவ்வொருவரும் தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியைச் சிறுசேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்து, தங்களது எதிர்காலத்தை வசதியானதாக, வளமிக்கதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# சென்னைப் பல்கலைக் கழகத்தில்

# நூலகக் கல்வி




—ஜி. பட்டாச்சார்யா
தலைவர், நூலகக் கல்வித் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

நூலகக் கல்வி, வேலை வாய்ப்புள்ள கல்வியாகும். பொதுவாக, தொழில் முறைக் கல்வி சம்பந்தப்பட்ட எந்த ஒரு கல்வியும் பெரிதும் வேலைவாய்ப்பையும் திறமையையும் பொறுத்தே இருக்கிறது. அதனால் நூலகக் கல்வியின் வடிவமைப்பும்-வளர்ச்சியும் வேலைவாய்ப்பை அனுசரித்து-தொழில் முறைப் பயிற்சி பெற்ற மனித ஆற்றலைப் பயன்படுத்துவதை அனுசரித்து அமைகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலக வரலாறு ஒரு சரியான-பங்கீடு உள்ள-தேவையை அடிப்படையாகக் கொண்ட - முறையான வளர்ச்சி கொண்டதாகும்.

பொதுவாக நூலக முறையை அடிப்படையாக வைத்து-சட்டம் இயற்றிய முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் கல்வித்துறை நூலகங்கள் (பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம்) மிக அதிக அளவு எண்ணிக்கையில் உள்ளன. உண்மையில், இந்திய நாட்டில், தமிழகம் தான் திறமை பெற்ற-தொழில் முறையில் பயிற்சி பெற்ற-நூலகத்துறை ஊழியர்களையும் தகவல் துறை ஊழியர்களையும் பெற்றுச் சிறப்படைந்திருக்கிறது.

தொழில் முறையில் பயிற்சி பெற்ற நூலக ஊழியர்கள், தகவல் ஊழியர்கள் ஆகியோர் தேவை என்பதை உணர்ந்து-அது விஷயத்தில் போதுமான கவனத்தைச் செலுத்தி வருகிறது சென்னைப் பல்கலைக் கழகம். உண்மையில் இந்தத் துறையில் முன்னணியில் நிற்பதற்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் செய்துவரும் பணிகளை இந்தியா முழுதும் அறிந்து கொண்டிருக்கிறது. பெரும் புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகக் கல்வி வரலாற்றைப் பார்ப்போம்.

1924-ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் தேதி சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகராகப் பொறுப்பேற்று 1945-ஆம் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர் எஸ். ஆர். ரெங்கனாதன் என்னும் பெரியார், நூலகக் கல்வியின் வளர்ச்சிக்காகவும் ஆய்வுக்காகவும் அறக்கட்டளை ஒன்றை 1956-ல் நிறுவி, 1 இலட்ச ரூபாயை சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு நன்கொடையாக அளிக்க முன் வந்தார். அந்த அறக்கட்டளையைச் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது.

1957ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெற்ற பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவின்போது -அப்போதைய துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நூலகக் கல்விக்குரிய சாரதா ரங்கனாதன் பேராசிரியர் பதவியை அறிவித்தார். உண்மையில் அதுதான் 'காமன் வெல்த் நாடு'களில் நூலகக் கல்விக்கு அமைக்கப்பட்ட முதல் பேராசிரியர் பதவி ஆகும். இந்த அறிவிப்பை அமல் செய்வதற்காக 1959ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகம் நூலகத் துறையை உருவாக்கியது. 1960-ஆம் ஆண்டிலே நூலகக் கல்வியில் பட்ட வகுப்பு-பட்டமேற்படிப்பு வகுப்பு ஆகியவற்றிற்குரிய விதிகள், பாடத் திட்டங்கள், பல்கலைக் கழக நிர்வாகிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதே ஆண்டு, 'அக்டோபர் முதல் நாளன்று, மூன்று விரிவுரையாளர்களுடன், பன்னிரண்டு மாணவர்களுடன் நூலகக் கல்வியின் பட்ட வகுப்பு, துவக்கம் செய்யப்பட்டது. திரு டாக்டர் டி.பி. கிருஷ்ணாராவ், சாரதா ரெங்கனாதன் பேராசிரியர் பதவியின் கீழ் முதல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

1960ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகக் கல்வித் துறையின் அமைப்பு-இந்தியாவில் நூலகக் கல்விக்குப் பல்கலைக் கழகம் வழங்கிய சாதனையின் வளர்ச்சியாகவே காணப்பட்டது. உண்மையில் இந்தத் துறையின் அமைப்பு-இந்தியாவில் அமைந்த மூன்றாவது நூலகப் பள்ளியின் விரிவாக்கமாகத் திகழ்ந்தது. 1929-ஆம் ஆண்டில் சென்னை நூலகசங்கத்தால் உருவாக்கப்பட்டிருந்த இந்தப் பள்ளி 1931-ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**இந்தியாவின் முதல் நூலகப் பள்ளி**


இந்தியாவில், முதல் நூலகப் பள்ளி, பரோடா சமஸ்தானத்தில், அதன் மன்னர் சயாஜி ராவ் கெய்க்வாட் என்பவரால் 1911-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. பரோடாவின் நூலகத் துறையின் முதல் இயக்குநராக போர்டன் என்னும் அமெரிக்க நூலகர் நியமிக்கப்பட்டிருந்தார். குறுகிய காலப் பயிற்சி கொண்ட அந்தப் பள்ளி, பட்டதாரி அல்லாத மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது, போர்டன் சில வருடங்கள் கழித்துத் தமது சொந்த நாட்டுக்குப் போய்விட்டதால், குரல்கார் என்பவர் பொறுப்பேற்றார்; அவர், எதிர்பாராது மரணம் அடையவே, அந்தப் பள்ளியும் மூடப்பட்டுவிட்டது.

**இரண்டாவது நூலகப் பள்ளி**

அதன்பின்னர் 1915ஆம் ஆண்டில் லாகூரில் ஆஷாடான் டிக்கின்சன் என்பவரால் நூலகப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டது. இது இந்தியாவின் இரண்டாவது நூலகப் பள்ளி ஆகும். இந்தப் பள்ளி துவக்கப்படும்போது இந்தியா பிரிவினைக்கு உட்படவில்லை. இந்தப் பள்ளியும் குறுகிய காலப் பயிற்சி கொண்டது; பட்டதாரி அல்லாத மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது. 1947ல் இந்தியா பிரிக்கப்பட்டபோது இந்தப் பள்ளி பாகிஸ்தானைச் சேர்ந்துவிட்டது.

**இந்தியாவின் மூன்றாவது நூலகப் பள்ளி.**

1923ஆம் ஆண்டில், மாநிலக் கல்லூரியின் கணிதப்பிரிவில் துணைப் பேராசிரியராக இருந்த திருஎஸ்.ஆர்.ரெங்கநாதன் முதன் முறையாக சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகராக மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டார். 1924-ஆம் ஆண்டு ஜனவரி 3ல் அவர் பல்கலைக் கழக நூலகப் பணியில் சேர்ந்தார். மார்ச் 22ல் நடைபெற்ற கூட்டத்தில் நூலகக் குழு-திரு ரெங்கநாதன்அவர்களின் பணியை உறுதி செய்தது. அவருக்கு நூலக முறைகளிலும் நூலக அமைப்பிலும் பயிற்சி கொடுப்பதற்கும், ஜெர்மன், பிரெஞ்சு மொழிப் பயிற்சி கொடுப்பதற்கும் பல்கலைக் கழகம் தீர்மானம் செய்தது. அந்தத் தீர்மானத்தைப் பல்கலைக் கழக சிண்டிகேட் அனுமதித்தது; அதன்படி, அவர், பயிற்சிக்காக முதலில் இங்கிலாந்துக்கும் பின்னர் அமெரிக்க நாட்டுக்கும் 1924 செப்டம்பர் 1ல் அனுப்பப் பெற்றார். பயிற்சியை முடித்துக் கொண்டு 1925 ஜூலை 20ல் மீண்டும் பல்கலைக் கழகப் பணியை மேற்கொண்டார். விஞ்ஞான முறையில் அமைக்கப்படும் நூலகங்களுக்குரிய துணைக் கருவிகளை அவர் வடிவமைப்புச் செய்தார். பல்கலைக் கழக நூலகத்தைச் சரியானபடி அமைப்பதற்கு அவற்றைப் பயன்படுத்தினார்.




1928ல் சென்னை நூலகச் சங்கத்தை அவர் நிறுவினர். அந்தச் சமயத்தில்—மாநிலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. அந்தக் கல்லூரிகளின் நூலகங்களுக்கெல்லாம் பயிற்சி பெற்ற நூலகர்கள் தேவை என்பது தெளிவாகப் புரிந்தது. இந்தப் பணிக்காக—திரு ரெங்கநாதன் அவர்கள் 1929ல்—இந்தியாவின் மூன்றாவது நூலகப் பள்ளியை—சென்னை நூலகச் சங்கத்தின் ஆதரவுடன் நிறுவினர். கோடைக் காலத்தில் மூன்று மாதப் பயிற்சி உள்ள சான்றிதழ் வகுப்பை நடத்துவதற்கு இப்பள்ளி தீர்மானித்தது. பல்கலைக் கழகத்தின் ஆய்வு ஆணைக் குழு, பல்வேறு கல்லூரிகளிலும் பயிற்சி பெற்ற நூலகர்களை நியமிக்க வேண்டும் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தது. இதன் விளைவு—சென்னை நூலகச் சங்கத்தின் இந்தப் புதிய பள்ளியில் வகுப்பறைகளை அதிகப்படுத்துவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் முடிவு செய்தது.

1930ல் பல்கலைக் கழகமே—நூலகக் கல்வி நடத்தும் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சிண்டிகேட் முடிவெடுத்தது. இந்த முடிவு முதன் முறையாக 1931ஆம் ஆண்டு கோடைக்கால விடுமுறையில் அமல் செய்யப்பட்டது. அன்று முதல் அந்தப் புதிய பள்ளி—பல்கலைக் கழக நூலகத்தால் நடத்தப்படும் பல்கலைக் கழகப் பள்ளியாகியது.

1937ல்—சான்றிதழ் வகுப்பை—ஓராண்டு டிப்ளமா பயிற்சி கொண்ட பட்ட மேற்படிப்பு வகுப்பாக, நூலகக் கல்வியில் டிப்ளமா பட்டப் படிப்பாக (Diploma in Library Science) மாற்ற சிண்டிகேட் முடிவு செய்தது. இந்தத் திட்டம் 1938 ஜூலை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திரு ரெங்கநாதன் அவர்களால் வடிவமைக்கப்பட்ட சென்னை நூலக மசோதா—1948ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது. 1949 ஜனவரி 20ல்—கவர்னல் ஜெனரலின் அனுமதியைப் பெற்றது. இந்தப் புதிய மாற்றம் ஏற்பட்ட போதிலும் கூட சான்றிதழ்ப் பயிற்சிக்கு ஒருவிதமான வரவேற்பு இருக்கத்தான் செய்தது. அதனால் 1949ல் சான்றிதழ் பயிற்சி வகுப்பை மீண்டும் கொணர முடிவு செய்தது. அதன் விளைவாக 1949ல் இருந்து 1959 வரை, பல்கலைக் கழக நூலகம்—டிப்ளமா பயிற்சியுடன் சான்றிதழ் பயிற்சியையும் ஏககாலத்தில் நடத்தி வந்தது. சான்றிதழ் பயிற்சிக்கு வரவேற்பு அதிகரிக்கத்தொடங்கியது. எனவே 1961ல் இருந்து ஆண்டுக்கு இருமுறை சான்றிதழ் வகுப்பை நடத்தி வந்தது.

1959ல் நூலகக் கல்வித் துறையை நிறுவுவதற்கும் நூலகக்



கல்வி டிப்ளமா வகுப்புக்குப் பதிலாக நூலகக் கல்வியில் இளங்கலை வகுப்பை அமைக்கவும் பல்கலைக் கழகம் முடிவெடுத்தது. இந்தத் திட்டம் 1960ல் முதலில் அமலாகியது. அதன் காரணமாக—ஏற்கெனவே டிப்ளமா பயிற்சி பெற்றுள்ள ஒருவர் மேற்கொண்டு எந்த விதமான பயிற்சிக்கும் செல்லவேண்டிய அவசியமின்றி—நூலகக் கல்வியில் இளங்கலை வகுப்பில் சேர வாய்ப்புத் தரப்பட்டது.

### பட்ட மேற்படிப்பு வகுப்பு

1977-78ஆம் கல்வி ஆண்டிலிருந்து நூலகக் கல்வியில் முதுகலை வகுப்பை அறிமுகம் செய்வது என்று பல்கலைக் கழக அதிகாரிகள் 1977 ஏப்ரல் திங்களில் முடிவெடுத்தனர். அதற்கொப்ப — விதி முறைகளையும் பாடத் திட்டங்களையும் 1977 மே 28ல் கல்வி வாரியம் அனுமதித்தது. பல்கலைக் கழக உறுப்பினர் குழு (சிண்டிகேட்) இவற்றை 1977 ஜூன் திங்களில் அனுமதித்தது. 1977ல் தொடங்கப் பெற்ற அந்தப் பயிற்சி வகுப்பில் 8 மாணவர்கள் இருந்தனர். பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி, ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கூட 4 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

### வருங்கால — கல்வித் திட்டம் எம்.எஸ்சி.. (ஐ.எஸ்) பயிற்சி :

இந்த நூலகத் துறை—தகவல் அறிவியலில் முதுகலைப் பயிற்சி வகுப்பை நடத்த வேண்டும் என்று—டிசம்பர் 21, 1976ல் நடைபெற்ற கூட்டத்தில் கல்வி வாரியம் பரிந்துரை செய்தது. 1977 மார்ச் 2ல் நடைபெற்ற கூட்டத்தில்—பயிற்சிக்குரிய விதி முறைகளுக்கும் பாடத்திட்டங்களுக்கும், அகடமிக் கவுன்சில் அனுமதி அளித்தது. இந்தப் பயிற்சியை நடத்துவதற்கு செனட் 1977 மார்ச் 30ல் ஒப்புக் கொண்டது. ஊழியர் அதிகரிப்புக்குரிய அனுமதி பல்கலைக் கழக மானியக் குழுவினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் துறையில் டாக்டர் ஆய்வுப் பயிற்சிக்குரிய திட்டத்தை 1980ஆம் ஆண்டு மத்தியில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அதற்கு முன்னதாக நூலகக் கல்வியில் எம்.பில் (Master of Philosophy) என்னும் ஆய்வுப் பயிற்சி வகுப்பை 1980ன் துவக்கத்தில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இந்தத் துறையின் சாதனைகள்

நாட்டில் உள்ள நூலகங்கள், மற்றும் தகவல் சேவைகளில் பயிற்சி பெற்ற மனித ஆற்றலை அதிகரிக்கச் செய்தல்.

நூலகத் துறை—தகவல் துறை ஆகியவற்றில் ஆய்வு நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்கள் ஆற்றலை அதிகரிக்க வகை செய்தல்.

நூலகங்களுக்கும் தகவல் அறிவியலுக்கும் தொண்டு செய்தல்.

மேற்சொன்ன சாதனைகளை அடைவதற்காக நூலகத் துறை குறிக்கோளுடன் உருவாக்கிவரும் திட்டங்களாவன

### பயிற்சி வகுப்பு நிகழ்ச்சி

நூலகத் துறைப் பட்ட வகுப்பு (Bachelor of Library Science)

நூலகத் துறை பட்ட மேற்படிப்பு வகுப்பு (Master of Library Science)

தகவல் அறிவியலில் பட்ட மேற்படிப்பு (Master of Science in Information Science)

நூலகம்—தகவல் அறிவியலில் எம்.பில். ஆய்வுப் படிப்பு.

### ஆய்வுத் திட்டங்கள்

1. நூலகக் கல்வியில் பட்ட மேற்படிப்பு, மற்றும் எம்.பில். என்னும் ஆய்வுப் படிப்பு ஆகியவற்றின் ஆராய்ச்சிகளுக்கு வழி காட்டுதல்.

2. நூலகக் கல்வியில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு வழிகாட்டுதல்.

3. நூலகத் துறை— தகவல் அறிவியல் ஆகியவற்றில் தொடர்ந்து ஆய்வு நடத்த வழி வகுத்தல்.

### தொடர் கல்வித் திட்டம்

நூலகக் கல்வி—தகவல் அறிவியல் களத்தில் பங்கு பெறுவோருக்கு வாய்ப்பு அளித்தல்—கலந்து கொள்ளல்.

### கருத்துரை கல்வித் திட்டம்

நூலக—தகவல் அறிவியல் கல்விக்குரிய தகவல்கள்—சேவைகள்— உபகரணங்கள் — நுட்பங்கள் ஆகியவை குறித்துக் கருத்துரை வழங்குதல்—கலந்துரையாடல்.

### வெளியீட்டு நிகழ்ச்சி

இந்த நூலகத் துறையின் மாணவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் பல்கலைக் கழக உறுப்பினர்கள் ஆகியோர் உருவாக்குகின்ற அறிக்கைகள், கட்டுரைகள், ஆய்வுகள் ஆகியவற்றை வெளியிடுதல்.

### பட்ட வளர்ச்சித் திட்டம்

பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் அவரது தொழில் திறமை — கலைத் திறமை ஆகியவற்றில் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பளித்தல்.

நூலகத் துறைக்கு நல்ல வரவேற்பு ஏற்படுவதால் நூலக—தகவல் அறிவியல் களத்தில் 'தொடர் ஆராய்ச்சி' நிகழ்ச்சியைச் சென்னைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் இந்தத் துறையின் வெளியீடானடெலிசம் (DELISUM) அறிக்கைத் தொடரில் வெளியிடப்பட்டு வருகிறது.

இவ்வாறு சென்னைப் பல்கலைக் கழகம் நூலகக் கல்வியில் மாபெரும் சாதனைகளை நிறைவேற்ற—பெரும் தொண்டு செய்து வருகிறது.



# ஒரு ஸ்டெத்தாஸ்கோப் கட்டடம் கட்டுகிறது!

ஏய்! மேரி! செங்கல் அனுப்பு!' ராஜுவின் குரல் கட்டடத்தின் மேலிருந்து ஒலித்தது!

பாவம்! ராஜு கோடை விடுமுறைக்கு நாக்பூருக்குப் போய் இருந்தால், இந்நேரம் கமலா ஆரஞ்சை முழுசா உள்ளே தள்ளிட்டு இருப்பார்!

''இந்தா மேரி, லீலா, சுசீலி, எல்சி என்று பெயரை அடுக்கிக் கொண்டே போன தேவதாசை, ''என்ன அன்னக்கிளி ஞாபகத்தில் பெயரை அடுக்கிகிட்டே போறே! பிடி சிமெண்டை'' என்று கையில் சிமிண்ட் சட்டியைப் போட்டு மடக்குகிறது மங்கையர் கூட்டம்!

இடம் திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தைச் சேர்ந்த மாயனூர்கிராமம்!

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடத்தில் எழுந்துள்ள புது நகர் — கஸ்தூரிபாய் நகர் என்று மேதகு ஆளுநரால் 27-5-78 அன்று பெயர் சூட்டப் பெற்றது. அந்தக் குடியிருப்பிலுள்ள மக்களுக்காகச் சமூக நலக் கூடம் கட்டுகின்றனர், மருத்துவக் கல்லூரி மாணவ-மாணவிகள்! அனைவருமே வேலூர் சி.எம்.சி. மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்!

உடையில் மட்டுமல்லாமல் உழைப்பிலும் ஆண்களுக்கு நிகரர்கப் பணியாற்றுகின்றனர், மாணவியர். மண்டையைப் பிளக்கும் வெயிலில் எந்த வித வசதியுமில்லாத அந்தக் கிராமத்தில் சமூகப் பணியாற்ற வந்த அவர்களது உள்ளம் பாராட்டுதற்குரியது. கல்லூரி முதல்வர் திரு. உம்மன் அவர்களது தலைமையில் இப் பணி சிறப்புற நடைபெற்றது. முதல்வரும் அரைக்கால் சட்டை அணிந்து, அவர்களுடன் சேர்ந்து சாந்துச் சட்டியைத் தூக்கிக் கொண்டிருந்தார்!

அவரைப் பேட்டி கண்டோம்:

கேள்வி : மாயனூர் பகுதிக்குச் சமூக சேவைக்கு இப்போதுதான் வந்திருக்கிறீர்களா?

முதல்வர் : இல்லை! ஏற்கெனவே மூன்று முறை வந்தோம். இது நாலாவது தடவை. முதலில் வெள்ளத்தினால் பாதித்ததும் வந்தோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவினோம். குடிசைகளைத் தற்காலிகமாகக் கட்டிக் கொடுத்தோம்.

இரண்டாவது முறையாக மருந்துகள் கொடுக்க வந்தோம். பின், இந்தப் பகுதியெல்லாம் முள் செடியாக இருந்தது. அவற்றை வெட்டி யெறிந்து கட்டடம் எழுப்ப வசதி செய்து கொடுத்தோம். நாலாவது முறையாக

## மாணவர்கள் முன்னேற....

“மாணவர் சமுதாயம் தனி மனிதரின் சுயநலத்திற்கு இடம் தரக்கூடாது. மாணவர் அனைவரும் ஒன்றுபட்டு, கட்சி வேறுபாடின்றி மனித நல்வாழ்வே குறிக்கோள் என்று ஒற்றுமையாக வாழ வேண்டும். மாணவப் பருவத்தில் சிந்தனைகள் பல வழிகளிலும் செல்வது உண்டு. இளங்கன்று பயமறியாது என்பதைப் போல இலட்சியங்கள் தெரியமே தவிர, அவற்றை வெளிப்படுத்தும் முறைகள் ஒழுங்காக வரையறுப்பது மாணவப் பருவத்தில் சிறப்பு மிக்கதொன்றாகும். இதைப் பயன்படுத்தி வெளியில் இருக்கும் அரசியல் வாதிகளால் சுயநல நோக்கத்தால் மாணவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தூண்டப்படலாம். அதற்கு மாணவர் சமுதாயம் வளைந்து கொடுக்கக்கூடாது. பலியாகி விடவும் கூடாது. மாணவர்களுக்குள் பிளவு ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. பிளவைப் பயன்படுத்தி வெளியார் தலையீட்டை அனுமதிக்கக் கூடாது. மாணவச் சமுதாயம் பிளவுபட்டால் மாணவர்களின் முன்னேற்ற வாசல்கள் அடைபட்டுவிடும்''.

[மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30-4-'78--ல் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]

இப்போது வந்திருக்கிறோம். நாங்கள் இங்கு வர வேண்டும் என்று கரூர் உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு விடுத்தார். இந்தப் பகுதி வட்டார வளர்ச்சி அலுவலர் எங்களுக்கு இப்பணியில் மிகுந்த ஆர்வமூட்டி வருகிறார்.

கேள்வி : இப்போது எத்தனை பேர் வந்துள்ளீர்கள்?

முதல்வர் : மொத்தம் 25 பேர் கல்லூரிப் பேருந்தில் வேலூரிலிருந்து வந்திருக்கிறோம். அதில் 7 பேர் மாணவிகள். சிலர் நர்ஸ் பயிற்சி பெறுபவர்கள். சிலர் மருத்துவக் கல்லூரி மாணவிகள். 12 மாணவர்கள், 6 பேர் கல்லூரி அலுவலர்கள், நான், தச்சர்கள் 3, 1 மேஸ்திரி, 1 சமையல்காரர்.

கேள்வி: உடலுழைப்பு மட்டும் தான் உங்களுடையதா?

முதல்வர் : இந்தக் குடியிருப்பு "காசா" நிறுவனத்தினரின் உதவியோடு கட்டப்பட்டது. இந்தச் சமூகக் கூடம்—நாங்கள் இப்போது கட்டுவது — முழுக்க எங்களது உதவி. சி.எம்.சி. கல்லூரி ஊழியர்கள் அனைவரும் ஒரு நாள் சம்பளத்தைத் தந்தோம். அந்த வகையில் ரூ. 15,000 கிடைத்தது. "வேர்லட்விஷன்" என்ற நிறுவனத்தார் ரூ. 10,000 நன்கொடை கொடுத்தனர். அதை வைத்து எங்களது உழைப்புடன் இதனைக் கட்டுகிறோம். சுமார் 800 சதுர அடி அளவில் இந்தச் சமூகக் கூடம் இருக்கும். ஒரு வாரத்தில் வேலை முடிந்துவிடும். மருத்துவப் பரிசோதனை, முதியோர் கல்வி, குடியிருப்போர்களின் குடும்ப விழாக்கள், திருமணங்கள் ஆகியவற்றை இங்கு நடத்தலாம்.

கேள்வி : எங்கு தங்கியிருக்கிறீர்கள்?

முதல்வர் : ஓ! அதுதான் முக்கியம்! நாங்கள் இங்கேயே இந்த மக்களுடனே ஒரு வீட்டில் வாழ்கிறோம். வாருங்கள்! காட்டுகிறேன்.

(எங்களை அழைத்துச் சென்று காட்டுகிறார். அப்போது காலை மணி 9. உணவிற்கான இடைவேளை. மாணவ மாணவியர் அவசர, அவசரமாக உணவை உண்கின்றனர். முதல்வர் தொடர்கிறார்).

வெளியிடங்களில் தங்கியிருந்தால் இந்த மக்களின் கஷ்டநஷ்டங்களை உணர முடியாது. அதனால்தான் அவர்களிடமே கேட்டு, ஒரு வீட்டை ஒரு வாரத்திற்குக் காலி செய்து அங்கு குடியிருக்கிறோம். இங்கு உள்ள பண்டகசாலைதான் எங்கள் சமையற்கூடம். சாப்பாட்டு இடம்.

கேள்வி : மாணவியர் இதனை விரும்பிச் செய்கிறார்களா?

முதல்வர் : விருப்பம் உள்ளவர்களைத்தான் அழைத்து வந்திருக்கிறோம். வெயில்தான் மிகவும் அதிகமாயுள்ளது. எனவே, காலை 6 மணி முதல் 11 மணி வரை வேலை செய்கிறார்கள். இடையில் 9 மணிக்குக் காலை உணவு. பின்பு மாலையில் 4 மணி முதல் 6 மணி வரை சிற்றுண்டி.

இங்கு பக்கத்தில் ஆறு ஓடுவது வரப்பிரசாதம். ஆனந்தமாக ஆற்றில் குளித்தால் களைப்பு பறந்தோடி விடுகிறது! இதற்குள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாணவ மாணவியர் வருகின்றனர்.

மாணவர் ராஜு வடநாட்டினைச் சேர்ந்த நாகபுரியிலிருந்து வந்து படிக்கிறார். சம்பத் ஊட்டியைச் சேர்ந்தவர். தேவதாஸ் தூத்துக்குடி. மேரி, கல்லூரி முதல்வரின் மகள். கேரளத்தைச் சேர்ந்தவர்.

கேள்வி : மேரி! நீங்கள் படித்து முடித்தபின் கிராமத்தில் வேலை செய்யச் செல்வீர்களா அல்லது நகரத்தில்தான் வேலை பார்க்க விருப்பமா?


மேரி : எங்கள் கல்லூரி விதிப்படி நாங்கள் கட்டாயம் 2ஆண்டுகள் கிராமத்தில் பணியாற்ற வேண்டும். நான் கல்லூரி அலுவலரின் மகளானதால் நிர்வாகத்தினரே எனது கல்வியை ஏற்று நடத்துகிறார்கள். எனவே, அவர்கள் குறிப்பிடும் இடத்திற்குச் செல்வேன். இது எனக்கு எம்.பி.பி.எஸ். கடைசி ஆண்டு. அநேகமாக மதுரை அருகே ஒட்டன் சத்திரத்துக்கு என்னை அனுப்புவார்கள்.

கேள்வி : தேவதாஸ்...... நீங்கள்?

தேவதாஸ்: எனக்கு இது 4வது ஆண்டு. இன்னும் ஓராண்டு படிக்க வேண்டும். இருப்பினும் ஏற்கெனவே ஊரைத் தேர்ந்தெடுத்துவிட்டேன். நெல்லை மாவட்டத்தில் நாசரேத் என்ற ஊர் உள்ளது. அங்கு தூய லூர்து மருத்துவ மனை இருக்கிறது. அங்கு வேலைக்கு அமர்வேன். இரண்டு ஆண்டு மட்டுமல்ல! வாழ்நாள் முழுவதும் அந்தக் கிராமத்திலேயே பணியாற்ற விரும்புகிறேன்.

கேள்வி : சம்பத்! நீங்கள் எந்தக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள்?


சம்பத் : இன்னும் முடிவாகவில்லை. கோயம்புத்தூர் அருகே ஏதாவது ஒரு கிராமத்திற்குச் செல்வேன்.



அதற்குள் 'வெயில் ஏறுகிறது' என்று மேஸ்திரி குரல் கொடுக்கிறார். மாணவ மணிகள் உற்சாகமாக ஓடுகின்றனர். ஆக்கப் பணி தொடர்கிறது! சமூகக் கூடம் உருவாகிறது. அது மட்டுமா...? அந்தப் பணியின் பின்னணியில் ஒரு புதிய சமுதாயமே—தொண்டுள்ளம் படைத்த மாணவர் சமுதாயம்—ஆற்றல் மிக்க அறிவுப் படை நம் கண்முன்னே தெரிகிறது!

சீரிய
நல்வாழ்வுத்
திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 4000
கிராமங்களில் குடிநீர் வசதி செய்து
கொடுக்க உதவிடுங்கள்.




# வாங்கிடுவீர்!
# தமிழ்நாடு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசைக்கும்
2 முதல் பரிசுகள்
ரூ. **50,000** வீதம்

3 இரண்டாம் பரிசுகள்
ரூ. **10,000** வீதம்

மற்றும் ஆறுதல் பரிசுகளும்
ஏராளமான இதர பரிசுகளும் உண்டு!

ஒவ்வொரு வரிசைக்கும்
மொத்தப் பரிசுகள்: 2655

ஒவ்வொரு வரிசைக்கும்
மொத்தப்பரிசுத்
தொகை: ரூ. 3,90,000

மூன்று வரிசைகள்: BO. BP, BQ.

**குலுக்கல் நாள்:**
**20-6-78**

**பரிசுச் சீட்டின் விலை**
**ரூ. 1/- மட்டுமே**

வெளியீடு:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# பாவையர்க்கோர் பல்தொழில் பயிலகம்



சீவி முடித்துச் சிங்காரித்துக் கொள்ள யாருக்குத்தான் ஆசை வராது?

அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள உதவ முன் வருகிறது ஒரு 'பாலிடெக்னிக்'!

''எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்'' என்பார்கள். அந்தச் சிரசுக்கு—தலைக்குக் கூந்தலே அழகு தருகிறது அல்லவா? அந்த அழகுக்கு அழகூட்டும் வகையில் அமைவதுதான் கூந்தல் அலங்காரம்!

நாகரிகம் தலைவிரித்தாடும் இன்றைய உலகில் எத்தனை விதமான தலையலங்காரங்கள்! பெண்களின் கொண்டைகள், பின்னல்கள், எத்தனை வகை! எத்தனை வகை!

**பல்தொழில் பயிலகம் :**

சீவி முடிக்க ஒரு 'பாலிடெக்னிக்'கா என்பீர்கள். ஆம். எதையும் அழகுணர்ச்சியோடு, முறையோடு செய்ய வேண்டாமா? அதைக் கற்றுக் கொடுக்கிறது சென்னை அடையாற்றிலுள்ள அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகம் ( Govt. Polytechnic for Women )

இங்கே தலையலங்காரம் மட்டுமா கற்பிக்கப்படுகின்றது?

கட்டடக் கலை முதல் தையற் கலை வரை கற்பிக்கப்படுகின்றதே!

**மிகப் பெரியது !**

தமிழ்நாட்டில் இம்மாதிரியான பல்தொழில் பயிலகங்கள் பல உள்ளன. கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் ஆடவர், மகளிருக்கென தனித் தனி பல்தொழில் பயிலகங்கள் உள்ளன. திருச்சி, நாகர்கோயில், தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் ஆண்களுக்கு மட்டுமே பல்தொழில் பயிலகங்கள் உள்ளன. இவற்றுள் திருச்சியில் உள்ள பல்தொழில் பயிலகத்தில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய்ப் பயில்கின்றனர்.

இவற்றிலெல்லாம் சென்னையிலுள்ள அரசினர் மகளிர் பல்தொழில் பயிலகமே தமிழ்நாட்டிலேயே மிகப் பெரியது என்பதைப் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

1962-63ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இது, முதலில் சென்னை பிராட்வேயில் இருந்தது. 1963 முதல் இது இப்போதுள்ள அடையாறு 'பாலம் இல்லம்'த்துக்கு ( Bridge House ) மாற்றப்பட்டு மிகச் சிறப்போடு இயங்கி வருகிறது.

**பல துறைகளிலே :**

இங்கு மொத்தம் 514 பெண்கள் பல துறைகளிலே பயிற்சி பெறுகின்றனர்.

கீழ்க்காணும் துறைகளிலே அவர்களுக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. அவை :

1. கட்டடக் கலை (Civil Engineering)
2. கட்டடக் கலைத் தொழிலில் உதவியாளர் (Architectural Assistantship)
3. மின்னணுப் பொறியியல் (Electro Engineering)
4. தையற்கலை (Costume Design and Dress making)
5. வணிகக் கலைப் பயிற்சி (Commercial Practice)
6. (Instrument Technology)
7. ஒப்பனைக் கலை (Cosmetology)
8. கம்ப்யூட்டர்— அடிப்படை விஞ்ஞானக் கல்வி (Data Processing Course)

**கட்டட நிபுணர்கள் :**

அதோ! அந்த அழகிய புல்வெளியில் ஆரணங்குகள் பலர்



வருங்காலக் கட்டட நிபுணர்களோ!

கலகலப்புடன் செல்கின்றனர். நில அளவைக் கருவிகளை வைத்துக்கொண்டு, கட்டடங்கள் கட்டுவதற்கான நில அளவுகளைக் கணக்கிடுவதைப் பார்க்கும் போது, வருங்கால கட்டட நிபுணர்கள் இங்கே உருவாகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இப்பயிலகத்தில், இப்பயிற்சிக்கான நில அளவை ஆய்வுக்கூடம் ஒன்று உள்ளது. சாலை, கட்டடம், அணைக்கட்டு போன்ற வேலைகளுக்கு நில அளவை ஒரு முக்கிய மான பகுதியாகும். இது சம்பந்தமான இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நில அளவைக் கருவிகள் இங்குள்ளன.

**கல்விச் சுற்றுலா :**

ஆண்டுதோறும் நில அளவைப் பயிற்சிக்கான முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த முகாம்கள் 2 வாரக் கால அளவுக்கு நடக்கும். கடந்த ஆண்டு இம் மாணவிகள் மாமல்லபுரத்திற்குச் சென்று வந்தனர். இம்மாதிரியான கல்விச் சுற்றுலாக்கள் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் திகழ்கின்றது.


அதோ! ஓர் பெரிய தொழிற்கூடம்!

தச்சு வேலை, கருமார் வேலை, கொல்லு வேலை, மின் இணைப்பு வேலை முதலானவை கற்றுத்தரும் தொழிற்கூடம்தான் அது.

ஒரு மாணவி மரத்தை இழைத்துக்கொண்டிருக்கிறார். ஒரு மாணவி துளையிடும்இயந்திரத்தில் பயிற்சி பெறுகிறார்; இன்னொரு மாணவி கடைசல் இயந்திரத்தின் (Lathe) அருகில் நின்றுகொண்டு ஆசிரியர் சொல்வதைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்.


**வேலை வாய்ப்பு :**

அடுத்த பிரிவுக்குச் செல்கிறோம். அது மின்னணுப் பொறியியல் துறை ( Dept. of Electronic Engineering ) என்று தெரிந்து கொள்கிறோம். இத் துறையில் 30 மாணவிகள் பயில்கின்றவர். இங்குப் பயிற்சி பெற்றவர்களுக்கு வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி ஆகிய வற்றைப் பழுதுபார்க்க நன்கு தெரியும். பயிற்சி முடிந்த மாணவிகளுக்கு, தொலைக்காட்சி நிலையம், வானொலி நிலையம், அஞ்சல் தந்தித் துறை, திருச்சியிலுள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், ஐ.ஐ.டி. ஆகியவற்றில் வேலை வாய்ப்பு உள்ளது.




கடைசல் இயந்திரப் பிரிவில்....

மின்னணுப் பொறியியல் துறையில் மாணவியர்



### அறிவு வளர்ந்திட....

மாணவியரின் அறிவியல் அறிவை வளர்க்கும் வகையில் பௌதிகம், வேதியல் ஆய்வுக் கூடங்களும் இங்கு உள்ளன.

அடுத்து, நாம் செல்வது 'தட்டச்சு மண்டப'த்துக்கு (Typing Hall). இங்கே மாணவிகள் வரிசை வரிசையாக அமர்ந்து தட்டச்சு செய்யும் காட்சியைப் பார்க்கிறோம். தட்டச்சுடன் சுருக்கெழுத்தும் இங்குக் கற்றுத் தரப்படுகிறது. இத்துடன் சிறப்புப் பாடமாக வங்கியியல் (Banking) கற்றுத் தரப்படுகிறது.



தையல் வேலையில் தையலர்

### தையலரின் தையல் வேலை!

'ஆள் பாதி ஆடை பாதி' என்பார்கள். அந்த ஆடைகள் தயாரிப்பதில் பயிற்சி தருகிறது தையற்கலைப் பிரிவு. துணிகளை வெட்டுவதும்; தைப்பதுமாகத் தையலர்கள் பலர் தையல் வேலையில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். தையல் மட்டுமின்றி 'எம்ப்ராய்டரி' வேலையும், துணி, காகிதத்தாலான அழகிய பொம்மைகள் செய்யும் வேலையும் இங்கே கற்றுத் தரப்படுகின்றது.

### கூந்தல் அலங்காரம் :

அங்கே என்ன நடக்கிறது?

ஒரு மாணவிக்குக் கூந்தல் அலங்காரம் செய்வதையும், அதைச் சில மாணவிகள் கண் கொட்டாமல் பார்வையிடுவதையும் பார்க்கிறோம்.



தட்டச்சு மண்டபத்தில்....

பரந்த அந்தக் கூடத்தில் வரிசையாக முகம் பார்க்கும் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. சுவரில் ஒளி விளக்குகள், அழகுச்சாதனங்கள், சுழலும் மெத்தை நாற்காலிகள் இத்தனை வசதியும் கொண்ட கூடம்தான் ஒப்பனைக் கலைப் பிரிவு (Cosmetology)

கூந்தலை எப்படியும் பின்னிக் கொள்ளலாம். அல்லது அள்ளி எடுத்து முடித்துக் கொள்ளலாம். எப்படியும் பின்னிக் கொள்ளலாம் என்பதைவிட, இப்படித்தான் பின்னிக் கொள்ள வேண்டும் என்பதில்தான் அழகு இருக்கிறது. அந்த அழகுணர்ச்சியோடு என்றும் இருக்க வேண்டும் என்றுதான் இப்பிரிவு துணை புரிகிறது.

அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதோ இல்லையோ; முகத்தின் அழகு மேலும் வெளிப்பட கூந்தல் அலங்காரம் கைகொடுத்து உதவுகிறது. (பொய்க் கூந்தல் சில சமயங்களில் நம்மைக் கைவிட்டு விடுவதும் உண்டு!).

அழகுணர்ச்சியோடு, முறையோடு கூந்தலை அழகுபடுத்த இங்குள்ள ஆசிரியைகள் மாணவிகளுக்குப் பயிற்சி தருகிறார்கள்.

### பருமனைக் குறைக்க.....

கூந்தல் அலங்காரம் மட்டும் இன்றி, உடல் அழகைக் கட்டிக் காக்கவும் இங்கே பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பருமனைக் குறைக்க, முகத்தில் பருக்களை நீக்கி ஒளி விடச்செய்ய, சுருக்கங்களைப் போக்கிச் சுடர் விட—எல்லாவற்றுக்கும் இங்கே அதற்கான சாதனங்கள் உள்ளன.

மின்சாரச் சிகிச்சையின் மூலம் முகப் பருக்கள் அகற்றுவதையும், உடல் பருமனை அதற்கான சாதனங்களில் பயிற்சியளிப்பதன் மூலம் போக்குவதையும் நாம் பார்க்கிறோம்.

### ஒப்பற்ற ஒப்பனைக் கலை....

ஒப்பனைக் கலையிலும் இங்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. நாடக, திரைப்படத் தொழில் சம்பந்தமான ஒப்பனைகள் இப்பிரிவில் தக்க ஆசிரியைகளால் கற்றுத் தரப்படுகின்றன. இங்கே பயில்கின்ற மாணவியரைத் தவிர குடும்பப் பெண்களும் இங்கே



சீவிமுடித்துச் சிங்காரித்து....

செலவுக்கெனப் பயிற்சி முடியும் காலம் முழுதுக்கும் மாதம் 50 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்குத் தரப்படுகிறது.


**உதவித் தொகை :**

இங்குப் பயிலும் கல்வித் திறமை படைத்த 50 சதவீத மாணவியருக்கு மாதம் 50 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், இத்தகைய மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,000க்கு மேல் இருக்கக் கூடாது.

உயர் கல்வி இயக்குநராலும், அரிசன நலத் துறை இயக்குநராலும், அரிசன, மலைவாழ் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த



முகத்தில் பரு நீங்கிட மின் சிகிச்சை....



தச்சுத் தொழிலில்....

வந்து பயிற்சி பெறுகின்றனர். ஆனால், இது அவர்களுக்கு ஒரு பகுதி நேரப் பயிற்சி மட்டுமே!

இப்பிரிவில் பயிலும் மாணவியர் இதோடு நின்றுவிடுவதில்லை. வாசனைப் பொருள்களைத் தயாரிக்கும் பயிற்சியும் பெறுகின்றனர்!

**சிறந்த நூலகம்....**

இப்பயிலகத்தில், அழகிய சிறந்த நூலகம் ஒன்று உள்ளது. இதில் பல துறைகள் பற்றிய 9,000 நூல்கள் உள்ளன.

பயிலகத்தோடு இணைந்த விடுதி ஒன்றும் உள்ளது. இதில் 240 பேர் உள்ளனர்.

இங்கு மாணவியர் சங்கம், மாணவியரால் நடத்தப்படும் கூட்டுறவு அங்காடி, சிற்றுண்டி விடுதி ஆகியவையும் உள்ளன.

பொதுவாக, இந்த அரசினர் பல்தொழில் பயிலகத்தில் சேர, பள்ளி இறுதி வகுப்பு வரைப் படித்திருக்க வேண்டும். ஆனால், ஒன்று, இப்பயிலகத்தில் சேருவதற்கு வயது வரம்பு இல்லை. இங்குச்சேர விரும்பும் மாணவியர் அதற்கான விண்ணப்பப் படிவங்களை மே, ஜூன் மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**கடனுதவி :**

ரூ. 2,000க்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ள அரசு ஊழியர்கள், அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோரின் குழந்தைகள் பயில்வதற்கு அரசு வட்டியில்லாமல் கடன் உதவி வழங்கி வருகிறது.

கடன் பெறும் மாணவிகள் ஒவ்வொருவருக்கும் பராமரிப்புச் மாணவியர்களுக்குப் பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, தொழில் பயிற்சியுடன் இணைந்த கல்வியைத்தந்து, நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவியரை நல்லவர்களாக—வல்லவர்களாகத் தயார்ப்படுத்துகிறது இந்தப் பல்தொழில் பயிலகம்.

உடலைக் கட்டாக வைத்துக் கொள்வது முதல் கட்டடக் கலை வரை பயிற்சிகள் தந்து பேரும் புகழும் பெற்று வருகிறது இப்பயிலகம் என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி.

அறிவியல் அரங்கம்


# காந்தம்

**ஜி. சண்முகம்**
**அணு பௌதிகத் துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**


**ப**ண்டைக் காலத்தில், ஆசியா மைனர் என்னும் இடத்தில் 'லோட் ஸ்டோன்' என்னும் ஒரு வகைக் கனிப்பொருள் வெட்டியெடுக்கப்பட்டது. அக்கனிப் பொருள் இரும்புக்கனிகளை ஈர்க்கும் தன்மையைப் பெற்றிருந்தது. மேலும், தன்னிச்சையாக அசையுமாறு அது தொங்க விடப்பட்டபோது, அதன் ஒரு முனை எப்போதும் வடக்கையும் மறுமுனை தெற்கையும் நோக்கியே இருந்தது. 'லோட் ஸ்டோன்' பெற்றிருக்கும் இப்பண்புகள் இரண்டையும் பெற்றுள்ள எந்தவொரு பொருளையும் 'காந்தம்' என அழைக்கிறோம். நாம் லோட் ஸ்டோன்' போன்று, இயற்கையாகவே, காந்தத் தன்மையைப் பெற்றிருக்கும் பொருட்கள் 'இயற்கைக் காந்தங்கள்' எனப்படுகின்றன. இது தவிர, செயற்கை முறையிலும், காந்தத் தன்மையினைச் சில பொருட்களில் உண்டாக்க முடியும். இவ்வாறு, செயற்கை முறையில் காந்தத் தன்மை பெற்ற பொருட்களே, 'செயற்கைக் காந்தங்கள்' ஆகும். செயற்கைக் காந்தங்கள், சட்ட காந்தம், லாட காந்தம், காந்த ஊசி, குண்டுமுனைக் காந்தம் எனப் பல வடிவங்களில் உருவாக்கப்படுகின்றன. செயற்கைக் காந்தங்களே எல்லா விஷயங்களிலும் பயன்படுவதால், இயற்கைக் காந்தங்களை இப்போது அவ்வளவாகப் பயன்படுத்துவது இல்லை.


இயற்கைக் காந்தத்திற்கும், செயற்கைக் காந்தத்திற்கும் உள்ள பொதுவான குணங்கள் சிலவற்றை இனிக் காண்போம். சட்ட காந்தம் ஒன்றினை இரும்புத் தூளில் வைப்போமானால், அச் சட்டத்தின் இருமுனைகளிலுமே இரும்புத் தூள் அதிகமாக ஈர்க்கப்பட்டிருக்கும். சட்டத்தின் நடுப்பகுதியில் ஈர்ப்புத்திறன் மிகக் குறைவாகவே இருக்கும். இவ்வாறு ஈர்ப்புத்திறன் முழுவதுமே செறிந்திருக்கும் முனைப் பகுதிகளையே 'காந்த முனைகள்' என்கிறோம். காந்த முனைகளைப் புள்ளிகளாகக் கொள்வது மரபு. ஒரு சட்ட காந்தத்தைத் தன்

## மின்னியல் முறையில் காந்தம் உண்டாக்குதல்



னிச்சையாக அசையுமாறு, தொங்கவிடும்போது, அதனுடைய இருமுனைகளில் ஒன்று வடக்கு நோக்கியும் மற்றது தெற்கு நோக்கியும் இருக்குமென முன்னரே கண்டோம். இவ்வாறு வடக்கு நோக்கிய முனையை 'வடமுனை' எனவும், தெற்கு நோக்கிய முனையை 'தென்முனை' எனவும் கூறுகின்றோம். எந்தவொரு காந்தமும், எப்பொழுதும் வடமுனை, தென்முனை ஆகிய இரண்டையும் உடையதாகவே இருக்கும். அவற்றைப் பிரித்து 'தனித்த முனையினைப் பெறுதல் இயலாது. தனித்த முனை என்பது ஏட்டுமுறையில்தான் உண்டேயொழிய, நடைமுறையில் இல்லை என்பது எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும்.




## தற்காலிக (தேனிரும்பு) காந்தம்

இக்கருத்திற்கு மாறாக, சமீப காலத்தில், தனித்த முனையை உண்டாக்கியதாக ஓர் அறிவியற் குழு அறிவித்தது. எனினும் அதன் அறிவிப்பு இன்னும் முற்றிலும் உறுதி செய்யப்படவில்லை. உண்மையிலேயே, தனித்த முனையினைப் பெற முடியுமென நிரூபிக்கப்படின், அவ்வுண்மை அறிவியல் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கும் என்பது உறுதி.

இனி, காந்தத்தின் பண்புகள் சிலவற்றைக் காண்போம். ஒரு சட்ட காந்தம் இரண்டாக முறிக்கப்பட்டால், கிடைக்கும் இரு துண்டுகளும் தனித்தனி காந்தங்களாக மாறுகின்றன. ஒரு காந்தத்தின் முனையை மற்றொரு காந்தத்தின் வடமுனையின் அருகில் கொணரும்போது இரு காந்தங்களும் ஒன்றைவிட்டு ஒன்று விலகுகின்றன. அதுபோன்றே, ஒரு

## காந்தத்தின் பண்புகள்

காந்தத்தின் வடமுனையை, மற்றொரு காந்தத்தின் தென்முனைக்கருகே கொணரும்போது இரு காந்தங்களும் ஒன்றையொன்று ஈர்க்கின்றன. இந்நிகழ்ச்சி, காந்தங்களின் ஒத்த முனைகளுக்கிடையே எதிர்ப்பும், எதிர்முனைகளுக்கிடையே ஈர்ப்பும் ஏற்படுகின்றன என்ற உண்மையினை நமக்குப் புலப்படுத்துகின்றது.

இப்பொழுது, செயற்கைக் காந்தங்களை உண்டாக்கும்முறையினைக் கவனிப்போம். ஓர் எஃகுத்துண்டு காந்தமாக மாறுகின்றது. இதுவே 'தேய்ப்பு முறை' எனப்படும். மற்றும், எஃகுத்துண்டு ஒன்றை, ஓர் இயற்கைக் காந்தத்திற்கருகில் கொணரும்போதே 'தூண்டல் முறையில்' எஃகுத்துண்டில் காந்தசக்தி உண்டாக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர, மின்னியல் முறையிலும், மிக்க ஈர்ப்புச் சக்தி பெற்ற காந்தங்களை உண்டாக்கலாம். இம்முறையில், காந்தமாக்கப்பட வேண்டிய இரும்புத் துண்டு கண்ணாடி அல்லது அட்டையிலான உருளையினுள் வைக்கப்படுகின்றது. பின்னர், உருளையைச் சுற்றிச் சுற்றப்பட்டுள்ள தாமிரக் கம்பியின் வழியே மின்னோட்டம் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு மின்னோட்டத்தைச் செலுத்தும்போது, இரும்புத் துண்டு காந்தமாக மாறுகின்றது. மின்னோட்டம் நிறுத்தப்படின், பெறப்பட்ட காந்தம் இழக்கப்படுகிறது.

இனி, காந்தத்தின் பயன்கள் சிலவற்றைக் காண்போம். இயற்கைக் காந்தங்கள் திசைகாட்டிகளாகவும், டைனமோ, மோட்டார், டெலிபோன், அழைப்பு மணி போன்ற கருவிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கை மின்காந்தங்கள் எடைதூக்கிகளில், கனத்த இரும்புத் தகடுகள், இரும்புப் பொருட்கள் போன்றவற்றைத் தூக்கப் பெரிதும் பயன்படுகின்றன. இது தவிர, மருத்துவத் துறையில், மனித உடலில் சென்றுவிடும் இரும்பு ஆணிகள் போன்றவற்றை உடலிலிருந்து வெளியே எடுக்க செயற்கை மின்காந்தங்களைப் பயன்படுத்துகின்றனர். காந்தச் சக்தியால் புற்றுநோயைக் குணப்படுத்தலாம் என்றும், மனிதனுடைய வாழ்நாளையே அதிகமாக்கலாம் என்றும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, நாம் வாழும் பூமியின் காந்தப் பண்புகளைச் சிறிது பார்ப்போம். நாம் வாழும் இப்பூமி ஒரு மிகப் பெரிய காந்தமாகும். அதன் காந்த தென் துருவம் பூகோள வடதுருவத்திற்கருகிலும், காந்த வட துருவம் பூகோள தென்துருவத்திற்கருகிலும் அமைந்திருக்கின்றன. எனவேதான், ஒரு சட்டக் காந்தத்தைத் தன்னிச்சையாக அசையுமாறு தொங்கவிடும்போது சட்டக் காந்தத்தின் வடதுருவம் பூமிக் காந்தத்தின் தென்துருவத்திற்கருகிலும், சட்டக் காந்தத்தின் தென்துருவம் பூமிக் காந்தத்தின் வடதுருவத்திற்கருகிலும் ஈர்க்கப்படுகின்றன. பூமியின் இப்பண்பே, காந்த திசைகாட்டி மூலமாக, கடலில் பயணம் செய்யும் மாலுமிகளுக்குத் திசையறிய உதவுகிறது. மனிதனுக்கு உதவவிழையும் இயற்கையின் இனிய பண்பிற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டன்றோ!

# சிலப்பதிகாரம் ஒரு சுற்றுலாக் காப்பியம்!

கொண்டல் சு. மகாதேவன்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

சேரன் செங்குட்டுவன் இளங்கோ வேண்மாளுடன் 'சிலம்பு' வளம் காணச் சுற்றுலா மேற்கொண்டு,

''துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும்
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவம்எனப்
பைந்தொடி ஆயமொடு பரந்தொருங்கு ஈண்டி
வஞ்சி முற்றம் நீங்கிய''

செய்தியை நாம் அறிவோம். சுற்றுலா மேற்கொள்பவர்,

''பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பும்
இலங்குநீர்த் துருத்தியும் இளமரக் காவும்''

போன்ற இயற்கையின் எழில்களைச் சுவைப்பதோடு அரிய பல புதுமைகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக—

''கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்''

என்ற செய்தியைக் குன்றத்து வாழும் குறவர் பெருமக்கள் குழுமி வந்து குட்டுவனிடம் கூறுகின்றனர். அருகிலிருந்த தண்டமிழ்ச் சாத்தனுல்,

''ஒண்டொடி மாதர்க்கு உற்றதை எல்லாம்
திண்திறல் வேந்தே செப்பக் கேளாய்''

என்று தொடங்கிப் பூம்புகாரில் பிறந்து மதுரையில் கணவனை இழந்து, சேர நாடு சேர்ந்த கண்ணகியின் வரலாற்றினைப் புள்ளியிட்டுக் காட்டுகின்றார்.

செங்குட்டுவனும் 'நம் அகல் நாடடைந்த பத்தினித் தெய்வத்தைப் பரவல் வேண்டும்' என்ற வேண்மாளின் வேண்டுகோளை ஏற்றுக் கண்ணகிக்குக் கல் கொணர இமயம் நோக்கி மற்றும் ஒரு சுற்றுலாவைத் தொடங்கி விடுகின்றான்; ஆங்கு உடனிருந்த இளங்கோ அடிகளாரோ சாத்தனார் இட்ட புள்ளிகளை அடியாகக் கொண்டு,

''சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்''

என்று, நெஞ்சை அள்ளும் வகையில் ஒரு சுற்றுலாக் கோலத்தை நீள் நிலத்தோர் மனமகிழ நிரந்தரமாக வரைந்து விட்டார். ஆம். சிலம்பு வளம் காணச் சென்ற இடத்தில் சிலம்புச் செல்வம் தட்டுப்பட்டது!

**பூம்புகார் காண்குதும்; பூம்புகார் காண்குதும்!!**

வடதிசை இமயத்திலே தன் காதலியுடன் காமக் கடவுளுக்கு விழா எடுத்து மகிழும் விஞ்சையன் ஒருவன் தன் உள்ளத்தால்,

''தென்திசை மருங்கின்ஓர் செழும்பதி தன்னுள்
இந்திர விழவுகொண்டு எடுக்கும் நாள்இது என்று''

உணர்கின்றான். சுற்றுலா உணர்வு மிக்க அந்த எழில் அழகன் தன் கருங்கயல் நெடுங்கண் காதலியையும் அழைத்துக்கொண்டு தென் திசை நோக்கிப் புறப்பட்டு விடுகின்றான்.

''சிமயத்து இமயமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத்து அடவியும்
வேங்கட மலையும் தாங்கா விளையுள்
காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங்கு எய்திக்''

கண் பெற்ற பயனை எய்துகின்றான்! பூம்புகாரில் உலகப் பெரு அதிசயங்களாக உள்ள பூதச் சதுக்கத்தையும், ஐவகை மன்றங்களின் அமைதியையும் காதலியுடன் கண்டு களித்ததோடு சிலப்பதிகாரத்தின் சிறந்த பாத்திரமாக அமைய இருக்கும் மாதவியை மனத்துள் எண்ணி,

''ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்கா ளாகி
மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவள்எனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
அங்கரவு அல்குல் ஆடலும் காண்குதும்''

என ஆர்வத்துடன் கூறுகின்றான். மாந்தளிர் மேனி மாதவியின் பதினோராடலும் பாட்டின் பகுதியும் கண்டும் கேட்டும் மகிழ்ந்த நிலையில்

''தாதவிழ் பூம்பொழில் இருந்துயான் கூறிய
மாதவி மரபின் மாதவி இவளென''

மீண்டும் ஒரு முறை தனது காதலிக்கு நினைவூட்டிச் சுற்றுலாப் பயணைச் சுவைக்கின்றான்.

**மாடமதுரை அகத்துச் சென்று . . .**

விஞ்சையனது சுற்றுலாவினால் மாதவியின் பழம்பெருமையை அறியும் நாம், கடலாட்டிற்குப் பின்னர், கானல் வரி கேட்டு உளம் திரிந்து அவளுடன் மாறுபட்டுக் கண்ணகியிடம் போந்த கோவலன்,

''சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்த சீர்
மாடமதுரை அகத்துச்சென்று என்னோடு ஈங்கு
ஏடலர் கோதாய் எழுக!

என மதுரையை நோக்கி ஒரு சுற்றுலாவை மனைவியுடன் மேற்கொள்கின்றான் என்பதையும் அறிகின்றோம்! இளங்கோ அடிகளாரும் மேல்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய அப்பகுதிகளைச் சுற்றுலாப் பாணியில் நாடு காண் காதை, காடு காண் காதை, ஊர் காண் காதை என்றே தலைப்பிட்டு விவரிக்கின்றார். 'வான்கண் விழியா வைகறை யாமத்து'

மதுரைப் பயணத்தைத் தொடங்கிய கோவலனும் கண்ணகியும் பூம்புகாரின் நீள்நெடு வாயிலின் நெடுங்கடை கழிந்து, மணிவண்ணன் கோட்டம் வலம் செய்து, இந்திர விகாரம் ஏழுடன் போகி, உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட உலகு உளிச் சிலாதலம் தொழுது வலம் கொண்டு, இலவந்திகையின் எயில் புறம்போகி, காவிரியின் வடகரைப் பொழிலில் புகுந்து, ஒரு காவதம் நடந்து சென்று கவுந்திப் பள்ளிப் பூம்பொழிலைச் சேர்கின்றனர்.

காவதம் நடப்பதற்குள் வழி நடை வருத்தத்தால் சோர்ந்து விட்ட கண்ணகி,

''முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்க
மதுரை மூதூர் யாதென வினவ''

அவள் துன்பங்கண்டு வருந்திய கோவலனும், அவள் துணிவிழந்து விடாமல் இருக்க,

''ஆறைங் காதம்நம் அகல்நாட்டு உம்பர்
நாறைங் கூந்தல், நணித்து என''

முகத்தில் புன்முறுவல் காட்டி முப்பது காவதம் சென்றாக வேண்டும் என்ற உண்மையை ''ஆறு ஐந்து'' காதம் எனச் சிறு சிறு எண்கள் கொண்டு செப்புகின்றான்!

ஆம்! சுற்றுலா மேற்கொள்வோர் வழி வருத்தத்தால் வாடும் உளநிலையைப் போக்க நயமான பேச்சுடன் நகைச் சுவையும் வேண்டப்படுகின்றது!

**கவுந்தி : சிறந்த ஒரு வழிகாட்டி :**


சிலப்பதிகாரத்தைச் சிறந்ததொரு சுற்றுலாக் காப்பியம் எனக் கொள்ளும் வகையில் சிறந்ததொரு வழி காட்டியாக அமைந்து கவுந்தி அடிகள் செயல் படுகின்றார். கண்ணகி கோவலரின் மதுரைச் செலவைக் கேட்ட கவுந்தி அடிகள்.

''தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலின்
போதுவல் யானும், போதுமின்''

என்று புறப்பட்டு விடுகின்றார். சுற்றுலாவைத் தனித்து மேற்கொள்வதிலும் குடும்பத்துடன் அதனை மேற்கொள்வது பயன் தருவதாக இருக்கும். குடும்பத்துக்கு அறிமுகமாகி விட்ட நண்பர் ஒருவர் உடன் வருவது அதனினும் மிக்க பயன் தருவதாக இருக்கும். கண்ணகிக்குத் துணையாகக் கவுந்தி வருகின்ற எதிர்பாராத இந்த நல்ல வாய்ப்பினைப் பெற்ற கோவலனும்,

''கவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி
அடிகள் நீரே அருளுதிர் ஆயின் இனித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேன்''

எனக் கூறித் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றான்.





**அமைதி காத்தலும் அமைதி போற்றலும் :**

சுற்றுலா செல்வோர்தம் உள்ள அமைதி கெடாமலும், சுற்றுச் சூழலின் அமைதியைக் கெடுக்காமலும் பார்த்துக் கொள்வது வழிகாட்டியின் தலையான கடமையாகும். எனவே, கவுந்தி அடிகளும் செல்வோருக்கு ஏதம் தரும் வழிகள் பற்றி எச்சரிக்கை விடுக்கும் வகையில்,

''மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரல்பகை உறுக்கும்''

என்பது போன்ற செய்திகளையும், சுற்றுச் சூழலில் வதியும் பிற உயிரினங்கள் அமைதியைக் கெடுத்து விடக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில்,

''எறிநீர் அடைகரை இயக்கம் தன்னில்
பொறிமான் அலவனும் நந்தும் போற்றாது
ஊழ்அடி ஒதுக்கத்து உறுநோய் காணின்
தாழ்தரும் துன்பம் தாங்கவும் ஒண்ணாது''

என்பது போன்ற செய்திகளையும் அவ்வப்பொழுது எடுத்துரைக்கின்றார். கோவலனும் கண்ணகியும், ''நெறியறிந்து இலக்கண முறைமையின் இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஒரு சுற்றுலாவில்தான்,

''கழனிச் செந்நெல் கரும்புசூழ் மருங்கில்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்கால் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
வெவ்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக் குரல்பரந்த ஓதையும்''

கேட்டு மகிழ முடியும்! அமைதி போற்றத் தவறி ஞலோ, நாம் அங்குச் சென்று சேர்வதற்கு முன் பறவைகள் இடம் பெயர்ந்து இல்லாமற் போய் விடும்!

**பயணிகளின் பாதுகாப்பு :**

சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டும் பொறுப் பினை ஏற்றுக் கொண்டோருக்கு நல்ல வழியினைக் கேட்டறிந்து தேர்ந்தெடுத்துச் செல்வதும் அவர் களின் உயிருக்கும், உடைமைக்கும், மதிப்புக்கும், ஊறு நேராமல் பாதுகாப்பளிப்பதும் தலையாய கடமைகளாகும். கவுந்தி அடிகளும் மாங்காட்டு மறையோன் கூறிய மூன்று வழிகளில் இரண்டினை விலக்கி,

''நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும் பெற்றிஈங் கில்லை
. . . . . . . . . . .
. . . . . . . . . . .
காமுறு தெய்வம் கண்டிட பணிய
நீபோ யாங்களும் நீள்நெறிப் படர்குதும்''

என்று இடைநின்ற செந்நெறியைத் தேர்ந்து செல் கிருர்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர் :**

சுற்றுலாவின் இலக்கண நெறிக்கேற்ப, சிலப்பதி காரமும் பல்வேறு சூழல்களில் வாழும் மக்கள் தம் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டு முறைகளையும் நம்மைக் கண்டு உறவுகொள்ளச் செய்கிறது. பாலை நிலத்திடை,

''இட்டுத்தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலை போகாத் தொல்குடி''

கண்டு வியக்கின்ருேம்! ஊர்ப்புறத்தே,

''ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பா டில்லை''


என்பதனை உணர்ந்து போற்றுகின்ருேம். மலை நாட்டில்,

''குருவிஓப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச்
சென்று வைகி
அருவி ஆடியும் சுனை குடைந்தும் அலவுற்று
வரும்''

குறிஞ்சி மக்கள் பற்றியும் அறிந்து மகிழ்கின்ருேம்!

வாழ்க சிலம்பு! வளர்க சுற்றுலா! !

---




தென்னிந்தியப் படிமங்களுக்குப் புகழ் பெற்றிருக்கும் சென்னை அரசு அருங்காட்சியகம் பொது மக்கள் பார்வைக் கூடங்களிலும் தனிப் பார்வை சேர்க்கையிலும் நல்ல கற்சிற்பங்களைச் சேர்த்துள்ளது. தனிப்பார்வைக்கு உள்ளவை தொல்பொருள் கொட்டகையில் இருக்கின்றன. பொது மக்கள் பார்வைக்காக இவைகளைத் தொல் பொருள் கொட்டகை, திறந்த வெளியில் காட்சிக்கு வைக்கச் சமீப காலத்தில் ஒரு திட்டம் உரு வாக்கப்பட்டது. கடந்த பத்தாண் டுக் காலமாக நம் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் தனியாகக் கிடந்த கற்சிற்பங்கள் கொண்டு வரப்பட்டு, மேலும் அதிகமாக்கப்பட் டன. இவை இதற்குமுன் இருந்த சிற்பங்களுடன் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட் டம், தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகும். இவை சிற்பப் பூங்கா என்ற பெயர் பெற்றது. ஒரு திறந்த வெளிச் சிற்பக் கூடம் அமைக்கப் பெற்று மே முதல் தேதியிலிருந்து பொதுமக்கள் பார்வைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இந்தப் பூங்காவில் 40 சிற் பங்கள் உள்ளன. இவற்றுள் சில மிகப் பழமையானவை; கிடைத் தற்கரியவை - கி.பி. 9-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த வேலூர் யக்ஷியையும் 9-ஆம் நூற்ருண் டின் மதுரை விஷ்ணுவையும் 10-ஆம் நூற்ருண்டுக் குடந்தை துவாரபாலகனையும் 10-ஆம் நூற் ருண்டுச் சோழபுரம் சிற்பங்களையும் 10-ஆம் நூற்ருண்டு மயிலை தலை யற்ற புத்தர்களும் சிறந்தவை எனக் குறிப்பிடலாம்.

இருமொழிப் பெயர்ப்பலகைகள் இச்சிற்பங்களுக்கு வைக்கப்பட்டுள் ளன. பார்வைக்கு அழகை அளிக்க, இடையிடையே பூப்பாத்திகள், பூத் தொட்டிகள், அலங்கரிக்கப்பட்டுள் ளன. இது, அழகுமிகு சிற்பங் களுக்கு மேலும் மனங்கவர் சூழலைத் தருகிறது.

# சேமிப்புக்கு ஒரு பள்ளி

சென்னைத் திருவல்லிக்கேணியிலுள்ள என். கே. டி. ஆண்கள் உயர்நிலைப்பள்ளி!

இந்தப் பள்ளி, அண்மையில் ஒரு கேடயத்தைப் பெற்றுப் பாராட்டுதல்கள் பெற்றுள்ளது. அந்தக் கேடயம்தான்;

'' Bachat Sanchayika Shield ''

இந்தக் கேடயத்தை மாநிலச் சிறுசேமிப்புக் குழு துணைத் தலைவர் திரு எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் இந்தப் பள்ளிக்கு வழங்கினர்.

இப்பள்ளி பெற்ற பெருமைக்குப் பின்னணியில் ஒரு கதையே இருக்கிறது!

''சஞ்சாயிகா' என்ற பெயரில் அழைக்கப்படும் பள்ளி மாணவர்களுக்கான சிறுசேமிப்புத் திட்டம் இந்தப் பள்ளியில் 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் தேதி துவக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி முடிய அதில் 135 மாணவ உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். அப்பொழுது இத்திட்டத்தில் அவர்கள் வைப்புத் தொகை (டெபாசிட்) ரூ. 717.95 ஆகும். பிறகு ஜூன் 1976லிருந்து ஏப்ரல் 77 வரை உறுப்பினர்களின் எண்ணிக்கை 237 ஆகவும், வைப்புத் தொகை ரூ. 1,349.05 ஆகவும் உயர்ந்தது. 1977ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் தேதி சிறு சேமிப்புத் துறையினர் கொண்டாடிய'சஞ்சாயிகா' தினத்தில் வருமானத்தில் பின் தங்கியுள்ள மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த இப்பள்ளியில் பயிலும் இராசேந்திரன் என்ற 9ஆம் வகுப்பு மாணவன் வங்கியில் அதிக வைப்புத் தொகை (ரூ. 171) சேமித்து வைத்ததற்காகப் பாராட்டப் பெற்றான்.

அவ்வமயம்அம்மாணவனுக்குச் சிறு சேமிப்புத் துறையினர் ஒரு வெள்ளிப் பேழையைப் பரிசாகக் கொடுத்தனர்.

'சஞ்சாயிகா' திட்டம் மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்குவதுடன், அவர்களுக்கு மறைமுகமான கல்வி அறிவையும் புகட்டுகிறது.

தற்காலம் பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் தேர்ச்சியடைந்து வரும் மாணவர்கள் பலருக்கு வங்கி நடைமுறைகள் தெரிவதில்லை. வங்கியில் பணம் போடுவதற்கும், பணத்தைப் பெறுவதற்குமான வழி முறைகள் தெரிவதில்லை. அதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்யவும் தெரிவதில்லை. ஆசிரியர்கள் உதவியுடன் பள்ளிகளில் மாணவர்களால் நடத்தப்படும் இந்த வங்கி, இந்த நடைமுறைகளை அவர்கள் அறிந்து கொள்ள உதவுகிறது. மேலும், ஆண்டுதோறும் இவ்வங்கி நடத்தும் பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி இவற்றில் மாணவர்கள் கலந்து கொள்வதால் அவர்களின் இலக்கிய அறிவு பெருகுகிறது.

பள்ளியில் கொண்டு வரப்படும் எந்த ஒரு திட்டமும் சிறந்த முறையில் செயல்பட்டு, வெற்றியடைய அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களே மூல காரணமாவார்கள். அவர்களுடைய தன்னலமற்ற பணியும், ஆர்வமும்தான் இத்திட்டத்தை வெற்றியடையச் செய்யும்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு இப்பள்ளியில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. எல்லா மாணவர்களும் சிறு சேமிப்புத் திட்டத்தில் ஆர்வம் காட்ட முன்வந்தனர். இதன் பயனாக இப்பள்ளியில் உள்ள எல்லா மாணவர்களும் 'சஞ்சாயிகா' வங்கியில் உறுப்பினர்கள் ஆனார்கள்.

ஆரம்பத்தில் 135 உறுப்பினர்களுடன் தொடங்கிய இவ்வங்கி இரண்டு ஆண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று 980 மாணவ உறுப்பினர்களைக் கொண்டதாகவும், ரூ. 4,250 வைப்புத் தொகை கொண்டதாகவும் உள்ளது.

ஆண்டுதோறும் இவ்வங்கி சார்பாகப் பள்ளியில் நடைபெறும் பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி, நாடக நிகழ்ச்சி இவற்றில் வங்கி உறுப்பினர்கள் பங்கு கொண்டு பரிசு பெறுகின்றனர்.

வங்கிக் கணக்கு ஆண்டுதோறும் பள்ளி ஆசிரியை ஒருவரால் தணிக்கை செய்யப்படுகிறது.

இவ்வங்கியில், இவ்வாண்டில் அதிகத் தொகை சேமித்து வைத்துள்ள மாணவன் 8ஆம் வகுப்பைச் சேர்ந்த ராம்மோகன். அவன் சேமித்துள்ள தொகை ரூ. 316.40. அதற்கு அடுத்த படியாக 10ஆம் வகுப்பைச் சேர்ந்த பி. பெருமாள் ரூ. 137.75ம், 11ஆம் வகுப்பைச் சேர்ந்த எஸ். மோகனசுந்தரம் ரூ. 134ம் சேமித்து வைத்துள்ளனர்.

ஆரம்பத்தில் பள்ளி வேளைக்குப் பிறகு வாரத்தில் ஒரு நாள் செயல்பட்ட வங்கி, வாரத்திற்கு 3 நாட்கள் செயல்பட்டது. பிறகு நாள்தோறும் செயல்படும் நடமாடும் வங்கியாக மாறியது.

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாப் பள்ளிகளிலும் வங்கி சிறப்புடன் நடைபெற ஊக்குவிக்கும் வகையில், பள்ளிகளுக்கு (Bachat Sanchayika) கேடயம் வழங்கியும், பள்ளி மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும்,போட்டியையும்உண்டாக்கும் வகையில் ஆண்டுதோறும் சஞ்சாயிகா நாளன்று பரிசுகள் அளித்தும் சேமிப்புத் திட்டம் வெற்றியடையப் பாடுபடுகிறது சிறு சேமிப்புத் துறை என்றால் அது மிகையல்ல!





# சேமிப்பு ஒரு சமய சஞ்சீவி!

திரு. ரா. குழந்தைவேலு, ஐ.ஏ.எஸ்.,
சிறுசேமிப்புத் துறை இயக்குநர்.

“சிறு துளி பெரு வெள்ளம்” என்னும் பழமொழியினை ஓர்ந்து ஒவ்வொருவரும் தங்கள் குடும்பப் பொறுப்புகளையும் வருங்காலத் தேவைகளையும் உணர்ந்து சேமிக்க வேண்டும். சேமிக்க தற்காலத்தில் பல வழிகள் உள்ளன. அவற்றில் தலை சிறந்தது அரசாங்கம் காட்டும் அழகான சிறு சேமிப்புத் திட்டம் ஆகும். அவரவர் வருமானத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப, பல சிறு சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. மேலும் கவர்ச்சியான வட்டி விகிதங்களும், வருமான வரிச் சலுகைகளும் உள்ளன. ‘வீட்டுக்கொரு நல்ல செயல் நாட்டுக்கொரு நல்ல பணி’ என்ற எண்ணத்தோடு கீழே தரப்பட்டுள்ள திட்டங்களில் அவரவருக்கேற்ற சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனடைவோம் :

## அஞ்சலகச் சேமிப்பு வங்கி (வரி கிடையாது)

வங்கிகளில் பழமையானதும் நாட்டில் ஏறக்குறைய எல்லா கிராமங்கள், சிற்றூர்கள், பட்டணங்கள் ஆகியவற்றில் அஞ்சலகங்கள் உள்ள இடங்களிலெல்லாம் அமைக்கப் பெற்றதுமான, இவ் வங்கி மக்கள், பணத்தைப் போடவும் எடுக்கவும் வசதி நிறைந்துள்ளது. ஒரு கணக்கைத் துவக்க ஐந்து ரூபாய் மட்டும் போதுமானது. பிறகு எவ்வளவு தொகை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் சேர்த்து வரலாம். இச்சேமிப்புத் திட்டத்தில் கிடைக்கும் வட்டிக்கு (ஆண்டுக்கு 5 சதவிகிதம்) வருமான வரி கிடையாது என்பதால், தனி நபர் கணக்கில் ரூ. 25,000 வரையிலும் கூட்டாக ரூ. 50,000 வரையிலும் சேமிக்கலாம். பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவை பிராவிடெண்ட் நிதித் தொகைகளை உச்ச வரம்பு ஏதுமின்றி இக்கணக்கில் சேர்க்கலாம்.

கணக்கிலிருந்து விரும்பும் போதெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் எத்தனை முறைகள் வேண்டுமானாலும் பணத்தை எடுக்கலாம். போடலாம். இது குறித்து எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. இதன் மூலம் இதர வங்கிகளில் “கரண்ட் அக்கவுண்ட்” ( Current Account ) என்று சொல்லப்படும் கணக்குப் போல் இருப்பதுடன் 5 சதவிகிதம் வரை வட்டியும் வழங்கப்படுகிறது. (சாதாரணமாக இதர வங்கிகளில் ‘கரண்ட் அக்கௌண்டிற்கு’ அரை சதவிகிதத்திற்கு மேல் வட்டி வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது). “செக்” மூலமாகச் சேமிப்புக் கணக்கில் பணம் பற்று வரவு செய்யும் வசதி பெரும்பாலான அஞ்சல் நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு அளிக்கப்படும் அதே 5 சதவிகித வட்டி, செக் வசதியுடன் கூடிய கணக்குகளுக்கும் கிடைக்கிறது. பெரும் பரிசுகள் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கியில் (தனி நபராகவோ, கூட்டாகவோ கணக்கு வைத்திருப்போர் தங்களுடைய கணக்குகளில் குறைந்த பட்சம் 200 ரூபாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் அவர்களுடைய கணக்குகள் பெரும் பரிசுகளுக்கான குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஒவ்வொரு குலுக்கலுக்கும் கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி ரூ. 20.50 இலட்சத்திற்கான 11,116 பரிசுகள் உண்டு :

ரூ. 1,00,000 பரிசுத் தொகையுள்ள ஒரு முதல் பரிசு—ரூ. 1,00,000

ஒவ்வொன்றும் ரூ. 50,000 பரிசுத் தொகையுள்ள ஐந்து இரண்டாவது பரிசுகள்—ரூ. 2,50,000.

ஒவ்வொன்றும் ரூ. 20,000 பரிசுத் தொகையுள்ள பத்து மூன்றாவது பரிசுகள் ரூ. 2,00,000

ஒவ்வொன்றும் ரூ. 5.000 பரிசுத் தொகையுள்ள நூறு நான்காவது பரிசுகள்—ரூ. 5,00,000.


ஒவ்வொன்றும் ரூ. 500 பரிசுத் தொகையுள்ள ஆயிரம் ஐந்தாவது பரிசுகள்—ரூ. 5,00,000.

ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசுத் தொகையுள்ள பத்தாயிரம் ஆறாவது பரிசுகள்—ரூ. 5,00,000.

மொத்தம்—ரூ. 20,50,000.

## ஓர் ஆண்டில் இரண்டு குலுக்கல்

ஜனவரி குலுக்கலுக்கு ஏப்ரல் 6ஆம் தேதிக்கு முன்னதாகக் கணக்கு துவக்கப்பட்டு, கணக்கில் 200 ரூபாயோ அதற்கு அதிகமான இருப்போ இருக்க வேண்டும். செப்டம்பர் 30ஆம் தேதி வரை



டெபாசிட் தொகை 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

ஜூலைக் குலுக்கலுக்கு, அக்டோபர் 6ஆம் தேதிக்கு முன்னதாகக் கணக்குத் துவக்கப்பட்டு கணக்கில் 200 ரூபாயோ அதற்கு அதிகமான இருப்போ இருக்கவேண்டும். மார்ச் 31ந் தேதி வரை டெபாசிட் தொகை 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

*(மூன்று வகைகள்)*

**அஞ்சலகக் காலவரை வைப்புத் தொகைகள் (வரி உண்டு)**

வருமான வரி செலுத்தாதவர்களுக்கும், குறைந்த விகிதத்தில் வரி செலுத்துவோருக்கும், இத்திட்டம் உகந்ததாக உள்ளது. இதுவும் அஞ்சலக வங்கி மூலமாக இயங்கி வருகிறது.

ரூபாய் 50, ரூ. 100, ரூ. 150 போன்ற 50ன் பெருக்குத் தொகைகளில், ஒன்று இரண்டு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குக் காலவரை வைப்புத் தொகைக்கு உச்ச வரம்பு கிடையாது.

சேமிப்பில் உள்ள பணத்திற்குக் கவர்ச்சிகரமான கீழ்க்கண்ட வட்டி வகிதங்கள் வழங்கப்படுகின்றன :

ஓர் ஆண்டுக் கணக்கிற்கு — 8 சதவிகிதம்.

இரண்டு ஆண்டுக் கணக்கிற்கு —8.5 சதவிகிதம்.

மூன்று ஆண்டுக் கணக்கிற்கு —9 சதவிகிதம்.

ஐந்து ஆண்டுக் கணக்கிற்கு —10 சதவிகிதம்.

வட்டிக்கு வரி விலக்குக் கிடையாது என்றாலும் வட்டி சேரும் இடத்திலேயே வட்டித் தொகையிலிருந்து வரி கழிக்கப்படமாட்டாது. ரூ. 3,000 வரை வட்டித் தொகைகளுக்கு (மற்ற வரி விதிப்பிற்குள்ளாகும் செக்யூரிடிகளில்கிடைக்கும் வட்டியோடு, வருமான வரி விலக்குண்டு.

இவ் வகை வைப்புத் தொகைக் கணக்குகளை அரசுத் துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் அடமானம் வைக்கலாம். நிறுவனங்கள் பிராவிடெண்ட் நிதித் தொகைகளை இத்திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

**அஞ்சலகத் தொடர் வைப்புத் தொகைத் திட்டம் (வரி உண்டு)**
**Post Office Recurring Deposit**

அஞ்சலக வங்கிகளில் கிடைக்கக்கூடிய இப் புதிய திட்டம் வருமான வரி செலுத்தாதவர்களுக்கும், மற்றும் குறைந்த அளவில் வருமான வரி செலுத்துபவர்களுக்கும் ஏற்றதாயுள்ளது. சம்பளப் பட்டியல் திட்டத்தின் மூலமாகவும் சேரக் கூடிய இத்திட்டம், அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில், பணிபுரியும் மாதச் சம்பளம் வாங்குவோருக்கும் உகந்ததாக உள்ளது. பல செலவுகளுக்கிடையே மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையினை எப்படிக் கட்டி வருவது என்ற பிரச்சினைக்கு இடமேயில்லாமல், சம்பளம் வழங்கும் அதிகாரியே அவரவர் குறிப்பிட்ட தொகையினைச் சம்பளத்திலிருந்து பிடித்து அவர் பெயரில் ஒரு கணக்கைத் துவக்கி மாதா மாதம் பணத்தைக் கட்டி வருவார். கால இறுதியில் பாஸ் புத்தகம் அவரவர் கையில் கொடுக்கப்பட்டு, பணத்தை அஞ்சலக வங்கிகளிலிருந்து பெற வசதியுள்ளது.




இது ஒரு ஐந்து ஆண்டுக் கணக்கு. 9.25 சதவிகிதம் உயர் வட்டி அளிக்கப்படும். இத்திட்டத்தில் உங்கள் சேமிப்பு கீழ்க்கண்டவாறு வளருகிறது :

| கட்டும் தொகை | ஐந்து ஆண்டு இறுதியில் கிடைக்கும் தொகை |
|---|---|
| 5 | 380 |
| 10 | 760 |
| 15 | 1,140 |
| 20 | 1,520 |
| 25 | 1,900 |
| 30 | 2,280 |
| 50 | 3,800 |
| 100 | 7,600 |

இத்திட்டத்தில் ரூ. 5ம் அதன் பெருக்குத் தொகைகளிலும் உச்ச வரம்பின்றிச் சேமிக்கலாம். கணக்கைத் துவக்கி ஓராண்டு முடிவடைந்த உடன் சேர்ந்த பணத்தில் பாதித் தொகையைக் கடனாகப் பெறலாம். காலவரையில் ஒரு முறைதான் கடன் பெறலாம். தவறிய தவணைகளை ஐந்து தவணைகள் வரை குறைந்த வட்டியுடன் திருப்பிச் செலுத்தலாம்.

1972 ஜூலை மாதம் 1 முதல் இத்திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு ஒரு தனிச் சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது. இந்தத் தேதிக்குப் பிறகு கணக்கைத் துவக்குபவர்கள், எதிர்பாராத காரணங்களால் இறக்க நேரிடுமானால், ஐந்தாண்டு இறுதியில் அவர்களுக்கு என்ன தொகை (வட்டியுடன்) கிடைக்குமோ அந்தத் தொகை, அவர் நியமித்திருக்கும் வாரிசுக்கு அளிக்கப்படும். இச்சலுகையைப் பெற, சேமிக்கும் நபர் 18 வயதுக்கு மேல், ஆனால், 53 வயது பூர்த்தியாகாமல் இருக்க வேண்டும். கணக்கைத் துவங்கி இரண்டு ஆண்டுகள் முறையாகப் பணம் கட்டி வந்திருக்க வேண்டும். இந்தக் கால வரைக்குள் கடன் வாங்கியிருக்கக் கூடாது. மற்றும் உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும். இச் சலுகை ரூ. 5, 10, 15 மற்றும் 20 கணக்கைத் துவக்குபவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. 5 ஆண்டு 'ரிகரிங் டிபாசிட்' கணக்கில் தவணை முடிவில் கிடைக்கும் தொகையை மேலும் 5 ஆண்டுகளுக்கு அக்கணக்கிலேயே விட்டு வைத்து ஆண்டுக்கு 9.25 சதவிகித வட்டி பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதன்னியில் 5 ஆண்டுக் கணக்கை, தவணை முடிவில் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்து அதே கணக்கில் தொடர்ந்து பணம் செலுத்தி வரவும் வசதியுள்ளது. இவ்வாறு ரூ. 10 கணக்கை 5 ஆண்டுகள் நீடித்து, தொடர்ந்து பணம் செலுத்தி வந்தால், 10ஆம் ஆண்டு முடிவில் ரூ. 1,967.30 திரும்பக் கிடைக்கும்.

அஞ்சலக வளரும் மாதச்சேமிப்பு திட்டம் (Cumulative Time Deposit)

வருமான வரி செலுத்துபவருக்கு ஏற்ற திட்டம் இது. அஞ்சலக வங்கி மூலமாக இயங்கிவரும் இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலமாகச் சேரலாம். ரூ.5ம் அதன் பெருக்குத் தொகைகளிலும், தனி நபர் சேமிப்பாக இருந்தால் இதைப் போல் இருமடங்கு தொகையும் சேமிக்க

லாம். கணக்குகளுக்கான வட்டி விகிதம் வருமாறு :

கணக்கு வகை — 10 ஆண்டு.

தொடர் வட்டி விகிதம்—6.25 சதவிகிதம்.

மாதம் பத்து ரூபாய் செலுத்தினுல் சேமிப்புக் கால முடிவில் கிடைக்கக் கூடிய தொகை— ரூ. 1,650.00.




சேமிப்புக் கால முடிவில் கிடைக்கும் வட்டித் தொகைக்கு வரி கிடையாது என்பது தவிர ஓர் ஆண்டில் செலுத்தப்படும் ஆயுள் இன்சூரன்ஸ் பிரிமியம், பிராவிடெண்ட் நிதித் தொகை ஆகியவற்றுக்கு எவ்வித வருமான வரிச் சலுகை கிடைக்கிறதோ அதே சலுகை ஒரே ஆண்டில் செலுத்தப்படும் வளரும் மாத, சேமிப்பு டெபாசிட் தொகைக்கும் கிடைக்கும். கணக்கைத் துவங்கி ஓராண்டுக் காலம் முடிவடைந்ததும், தேவைப்பட்டால் சேமிப்புத் தொகையில் 50 சதவிகிதம் வரை கடன் வாங்கலாம். இம்மாதிரிக் கடன், பத்து ஆண்டுக் கணக்கில் இரு முறை வாங்கலாம். கடனைச் சுலபத் தவணையில் திருப்பிச் செலுத்த வசதி உள்ளது.

**ஏழு ஆண்டு தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் (4 வகை) 5 ஐந்தாவது) வெளியீடு (வரி உண்டு):**

இது ஒரு ஏழாண்டுப் பத்திரம். ரூ. 10, ரூ. 50, மற்றும் ரூ. 100 வகைகளில் இவைகள் கிடைக்கின்றன. பத்திரங்களை வாங்க உச்ச வரம்பு எதுவும் கிடையாது. இவற்றை அடமானம் வைக்கலாம். முதலீடு செய்யப்பட்ட ரூ. 100, 7ஆம் ஆண்டு முடிவில் ரூ. 200 ஆகத் திரும்பக் கிடைக்கும்.

**4 (நான்காவது) வெளியீடு (வரி உண்டு) :**

இது ஒரு ஏழு ஆண்டுப் பத்திரம். ரூ. 100, ரூ. 1,000 மற்றும் ரூ. 5,000 வகையிலும் இவை கிடைக்கின்றன. ஆண்டுக்கு 10.25 சதவிகிதம் உயர் வட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. பத்திரங்களை வாங்க உச்ச வரம்பும் எதுவும் கிடையாது. இவற்றை அடமானம் வைக்கலாம். பத்திர கால முடிவிற்கு முன் பணமும் தேவைப்பட்டால் மூன்று ஆண்டிற்குப் பிறகு 98 சதவிகிதமும், ஐந்து ஆண்டிற்குப் பிறகு 98.50 சதவிகிதமும் பணம் திரும்பக் கிடைக்கும்.

**3 (மூன்ருவது) வெளியீடு (வரி கிடையாது)**

இதுவும் ஒரு ஏழு ஆண்டுப் பத்திரம். ரூ. 100, ரூ. 1,000 ரூ. 5,000 வகைகளில் இவை கிடைக்கின்றன. ஆண்டுக்கு 6 சதவிகிதம் வட்டி ஆண்டுதோறும் வழங்கப்படும். இதில் தனி நபர் கணக்கில் ரூ. 75,000 வரையிலும், கூட்டுக் கணக்கில் ரூ. 1,50,000 வரையிலும் இப்பத்திரங்களில் முதலீடு செய்யலாம். பத்திரக் கால முடிவிற்கு முன்னதாகப் பணம் தேவைப்பட்டால், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 98.50 சதவிகிதமும் ஐந்து ஆண்டுக்குப் பிறகு 98.75 சதவிகிதமும் பணம் திரும்பக் கிடைக்கும்.

**2 (இரண்டாவது) வெளியீடு**

இதுவும் ஒரு ஏழு ஆண்டுப் பத்திரம். இவை ரூ. 10, ரூ. 100 ரூ. 1,000 மற்றும் ரூ. 5,000 ஆகிய வகைகளில் கிடைக்கின்றன. தனி நபர் கணக்கில் ரூ. 75,000 வரையிலும், கூட்டுக் கணக்கில் ரூ. 1,50,000 வரையிலும் இப்பத்திரங்களில் முதலீடு செய்யலாம். ஆண்டொன்றுக்கு 6 சதவிகிதக் கூட்டு வட்டி கணக்கிடப்பட்டு அசலுடன் கால முடிவிலே வழங்கப்படும்.

**பொது நல சேம நிதித் திட்டம்**

ஸ்டேட் பாங்கும் அதன் துணை நிறுவனங்கள்மூலமாகவும் இயங்கி வரும் இத் திட்டம் சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கும் இதர பொது மக்கள் அனைவருக்கும் உகந்தது. இதில் முதலீட்டிற்கு 7 சத விகிதம் தொடர் வட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. வட்டிக்கு வரி விலக்கு உண்டு. இதர விலக்குப் பெறக் கூடிய சேமிப்புத் திட்டங்களோடு சேர்ந்து இதில் செய்யப்படும் முதலீட்டிற்கும் வருமான வரி விலக்கு உண்டு. ஒரு நிதி ஆண்டில் ரூ. 20,000க்கு அதிகம் இல்லாமலும் ரூ. 100க்குக் குறையாமலும் ஒரே தவணையிலாவது அல்லது 12க்கு மேற்படாமல், தவணைகளில் வேண்டுமானாலும் அவரவர் வசதிக்கேற்ப முதலீடு செய்யலாம். இத்திட்டத்திலுள்ள முதலீட்டை எந்த நீதிமன்றமும் ஜப்தி செய்ய முடியாது. கடன் மற்றும் பணம் எடுக்கும் வசதிகளும் உண்டு.

**கழிவுத் தொகை மற்றும் பரிசுகள்**

சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் ஓராண்டில் 100 கணக்குகளைச் சேர்த்த நபர்களுக்கு அழகிய ரெக்சின் கைப்பை ஒன்று பரிசளிக்கப்படுவதோடு, அந்தக் கணக்குகளைப் பராமரித்து வரும் அலுவலருக்கு 2.5 விழுக்காடு கழிவுத் தொகையும் (Commission) கொடுக்கப்படுகிறது.

**புது அனியூட்டி பத்திரங்கள்**

இப்பத்திரங்கள் ரூ. 3,200 மற்றும் அதன் பேருக்குத் தொகையில் எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும். இந்தத் தொகை ஒரு மொத்தமாகவோ அல்லது இரண்டாண்டுகளுக்குத் தவணைகளாகவோ கட்டலாம். அதன் பிறகு மூன்ருண்டுகள் கழித்து அடுத்த 84 மாதங்களுக்கு ரூ. 3,200க்கான முதலீட்டிற்கு மாதந்தோறும் ரூ. 50 வட்டியாகக் கொடுக்கப்படும். முதலீட்டுத் தொகை முதிர்ச்சியடைந்த நிலையில் கவர்ச்சிகரமான கூடுதல் தொகையுடன் திருப்பித் தரப்படும். இந்தப் பத்திரங்கள் தனி நபர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

**தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் :**

இந்திய அரசால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 5 ஆண்டு தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் கவர்ச்சிகரமான 13 சதவீத வட்டியை அளிக்கின்றன. தேசிய மயமாக்கப்பட்ட எந்த ஒரு வங்கியின் கிளைகளிலும் எல்லா அஞ்சலகங்களிலும் இந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பத்திரங்கள் 5 ஆண்டுகள் கழித்து முதிர்வடைகின்றன. முதிர்வுத் தொகைகளின் விவரம் கீழே தரப்படுகிறது:

| வாங்கும் மதிப்பு ரூ. | முதிர்வுத் தொகை ரூ. |
|---|---|
| 10 | 16.50 |
| 100 | 165.00 |
| 500 | 825.00 |

இந்தப் பத்திரங்களின் மூலமாக ஈட்டக்கூடிய வட்டியானது மற்ற சேமிப்புத் திட்டங்களான 'போஸ்டாபீஸ் டைம் டெபாஸிட்டுகள்', 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள், 'ரெக்கரிங் டெபாஸிட்டுகள்', யூனிட்டுகள் முதலியவை மூலமாகக் கிடைக்கும் வட்டியுடன் சேர்த்து ரூ. 3,000 வரையிலும் வருமான வரி விலக்கைப் பெறும். ஆனால், வரி வட்டித் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட மாட்டாது.

இந்தப் பத்திரங்களை ஒரு அஞ்சலகத்திலிருந்து மற்றொன்றுக்கும் ஒரு வங்கியிலிருந்து அதே வங்கியின் மற்றொரு கிளைக்கும் மாற்றிக் கொள்ளலாம்.

இந்தப் பத்திரங்களை ஈடு வைத்துத் திரும்பவும் உரிமையாளருக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

தனி நபர் பத்திரங்களைக் கூட்டுப் பத்திரங்களாகவும், இருவர் கூட்டாக உரிமையுடையவற்றைத் தனி நபர் பத்திரங்களாகவும் மாற்றிக் கொள்ளலாம்.

தனிநபர் பத்திரங்களை உடையோர் பத்திரங்களை வாங்கும் போதோ அல்லது பத்திரங்களை வாங்கிய பிறகோ வாரிசு நியமனம் செய்யலாம். வாரிசு நியமனத்தை எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம்.

இவ்வாறு செழிப்பான வாழ்வுக்கும்—சீரான வாழ்வுக்கும் சேமிப்பு சமய சஞ்சீவியாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல!

# ஒளிமயமான எதிர்காலம்!

**தே**சிய சேமிப்பு நிறுவனம் மற்றுமொரு சீரிய சேமிப்புத் திட்டத்தைப் பெருமையுடன் அறிவிக்கிறது. அதுதான் 'தேசிய சேமிப்பு அன்யூட்டி பத்திரம்'. 1976 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தப் பத்திரம் எல்லா அஞ்சல் நிலையங்களிலும் விற்பனையாகி வருகிறது. இத்திட்டம் இப்போதுதான் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப் புதிய அன்யூட்டி பத்திரத் திட்டம் வழங்கும் நன்மைகள்: (1) 84 மாதங்களுக்குப் பத்திரதாரருக்கு அன்யூட்டி தொகை, (2) கால முடிவில், பத்திரத்தின் முழுத் தொகை; (3) அத்துடன் கவர்ச்சிமிகு போனஸ்.

எல்லாருக்கும் உகந்த இணையற்ற முதலீட்டுத் திட்டமிது. எதிர்பாராது ஏற்படும் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் இத் திட்டம் எவ்வாறு தீட்டப்பட்டு உள்ளது?

ஒருவர் வேலையிலிருந்து தற்போதுதான் ஓய்வு பெற்று, கிராஜுடி தொகையையோ, பிராவிடெண்ட் நிதியையோ பெற்றுள்ளார் என்று வைத்துக் கொள்வோம். அத்தொகையில் ஒரு பகுதியைத் 'தேசிய சேமிப்பு அன்யூட்டி சர்டிபிகேட்'டில் முதலீடு செய்யலாம். முதலீடு செய்தவரோ, அவருக்குப் பின் அவரது குடும்பத்தினரோ அன்யூட்டி தொகையாக 7 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பெறலாம். மேலும், முதலீட்டுத் தொகையோடு போனசும் தரப்படும்.

மருத்துவம் அல்லது தொழில் நுட்பக் கல்வி பயில விரும்பும் குழந்தைகள் உங்களுக்கு உண்டா? இருப்பின், தேசிய சேமிப்பு அன்யூட்டி பத்திரத்தில் முதலீடு செய்ய இதுவே தக்க தருணம்.


குழந்தையின் பட்டப் படிப்பு. அதற்கு மேலும் 7 ஆண்டு படிப்புக்குத் தேவையான பணத்தை நாம் மாதா மாதம் பெறலாம். (ரூ. 50, ரூ. 100 அல்லது அதற்கு அதிகமான தொகை). அதோடு, படிப்பு முடிந்த பின்னர், முதலில் முதலீடு செய்யப்பட்ட முழுத் தொகையும் போனசோடு திருப்பித் தரப்படும். இத் தொகை 'கன்சல்டிங்' அறை நிறுவவோ, புதிய தொழில் ஒன்றை ஆரம்பிக்கவோ உதவும்.

நம் பேரக் குழந்தையின் எதிர்காலம் ஒளி மயமாக அமைய விரும்பினால், அதற்கும் இந்தத் திட்டம் வகை செய்கிறது. திருமணமான மகனோ, மகளோ ஐந்தாண்டுக்குள் குழந்தைச் செல்வம் ஒன்றைப் பெறலாம். அக் குழந்தைக்கான செலவினை மேற்கொள்ள இத்திட்டம் உதவுகிறது. குழந்தை, பள்ளி செல்லும் தருவாயில், டெபாசிட் செய்த அசலோடு வட்டியும் தரப்படும். இந்தத் தொகையை நாம் 'டைம் டெபாசிட்' கணக்கில் போட்டால், 5 அல்லது 7 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெரும் தொகை நமக்காகக் காத்திருக்கும். குழந்தையின் உயர் கல்விக்கு இத் தொகை பெரிதும் உதவும்.

அன்யூட்டி பத்திரத்தைப் பல வகைகளில் பயன்படுத்தி வாழ்வை ஒளிமயமாக்கலாம்.

நாம் செய்யும் டெபாசிட்டிலிருந்து இத்தனை நன்மைகளை எவ்விதம் பெறுவோம் என விந்தையாக இருக்கிறதல்லவா?

இந்தப் பத்திரங்கள் ஆண்டொன்றுக்கு 10.25 சதவிகித வட்டியை ஈட்டுகின்றன. இரண்டு ஆண்டுக்காலம் டெபாசிட் செய்ய வேண்டும். அடுத்த மூன்று ஆண்டுகள் பணம் போடவோ எடுக்கவோ கூடாது. நாம் டெபாசிட் செய்த 61வது மாதத்திலிருந்து நமக்கு அன்யூட்டித் தொகை கிடைக்க ஆரம்பிக்கிறது. அது 84 மாதங்களுக்குத் தொடர்ந்து கிடைத்துவரும். நம்முடைய முதலீட்டின்மீதான வட்டியே, இவ்விதம் 84 மாதங்களில் திருப்பித் தரப்படுகிறது.



# இராமநாதபுரத்து சேதுபதி ஓவியங்கள்!

டாக்டர் இரா. நாகசாமி
தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இயக்குநர்

சேதுபதி மன்னர்கள் ஆண்ட இராமநாதபுரத்தில் இராமலிங்க விலாசம் என்னும் மாளிகை இருக்கிறது. இம்மாளிகை கி.பி.17ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டது என்பர். சேதுபதி அரசர்கள் இராமேஸ்வரம் தீவைக் காக்கின்ற பொறுப்பை வகித்தவர்கள். அவர்களுக்குச் ‘சேதுபதி காவலர்’ என்றும் ‘சேதுபதி காத்த தேவர்’ என்றும் பட்டங்கள் உண்டு.

இராமேஸ்வரத்துச் சிவபெருமானிடத்து அவர்கள் சிறந்த பக்தி பூண்டவர்கள். அவர்களது குலதெய்வம் போல அக்கோயில் விளங்குகிறது. ஆதலின் அவர்கள் வசித்த இராமநாதபுரம் அரண்மனைக்கு ‘இராமலிங்க விலாசம்’ என்று பெயர் அளித்து மகிழ்ந்தனர். அந்த இராமலிங்க விலாசத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டு இன்றும் எஞ்சியுள்ளன. இங்குள்ள ஓவியங்களைத் தீட்டியவர் யார் என்பது அண்மைக் காலம் வரையில் தெளிவில்லாமல் இருந்தது. இவை 10ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட ஓவியங்களாய் இருக்கக் கூடும் என்று சிலர் கருதினர். ஆனால், அண்மையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை இந்த ஓவியங்கள் 18ஆம் நூற்றாண்டிலேயே தீட்டப்பட்டவை என்று கண்டுபிடித்துள்ளது.


இந்த மாளிகை முழுவதும் முன்னர் ஓவியங்களோடு திகழ்ந்தது. இப்பொழுது உள்ள ஓவியங்கள் மாளிகையின் உட்புறத்தில் உள்ளன. இந்த ஓவியங்களை நான்கு பகுதிகளாகப் பிரித்து அறிந்து கொள்ளலாம். முன்னே இருக்கக் கூடிய பெரிய மண்டபம் போன்ற அறை. அதற்குப் பின்புறத்தே ஓர் இடைக்கூட்டு. அதையும் கடந்து உள்ளே சென்றால் அரசர்கள் வாழ்ந்த மாளிகைப் பகுதி. அங்கிருந்து மேலே மாடிக்குச் செல்லப் படிகள் இருக்கின்றன. மாடியிலும் ஒரு பெரிய அறை இருக்கிறது. இந்த நான்கு இடங்களிலும் ஓவியங்கள் இப்பொழுதும் எஞ்சியுள்ளன.

இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசத்தில் உள்ள ஓவியங்கள் மிகவும் அதிக அளவில் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாய் வண்ணங்கள் அழிந்துவிடாமல் பல அரிய செய்திகளை எடுத்துரைப்பவையாய் இன்றும் எஞ்சியுள்ளன. தமிழகத்தில் இவ்வளவு பெரிய அளவிலே இந்த ஓவியங்கள் இருந்தும் அவற்றின் பெரும் பகுதி இதுகாறும் சரிவர அறியப்படவுமில்லை. இப்பொழுதுள்ள சேதுபதி அரசரவர்கள் இந்த அரண்மனை ஓவியங்களை அரசே எடுத்துப் பாதுகாக்கக் கொடுக்க முன் வந்துள்ளார்கள்.

இவ்வளவு ஓவியங்கள் உள்ள அரண்மனை ஒன்று தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதே யாருக்கும் தெரியாது. ஆனால், அங்குச் சென்று பார்த்தால்தான் தமிழகம் ஓவியக் கலையை அண்மைக்காலம் வரையில் எந்த அளவுக்குப் போற்றியது என்பது தெரியும்.

சேதுபதி ஓவியங்கள், அன்று ஆண்ட சேதுபதி மன்னரையும் அவருடன் வாழ்ந்த பல வரலாற்று வீரர்களையும், தேவியர்களையும் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறும் வரலாற்று ஓவியங்களாகத் திகழ்கின்றன. ஆதலின் இவை வரலாற்றுக்கு மிக மிக இன்றியமையாதவை. தமிழக ஓவியக்கலையில் தனி இடம் பெறுபவை. நாம் பிறவற்றால் அறிய இயலாத, அன்று வாழ்ந்த மக்களையும் அவர்களது ஆடை அணிகலன்களையும் பிறவற்றையும் அறிந்து கொள்ளப் பேருதவி புரிபவை.

இந்த ஓவியங்களில் ஒரு சேதுபதி அரசருடைய உருவம் தொடக்கத்திலிருந்து இறுதிவரை திரும்பத் திரும்ப வரையப்பட்டிருப்பதோடு அவர் பெயரும் எழுதப்பட்டிருக்கிறது. முத்து விஜய ரகுநாத சேதுபதி என்பது அவரது பெயர். சேதுபதி அரசர்களில் பலர் விஜயரகுநாத சேதுபதி என்று பட்டம் பெற்றிருந்தார்கள். ஆகவே, இவர் எந்த விஜயரகுநாத சேதுபதி என்பதில் ஐயம் வரக்கூடும். அந்த ஐயம் உள்ளதால்தான் இந்த ஓவியங்கள் 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று முன்னர் கூறினர். ஆனால், இரண்டு வரலாற்று நிகழ்ச்சிகள் இந்த ஓவியங்களில் இடம் பெற்றுள்ளன. ஒன்று தஞ்சை மராட்டிய மன்னர் சரபோஜிக்கும், சேதுபதி அரசர் முத்து விஜயரகுநாத சேதுபதிக்



இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தின் நுழைவாயில்

கும் ஒரு போர் நடந்தது. அந்தப் போர்க் காட்சி முழுவதும் ஓவியத்தில் இடம் பெற்றுள்ளது.

இது ஏறக்குறைய 1700லிருந்து 1710க்குள் நடைபெற்ற போர் என அறியலாம். அதேபோல உள் பகுதியில் ஓர் ஓவியத்தில் முத்துவிஜய ரகுநாத சேதுபதி அமர்ந்திருக்கிறார். அவருக்கு மதுரை நாயக்க அரசன் விஜய ரங்க சொக்கநாத நாயக்கர் இரத்தினங்களை எடுத்து அவர் தலை மீது தூவி 'இரத்தின பட்டாபிஷேகம்' செய்து வைக்கிறார். இந்தக் காட்சியின் மேல் முத்து விஜய ரகுநாத சேதுபதிக்கு விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அய்யன் இரத்தின பட்டாபிஷேகம் செய்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ராணி மங்கம்மாளுக்குப் பிறகு 1706லிருந்து 1730 வரையில் ஆண்டவர். ஆதலின் அந்தக் காலத்தில் இருந்த விஜய ரகுநாத சேதுபதியே இவ்வோவியங்களைத் தீட்டியவர் என்பது தெளிவாகிறது. 1725ல் இந்த ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கக் கூடும்.

இங்கே முன் உள்ள பெரிய மண்டபத்தில் உள்ளே நுழைந்ததும் இடது புறமுள்ள சுவரில் முதலில் காணுவது மராட்டிய அரசர் சரபோஜிக்கும் முத்து விஜயரகுநாத சேதுபதிக்கும் நடைபெற்ற போர் இடம் பெற்றுள்ளது. பெரிய யானையின் மீது அமர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிடுகின்றனர். இந்தக் காட்சியில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பீரங்கிகள் ஒவ்வொன்றிற்கும் தனித் தனிப் பெயர் இருந்தது என்பதும் அதன் மேலுள்ள எழுத்துக்களால் விளங்குகிறது.

இது போல அடுத்த காட்சியும் இவ்வாறு நடந்த போரையே குறிக்கிறது. இந்தக் காட்சியில் வீரர்கள் நீண்ட குழல் துப்பாக்கிகளைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அணி வகுத்து வரிசையாக நின்று கொண்டு துப்பாக்கியால் குறி நோக்குகின்றனர். கீழே ஆங்கிலேயர் ஒருவர் கவுன் போட்டுக் கொண்டு தலையில் தொப்பி வைத்துக் கொண்டு ஒரு பீரங்கியின் முன்னே நின்று கொண்டு பீரங்கியை இயக்குவதைக் காண்கிறோம். ஆங்கிலேயர் நம் நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னரே இந்து அரசர்களுடைய படைகளில் அவர்கள் கூலி வீரர்களாக ஆயுதம் தாங்கிப் போரிட்டனர் என்று இது உறுதிப்படுத்தும். போர்ச்சுகீசிய வீரர்கள் இவ்வாறு நாயக்கர் படைகளிலே இடம் பெற்றிருந்தார்கள் என்று 17ஆம் நூற்றாண்டுச் சிற்பங்களிலிருந்தே அறிகிறோம். இந்தப் போர்க் காட்சி நிச்சயமாகச் சென்று காணத் தகுந்தது.


அடுத்து, சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட குதிரையில், விஜய ரகுநாத சேதுபதி கையிலே வேல் தரித்துக் கொண்டு வேகமாக வருகின்ற ஒரு காட்சி காணப்படுகின்றது. அடுத்த பகுதியில் விஜயரகுநாத சேதுபதியும் அவரது துணைவியும் சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளனர். அவர்க்கு எதிரில் மூன்று ஆங்கிலேயர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்களுடைய தலையிலுள்ள தொப்பியும் அவர்கள் அமர்ந்துள்ள இருக்கைகளும் மேலைநாட்டு நாற்காலிகளாகத் திகழ்கின்றன. அவர்கள் போட்டுள்ள சட்டையும் தொப்பியும் பூட்சும் இவர்கள் ஐரோப்பியர்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. அரசின் முன்னிலையில் இவர்கள் ஏதோ பேச்சு வார்த்தைகள் நடத்துகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த உருவங்களைப் பார்த்து விட்டுத்தான் சிலர் கி.பி. 1805ல் இங்குக் கும்பினியாரின் ஏஜண்டாக வந்த கர்னல் மார்ட்டின்ஸ் என்று இதுகாறும் சுட்டிக்காட்டி வந்தார்கள். ஆனால், இந்த ஓவியங்கள் மார்ட்டிக் காலத்தை விட முந்தியவை. ஆதலால், இவை 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை அல்ல.

இதையும் தாண்டிச் சென்றால் சேதுபதி அரசர்கள் வணங்கிய பல்வேறு கோயில்கள்—திருச்சி உச்சிப் பிள்ளையார் கோயில்—முதலியன ஓவியத்தில் இடம் பெறுவதோடு பல மறவர் தேவியரும் சேதுபதியின் உற்றார் உறவினரும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இதற்கு எதிர்ப்புறச் சுவரில் வைணவக் கோயில்களும், வைணவப் பெருமாள் சிலைகளின் உருவங்களும் வரையப்பட்டு மிளிர்கின்றன.

இதற்கு அடுத்த இடைக்கட்டில் உள்ள ஓவியங்கள் கண்ணனுடைய வரலாற்றைச் சித்திரிப்பதோடு அவை எந்தக்காட்சியினைச் சித்திரிக்கின்றன என்ற விளக்கமும் எழுதப்பட்டுள்ளது. இந்த விளக்கங்கள் கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ளன. தெலுங்கும் தமிழும் கலந்து பேசிப் பழகிய ஒருவரின் வழக்கு மொழிபோல் இதில் விளக்கங்கள் அமைந்துள்ளன. சில இடங்களில் இராமநாதபுரப் பகுதிக்கே சிறப்பான 'அவுக வாராக' என்பது போன்ற தேசிய மொழிகளும் காணப்படுகின்றன. இடையிடையே சேதுபதிகளின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இதையும் தாண்டி உள்ளே சென்றால் சேதுபதி வாழ்ந்த பகுதியை அடைகிறோம். அங்கு நடுவில் உள்ள மேடையில் இன்னும் சேதுபதி அரசர்கள் நவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இந்தப் பகுதி மிகவும் கவனத்துடன் பலவளைவுகளுடன் எடுக்கப்பட்டது. இங்குப் பக்கச் சுவர்களிலும் மேல்வளைவுகள் முழுவதிலும் ஓவியங்கள் உள்ளன. இங்குள்ள வண்ணங்கள் மங்காமல் பளிச்சென்று நன்று தெரிகின்றன. இந்த அறையில் உள்ள ஓவியங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். சுவர்களில் உள்ள ஓவியம் இராமனுடைய கதையைச் சித்திரிக்கிறது. இவற்றுள் பெரும்பாலானவை அழிந்தும் மங்கியும் போய்விட்டன.

மேல் வளைவுகளில் முத்துவிஜய ரகுநாத சேதுபதியின் உருவம் பல்வேறு நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. ஒன்றில் ரகுநாத சேதுபதி தமது குலதெய்வம் ஆன ராஜராஜேஸ்வரி அன்னையிடமிருந்து ஆளும் செங்கோலை வாங்



முத்துவிஜய ரகுநாத சேதுபதியை வணங்கும் ஐரோப்பியர்

குவதுபோல் காண்பிக்கப்பட்டு உள்ளது. மதுரை அங்கயற் கண்ணியிடமிருந்து செங்கோல் வாங்கி யானை மீது அமர்த்தி வலம் வந்து அதை அரியணையில் அமர்த்திஅன்னையின் அடியானாகத் தென்னாட்டை ஆண்டதாக அறிகிறோம். ஊஞ்சல் மண்டபம் என்ற அக்கோயிலிலேயே உள்ள ஓர் இடத்தில் ராணி மங்கம்மாள் அங்கயற்கண்ணியிடமிருந்து செங்கோல் வாங்குவதுபோல் ஓர் ஓவியம் இடம் பெற்றுள்ளதும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். இது அன்று இருந்த பெரும் மரபு என்பதை இங்கு உள்ள ஓவியம் உறுதிப்படுத்துகிறது. அவ்வாறு சேதுபதி செங்கோல் வாங்குமிடத்து அவர் அணிந்திருக்கிற ஆடை அணிகலன்கள் மொகலாய ஆடையை நினைவுறுத்துகின்றன. அந்த ஆடை பூ வேலைப்பாடு நிரம்பியதாய்க் காணப்படுகிறது. முழுக்கைச் சட்டை அணிந்திருக்கிறார். அதிலும் பூ வேலைப்பாடுகள். அவருக்குப் பின் நல்ல பெரிய சரிந்த கொண்டையோடு மூக்கில் புல்லாக்குத் தரித்து அவனது தேவி நிற்கிறாள்... ராஜராஜேஸ்வரி அமர்ந்திருக்கின்ற ஆசனம் ஐரோப்பிய பாணியில் விளங்குகிறது. சேதுபதிக்கு அருகில் நிற்பது அவரது மைந்தனாகக் காணப்படுகிறது. மற்றொரு வளைவில் திருமாலிடமிருந்து சேதுபதி அருள் பெறுவதுபோலக் காட்டப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு வளைவில் விஜய ரகுநாத சேதுபதி வயதானஒருவர் முன் அமர்ந்து கொண்டு இராமாயணம் கேட்கிறார். சேதுபதியின் முன்னர் உள்ள ஓலையில் 'ஸ்ரீராம நிவேகதி' என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. பெரியவரின் கரத்தில் உள்ள ஓலையில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் எழுதியுள்ளது. முத்து விஜய ரகுநாத சேதுபதிக்கு இராமாயணம் கேட்பதில் அவ்வளவு ஈடுபாடு என்பது தெரிகிறது. இங்கு ஒன்று நினைவில் கொள்ளவேண்டும். நாயக்க மன்னர்கள் ஆண்ட போது செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய மூன்று இடங்களில் தெலுங்கு செல்வாக்குப் பெற்று இருந்தது. நாயக்கர் தெலுங்கு தேசத்தினர் ஆதலின் அவர்களது வீட்டு வழக்கில் தெலுங்கு சிறப்பிடம் பெற்றிருந்தது. பல தெலுங்குக் காப்பியங்கள் இயற்றப்பட்டன. சேதுபதி மன்னர்கள் மறவர் குலத்து வந்தவர்கள் ஆயினும் தெலுங்கு மொழி பேசும் நாயக்க மன்னருடன் மணவினை செய்து கொண்டனர். ஆதலின், தெலுங்குக் கலப்பு அவர்களிடையேயும் பரவியது என்பதில் ஐயமில்லை. ஆதலின், இங்கு சேதுபதி தெலுங்கில் இராமாயணம் கேட்பது சித்திரிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு தொடர்பையும் இங்குக் குறிக்க வேண்டும். தஞ்சை மன்னர்களும் மதுரை நாயக்க மன்னர்களும் முதலில் நெருங்கியவர்களாக இருந்தார்கள். தஞ்சை நாயக்கர்கள் இராமேச்சுரம் கோயிலுக்குப் பல பணிகள் புரிந்திருக்கிறார்கள். அவர்களில் அச்சுதப்ப நாயக்கர் இராமேச்சுரநத்த மண்டபம் கட்டியுள்ளார் போல் தோன்றுகிறது. அவரது சிலை உருவம் அங்குள்ளது. அவரது அருமை மைந்தனே விஜயரகுநாத நாயக்கன். தஞ்சையை ஆண்ட நாயக்கர்களில் மிகவும் சிறந்தவன். அவனது ஆற்றலும் வீரமுமே சேதுபதி மன்னர்களுக்குத் தொடர்ந்து ரகுநாத சேதுபதி என்னும் பெயரைக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

காமனும் இரதியும்என சேதுபதியும் அவர்தேவியும்




தஞ்சை ரகுநாத நாயக்கன் இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். எப்பொழுதும் ராம கதையைக் கேட்டுக் கொண்டே இருப்பானாம். அவனுக்குச் சரியாக நூறாண்டுகளுக்குப் பிறகு இங்கு உள்ள ஓவியத்தைத் தீட்டிய விஜய ரகுநாத சேதுபதி வாழ்ந்தார். அவரும் ராம கதை கேட்பதில் தனக்கிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதோடு அதே சொற்றொடரை உபயோகித்து உள்ளது இந்தக் கருத்து எந்த அளவுக்கு மேலோங்கி நின்றது என்பதும் தெளிவு.

இந்த முத்து விஜய ரகுநாத சேதுபதி அலங்காரம் செய்து கொள்வதில் மிகவும் விருப்பம் உடையவர்போல் இங்குள்ள ஓவியங்களில் ஒவ்வொரு வளைவிலும் தன்னை ஒவ்வொரு விதமாக அலங்கரித்துக் கொண்டு காட்சியளிக்கிறார். மொகலாயர் ஆடையும், அணியும், தலை முடியும் பூண்டு அமர்ந்து கொண்டு ஆடல் காண்பதாக உள்ளது ஒரு காட்சி.

மற்றும் ஓர் இடத்தில் சேதுபதி அரசர் தன் தேவியோடு

அமர்ந்து இருப்பது காணப்படுகிறது. அதில் அவரது பெயரும் தேவியின் பெயரும் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளன. மற்றொரு காட்சி சேதுபதி தன்னை மன்மதன் போல் அலங்கரித்துக் கொண்டு கரும்பு வில்லேந்தி அன்னத்தின் மீதமர்ந்து எதிரே இரதி போல் அலங்கரித்து கிளி மீதமர்ந்து வரும் தன் தேவியுடன் மலர்க் கணைகளால் போர் தொடுப்பதுபோல் உள்ள காட்சி, உண்மையில் மிகச் சிறந்த ஓவியம் என்பதில் ஐயமில்லை. இக்காட்சியில் நல்ல ஒரு விறுவிறுப்பு இருக்கிறது. கருத்து இருக்கிறது. மலர்க் கணைகளை ஒட்டி வண்டுகள் உள்ளன. மன்மதன் இரதியாக இவர்கள் திகழ்கிறார்கள் என்பதை மேலும் சிறக்கச் செய்கிறது. அன்னத்தின் மீதும் கிளி மீதும் அமர்ந்துள்ள இவ்விருவரது தோற்றமும் கம்பீரமாகத் திகழ்கிறது. நல்ல கண்கவர் ஓவியம். பார்க்கத் தவறக் கூடாத ஓவியம்.



கண்ணாடி காணும் கட்டழகி

மற்றொரு காட்சியில் சேதுபதி அமர்ந்து இருக்கிறார். அவருக்குப் பின் இரு வீரர்கள் கத்தி தாங்கி நிற்கிறார்கள். அவர்களுக்கு எதிரில் இரண்டு ஐரோப்பியர் சேதுபதியை வணங்குகிறார்கள். முதலில் நிற்கும் ஐரோப்பியன் தனது தொப்பியைக் கையில் கழற்றிப் பிடித்துக் கொண்டு தலை குனிந்து ஐரோப்பிய முறையில் வணங்குகிறான். மற்றும் ஒருவன் சேதுபதிக்குத் தட்டில் ஏதோ திரை கொண்டு வருவதுபோல் கொணர்ந்து நிற்கிறான். இக்காட்சி மிகவும் சிறப்பு மிக்க காட்சி.

*1800*க்குப் பிறகு ஆங்கிலேயக் கும்பினியர்கள் இப்பகுதியை தங்களது ஆட்சிக்குள்ளாக்கி சேதுபதி அரசர்களைத் தங்களின் சிற்றரசர்களாக நடத்தினர். அப்பொழுதுதான் கர்னல் மார்டின் என்பவர் இராமநாதபுரத்துக்கு வந்து கும்பினியாருக்காக ஆண்டான். ஆதலின், அந்நிலையில் ஐரோப்பியர் சேதுபதிக்கு வணங்குவதுபோல படத்தில் போடக் கூடிய சூழ்நிலை இல்லை. சேதுபதி அரசர்கள் இன்னும் கம்பெனியாரின் ஆட்சிக்குள் வராத தனிப் பேரரசு ஆண்ட காலத்தில் இவ்வோவியங்கள் வரையப்பட்டன என்பதை இக்காட்சியும் வலியுறுத்தும். இவை கி.பி. *1710-1730*க்குள் வரையப்பட்டிருக்கும் என முன்பே கண்டோம்.

ஓர் ஓரத்தே உள்ள படிகளின் வழியாக மாடிக்கு வருகிறோம். மாடி என்பதைக் காட்டிலும் சேதுபதி மன்னரின் பள்ளி அறைக்கு வருகிறோம் என்பதே பொருந்தும். ஆம். இம்மாடி அறை அவர் தன் தேவியுடன் துயில் கொள்ளும், இன்பம் கொள்ளும் அறை என்பதில் ஐயமில்லை. அதைச் சான்று கூறுவதாக உள்ளன இங்குள்ள ஓவியங்கள். ஒவ்வொரு ஓவியமும் மிகப் பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளன. சுமார் (6 அடி) 2 மீட்டர் உயர்த்துக்கும் மேல் உள்ள சில ஓவியங்கள் மறைந்துவிட்டன. ஆயினும், பெரும்பகுதி நல்ல நிலையில் உள்ளன. இங்குள்ள காட்சி ஒவ்வொன்றும் ஒரு கருத்தில் அமைக்கப்பட்டதாகும்.

தமிழ்நாட்டில் *1700*ல் மன்னர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறார்கள் என்று இதன்மூலம் அறியலாம். இந்தியாவின் வடபால் இமயமலை அடிப்பகுதியில் சில அரசர்களின் அரண்மனைகளில் ஓவியங்கள் உள்ளன என்று காண்போம். அங்கும் அரசர்களின் வாழ்க்கைகள் காட்சிகளாக இடம் பெற்றுள்ளதைப் பார்க்கும்போது, அரண்மனைகளின் ஓவியங்களைத் தீட்டுவது ஒரு மரபாகத் திகழ்ந்தது போலும். அக்காலத்தில் ஓவியக் கலைஞர்கள் ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு இப்பணிக்காகச் சென்றிருக்கிறார்கள் அல்லது அந்தக் கருத்துக்கள் பரவியிருக்கின்றன.

மொகலாய அரசர்கள் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். அவர்களது அவையில் புகழ்மிகு ஓவியர்கள் திகழ்ந்தார்கள் என்று அறிவோம். 11ஆம் நூற்றாண்டின் இறுதியில் குறிப்பாக ஔரங்கசீப் ஆட்சியில் கலைக்கு அரசியல் செல்வாக்கு இல்லாததால் தக்காணத்துக்குப் பெரும்பாலான கலைஞர் சென்றனர் என்பர் வரலாற்றாசிரியர். அந்தத் தொடர்பு, நாயக்கர் அரண்மனைகளிலும் ஏற்பட்டிருக்கிறது. மொகலாய ஆடை அணியும் முறை அதாவது உள் பகுதி தெரியும் வகை மெல்லிய துகிலைப் பாவாடை போல் ஆண்களும் பெண்களும் அணிவது தெற்கே இராமநாதபுரம் அரண்மனைக்கும் வந்துள்ளது. அது போல பெண்களை தலையல் அணியும் அணிகலன்களும், மொகலாயப் பெண்களே ஆடுவது போன்ற காட்சிகளும், மொகலாய ஓவியங்களில் காணப்படும் கட்டடங்களின் அமைப்பும், இந்தக் கலைத் தொடர்பு, கலாசாரத் தொடர்பு அல்லது இணைப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இந்த ஓவியங்களில் தெலுங்கு நாட்டுப் பண்புகள், மொகலாயர் பாங்கு இங்கும் அங்குமாகத் தென்படுகிறது என்றால் தெலுங்குத் தொடர்பு ஒவ்வொரு காட்சியிலும் இடம் பெற்றுள்ளது. பெண்கள் தெலுங்கு நாட்டில் ஓவியத்திலும், சிற்பங்களிலும் உள்ளதுபோலக் கொண்டைகள் அணிந்திருக்கிறார்கள். உடை தரித்திருக்கிறார்கள். தெலுங்கு மொழியில் சில இடங்களில் விளக்கம் உள்ளது கண்டோம். பெண்களும் ஆண்களும் ஒல்லியாக இல்லாமல் சதை வைத்த சற்று குண்டான வடிவங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இந்த ஓவியங்களுக்கு கால்களையும் பல்வேறு நிலைகளில் வரையத் தெரியவில்லை. பக்க வாட்டில் நிற்பது போலவே திரும்பத் திரும்ப வரைகிறார்கள். எனினும் ஆடைகள் எவ்வளவு வகையான பூ வேலைப்பாட்டோடு இருந்தன என்று இங்குக் காணலாம். குறிப்பாகப் பெண்கள் அணியும் புடவைகளில் எத்தனை வகைகள், எத்தனை வேலைப்பாடு, எத்தனை வண்ணங்கள், புடவை உற்பத்தி செய்வோர்கள் இங்கு வந்தார்களானால் பெரும் விருந்தே காத்திருக்கிறது அவர்களுக்கு. நாட்டியத்தைப் பற்றி அறிய, இசைக் கருவிகளைப் பற்றி அறிய இன்ன பிற கலாசாரப் பண்புகள் பற்றி அறிய இராமநாதபுர ஓவியங்கள் ஒரு கருவூலம். இவற்றைத் தீட்டி அருந் தொண்டாற்றிய முத்து விஜய ரகுநாத சேதுபதியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.




**நா**ட்டுக்கு உழைத்த நல்லவர்கள் — செந்தமிழுக்குத் தொண்டு புரிந்த சான்றோர்கள்-தியாக வரலாற்றைப் படைத்த தியாகிகள்-ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடி வரும் பணியைத் தனது கடமையாகக் கொண்டிருக்கும் தமிழக அரசு ஜூன் 5-ஆம் நாளன்று மாலை, கண்ணியத்துக்குரிய காயிதெ மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் பிறந்தநாள் விழாவை, முதன்முறையாக, அரசின் சார்பில் கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

விழாவுக்கு மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி **திரு எம். எம். இஸ்மாயில்** அவர்கள தலைமை ஏற்றார். தமது தலைமையுரையில் அவர் குறிப்பிட்டார்:

''இந்த விழாவுக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. காயிதெ மில்லத் அவர்கள் எந்த ஓர் இயக்கமான முஸ்லிம் லீக்கிற்குப் பாடுபட்டாரோ, அந்த இயக்கம் அவரது பிறந்தநாளைக் கொண்டாடவில்லை; அவரது இஸ்லாமிய சமுதாயம் கொண்டாடவில்லை. ஆனால், தமிழக அரசு கொண்டாடுகிறது.

''நமது நாட்டில் தலைவர்கள் முதலில் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பிற்காலத்தில் அவர்கள் தங்களது தொண்டினால் அனைவருக்கும் உரியவராகி விடுகிறார்கள்.

''காந்திஜி-காங்கிரஸின் தலைவராக இருந்தார்; பின்னர் அவர் தேசத் தந்தை என்று அழைக்கப்பட்டார். பரந்த உள்ளம்— உயர்ந்த நோக்கம்—சிறந்த எண்ணம் ஆகியவற்றின் காரணமாக ஒரு தலைவர் ஒரு சமுதாயத்துக்கு மட்டும் சொந்தக்காரராக இல்லாமல் உலக மக்கள் அனைவருக்குமே சொந்தம் ஆகிவிடுகிறார். ஒருவர் சிறந்த மனிதராக இருந்தால்தான் சிறந்த தலைவராக ஆக முடியும். காயிதெ மில்லத் அவர்கள் சிறந்த மனிதராக இருந்தார்; எனவே அவர் சிறந்த தலைவராகவும் இருந்தார்.

''ஒரு தலைவரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அவர் சமுதாயத்துக்கு— உலகத்துக்கு—ஆற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக! இன்னொன்று-அவர்களது அருங்குணங்களை இதுபோன்ற விழாக்களில் எடுத்துரைப்பதன் மூலமாக அவர்களது நற்குணங்களை நாமும் பின்பற்றுவதற்காக!

''காயிதெ மில்லத் அவர்கள் தூய உள்ளம் படைத்தவர்— ஒழுக்க சீலம் மிகுந்தவர்— எளிமையாக வாழ்ந்தவர்— அவரைப் போன்று அகமும் புறமும் தூய்மை உள்ள தலைவரைக் காண்பது அருமை''

''அவர் தமது 12 வது வயதிலேயே-அதாவது 1908-ல் முஸ்லிம் வாலிபர் சங்கத்தைத் தோற்றுவித்தார். அந்தச் சங்கத்தின் பணிகள் யாவை தெரியுமா?

இந்திய மக்களை ஆங்கிலம் படிக்கத் தூண்டுவது.

இந்திய மக்களுக்குக் கல்வியறிவு கொடுப்பது.

குடிசைத் தொழிலை வளர்ச்சியடையச் செய்வது.

வரதட்சிணை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வது.

''காயிதெ மில்லத் அவர்கள் தாயிடம் மிகவும் அன்புகாட்டி வந்தார். ஒருவர், பெற்றோரிடம் காட்டும் அன்பிலிருந்து, அவர் நல்லவரா கெட்டவரா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

''அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில்-இந்தியாவின் ஆட்சி மொழி எது என்ற விவாதம் வந்த நேரத்தில்; காயிதெ மில்லத் அவர்கள் கூறிய கருத்து பாராட்டுக்குரியது — போற்றுதலுக்குரியது.

''இந்தியாவில் ஏதாவது ஒரு மொழி ஆட்சி மொழிக்குத் தகுதியானதாக இருக்குமானால் அது என் தாய்மொழியான தமிழ்தான்'' என்று ஆணித்தரமாகக் கூறினார்.

''அத்தகைய சிறந்த தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடும் அரசுக்குப் பாராட்டு—நன்றி.''

நீதிபதி அவர்களுக்குப் பின்னர் மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் **திரு கா. இராசா முகம்மது** அவர்கள் பேசினார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.

''இந்த விழாவின் முக்கிய நோக்கம்.... காயிதெ மில்லத் அவர்களின் வாழ்நாளில் நடந்த

## மூலதன லாபத்தில் வரியை சேமிக்கவும்

# தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யவும்

*தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்தால் மூலதன லாபத்தில் வரிச்சலுகை பெறலாம்.*

குறைந்தது மூன்று வருடங்களுக்கு முன் வாங்கப்பட்ட வீடு, நிலம், இயந்திரக் கருவிகள், ஆபரணங்கள், பங்குகள், ஸ்டாக்குகள் போன்ற மூலதன சொத்துக்களை விற்பனை செய்திருந்தாலும் அல்லது விற்க இருந்தாலும், அவ்வாறு விற்றதன் மூலம் கிடைத்த தொகையை ஆறு மாதங்களுக்குள் தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் தேசிய சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்தால் தொடர்ந்து முழு வரிச்சலுகை பெறலாம்.

இந்தப் பத்திரங்களை வாங்குவதால் உங்கள் பணத்தை நல்லபடி முதலீடு செய்கிறீர்கள்.

### கிடைக்கும் நன்மைகள்

| முதலீடு | வருமானம் | |
|---|---|---|
| 5 வருட தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் | காலாவதியில் 13 சதவிகித வ்ட்டி. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரிச்சலுகை. (ரூ. 100 வளர்ந்து ரூ. 165 ஆகிறது) | வருடம் ரூ. 3,000 வரையிலான வட்டிக்கு வருமான வரிவிலக்கு உண்டு. |
| 7 வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள் Vவது வெளியீடு | காலாவதியில் 10.25 சதவிகிதத்தில் கூட்டுவட்டி. வருடவட்டி வருமான வரிச்சலுகை பெறுகிறது. (ரூ. 100 வளர்ந்து ரூ. 200 ஆகிறது) | |
| IVவது வெளியீடு | வருடம் 10.25% வருடா வருடம் கொடுக்கப் படுகிறது. | |
| IIIவது வெளியீடு | வருடம் 6% காலாவதியில் கொடுக்கப்படுகிறது. | முழுத் தொகையும் வரிவிலக்குப் பெறுகிறது. |
| IIவது வெளியீடு | வருடம் 6% காலாவதியில் கொடுக்கப்படுகிறது. (ரூ. 100 வளர்ந்து ரூ. 150 ஆகிறது) | |

*இதர விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—*

- அங்கீகாரம் பெற்ற ஏஜண்ட் அல்லது
- மாவட்ட சேமிப்பு அதிகாரி அலலது
- அருகிலுள்ள அஞ்சலகம் அல்லது
- பிராந்திய டைரக்டர் (தேசிய சேமிப்பு)

**தேசிய சேமிப்பு இயக்கம்**

davp - 78/1

சம்பவங்களை நினைத்துப் பார்ப்பது—அவரது வாழ்க்கை முறையை முன்னுதாரணமாகக் கொண்டு—நாம் வாழ முயற்சிப்பது!




''காயிதெ மில்லத் அவர்கள் நிதானமாக இருப்பவர்—எதற்கும் பதட்டப்படமாட்டார். மார்க்கக் கடமைகளை உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்திருக்கிறார். மிகப் பெரிய பதவியில் இருந்த காலத்திலும் அவர் மிக எளிமையாக வாழ்ந்திருக்கிறார்.

''அண்ணா அவர்களுக்கும் காயிதெ மில்லத் அவர்களுக்கும் நெருங்கிய ஈடுபாடு இருந்தது. இந்தியாவில் உலகத்தில் வேறு எவரிடமும் இல்லாத அளவு எளிமை காயிதெ மில்லத் அவர்களிடம் இருந்தது என்பதை அண்ணா அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

''அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில், 'ஆங்கிலம் ஆட்சி மொழியாகக் கூடாது என்றால்—ஓர் உயர்தனிச் செம்மொழி தகுதியுடையது; அது என் தாய் மொழியான தமிழ் மொழிதான்,' என்று காயிதெ மில்லத் அவர்கள் பேசியதாக அறிகிறோம். அவர் அவ்வாறு பேசியது நமக்கு எப்படித் தெரிந்தது? தம்மைப் பற்றித் தெரிவித்துக் கொள்ளும் பழக்கம் இல்லாதவர் காயிதெ மில்லத் அவர்கள். அப்படியிருக்க—அரசியல் நிர்ணய சபையில் அவர் பேசிய கருத்து எப்படி வெளியே தெரிந்தது? பேரறிஞர் அண்ணா அவர்களினால்தான் அந்தச் செய்தி எட்டியது. 1962ல் நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற அண்ணா அவர்கள் தமது ஓய்வு நேரத்தில், அங்குள்ள நூலகத்திற்குச் சென்று —'நாடாளுமன்ற நடவடிக்கை' என்னும் நூலைப் படித்தபோது—அதிலே இருந்த காயிதெ மில்லத் அவர்களின் உரையைக் கண்டு—'தமிழ் மொழி ஆட்சி மொழியாவதற்குரிய தகுதியுடையது' என்று அவர் கூறியிருந்த செய்தியைப் படித்து—அவரது தமிழ் ஆர்வத்தை அறிந்து, அதனை எடுத்துச் சொன்னார் அண்ணா.

''சனாதன உள்ளம் படைத்த மூதறிஞர் ராஜாஜி அவர்களும்—பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும் தீவிரமான கொள்கைகளை நாட்டுக்கு வழங்கியவர்கள். இந்த இருவரும், காயிதெ மில்லத் என்றால் தனி மரியாதை செலுத்தி வந்தார்கள்.

''நெருப்பாற்றிலே குதித்துச் சிறுபான்மைச் சமுதாயத்தைக் காப்பதில் பெரும்பணி செய்திருக்கிறார் காயிதெ மில்லத். அவர் என்ன செய்ய வேண்டுமோ அதைச் சொன்னார். என்ன சொன்னாரோ அதைச் செய்தார்.

அடுத்துப் பேசிய, தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி **திரு க. ராசாராம்** அவர்கள், தமது உரையில், குறிப்பிட்டதாவது;

''காயிதெ மில்லத் அவர்கள் பிறந்த மண்ணிலே நாம் பிறந்தோம் என்பதும், அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதும் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகள்.

''யார், யார் இந்த மண்ணுக்குப் பாடுபட்டார்களோ, யார் யார் இந்த மண்ணுக்குத் தொண்டாற்றினார்களோ — அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் தமிழக அரசு விழாக் கொண்டாடி வருகிறது.

''குடியாத்தத்தில் ஒருமுறை தலைவர் காமராஜர் போட்டியிட்டபோது—காயிதெ மில்லத் அவர்களைச் சந்தித்து ஆதரவை நாடினார். அந்தத் தேர்தலிலே-இஸ்லாமிய சமுதாயத்தினரின் ஆதரவைத் திரட்டித் தந்து—பெருவாரியான வாக்குகளில் காமராஜர் வெற்றி பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர் காயிதெ மில்லத் அவர்கள் ஆவார். தமிழ்நாட்டில் கையாண்ட அணுகு முறையைத்தான் அகில இந்தியாவிலும் அவர் கடைப்பிடித்தார்.

''ஒருமுறை 1949-ல் ஜின்னா அவர்களுக்குப் பாராட்டு வழங்கியபோது, காயிதெ மில்லத் அவர்கள், 'நாடு பிரிந்து விட்டது இனி நீங்கள் வேறு; நாங்கள் வேறு; மதத்தால் நாம் ஒருவராக இருக்கலாம்; ஆனால் நாட்டைப் பொறுத்த அளவில் நாங்கள் எல்லாம் இந்திய நாட்டினர் தான்', என்று தேச பக்தி ததும்பப் பேசினார் காயிதெ மில்லத்.

''காயிதெ மில்லத் அவர்கள் பேச்சாற்றல் மிக்க பேச்சாளர் அல்ல; கருத்தாற்றல் மிக்க பேச்சாளர். பிரச்சினைகளை எப்போதும் அகில இந்தியக் கண்ணோட்டத்துடன் அணுகும் தன்மை அவரிடம் உண்டு.

''காயிதெ மில்லத் அவர்கள் எளிமையாக வாழ்ந்தவர் மட்டுமல்ல—எல்லா வகையிலும் சிறப்பாக வாழ்ந்தவர். முஸ்லீம்களும், இந்துக்களும் சரி சமமாக வாழ வேண்டும் என்று நினைத்தவர்."

அடுத்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் **திரு. இரா. செழியன்** அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்.

''1947-ஆம் ஆண்டுக்குப் பிறகு—இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட பிறகு—வகுப்பு வாதக் கலவரங்கள் ஏற்பட்டபோது—அமைதியின் உருவமாக—அன்பின் இருப்பிடமாக விளங்கி-சமுதாயத்தில் ஒற்றுமையை உண்டாக்கியவர் காயிதெ மில்லத் அவர்கள்.

''இந்தியாவில் பிறந்த எந்த முஸ்லீமும்—நாட்டுப் பற்றில் எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் இல்லை என்பதை அவர் நிரூபித்திருக்கிறார்.

''522 பேர் அங்கம் பெற்ற ஆர்த்த சபையாம் நாடாளுமன்றத்திற்கு 1957-ல் காயிதெ மில்லத் அவர்கள் வந்தபோது-இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருவர்தான் இருந்தனர்; சமுதாயத்தில் மட்டுமல்ல-மக்கள் சபையிலும் அவர்கள் சிறுபான்மையினராக இருந்தனர்.

''காயிதெ மில்லத் உருவத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் பண்பாலும் உயர்ந்தவர். 1965-ல் பாகிஸ்தான்-இந்தியா யுத்தம்


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனா, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

ஏற்பட்டபோது, 'இந்திய நாட்டிற்காக-இந்திய மண்ணைக் காப்பதற்காக-நான் இந்தியாவின் பக்கத்தில்தான் இருப்பேன்' என்று கூறிய காயிதெ மில்லத், அகில இந்திய அரசியலில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கினார்.

''காயிதெ மில்லத் என்றால் சமுதாயத்தின் வழிகாட்டி என்று பொருள். எதிரிகள் கண்டு மதிக்கும் அளவுக்கு-மெச்சும் அளவுக்கு—அமைதியாக - அன்பாக அவர் பணியாற்றினார். அதனால் தான் ஒரு சமாதானமான சூழ்நிலையை இந்திய அரசியலில் அவரால் ஏற்படுத்தித் தர முடிந்தது.

''செல்வக் குவியலைக் கொண்டோ-சிங்கார மாளிகைகளைக் கொண்டோ-ஒரு நாடு மதிக்கப்படுவதில்லை. நாட்டிலுள்ள மக்களின் பண்பாட்டைப் பொறுத்துத்தான் நாடு மதிக்கப்படுகிறது. ஒரு நாட்டில் இருக்கின்ற தலைவர்கள்-மக்களை நடத்திச் செல்கின்ற தலைவர்கள் ஆகியோரைப் பொறுத்தே ஒரு நாட்டின் மதிப்பு இருக்கிறது.

''காயிதெ மில்லத் அவர்கள் தாம் பிறந்த மண்ணின் பிரதிநிதியாகப் பணிபுரிந்தார். மொழியால், தமிழராக,— மதத்தால் இஸ்லாமியராக-நாட்டால் இந்தியராக-பணியினால் உலக மாமேதையாக விளங்கியவர் அவர்.''

அடுத்துப் பேசிய திரு ஏ. கே. ஏ. அப்துல் சமது அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

''பெற்றிருந்த செல்வத்தை இழந்த பிறகுதான் அதன் பெருமை தெரியும் என்பார்கள்; காயிதெ மில்லத் என்றால் வழிகாட்டி என்பது மொழிபெயர்ப்பாக இருந்தாலும், உண்மையிலேயே அந்தச் சொற்றொடருக்கு ஒரு தனிப் பொருள் இருக்கிறது.

''அரபுச் சொல்லில் ஒட்டகம் ஓட்டுபவர்கள் காயித் என்றும், சாயித் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு.

''ஒட்டகத்தின் முதுகில் ஏறி அமர்ந்து, மூக்கணாங்கயிற்றைப் பிடித்து ஒட்டகத்தை வழி நடத்துபவர்கள் சாயித் என்று சொல்லப்படுவர்.

''ஒட்டகத்தின் மூக்கணாங்கயிற்றைக் கையிலே பிடித்துக் கொண்டு, தான் முதலில் நடைபோட்டபடி, ஒட்டகம் பாதாளத்தில்-பள்ளத்தில் விழுந்துவிடாதபடி வழி நடத்திச் செல்லும் வழிகாட்டிகள் காயித் என்று சொல்லப்படுவர்.

''பொதுமக்களின் இதயத்தில் இடம் 'பிடித்து-சமுதாயத்தின்



மூக்கணாங்கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டு-இந்தச் சமுதாயம் பள்ளத்தில்-பாதாளத்தில் வீழ்ந்து விடாமல் இருக்க-அதனை வழி நடத்திச் சென்றவர் காயிதெ மில்லத் அவர்கள்.

''அரசைத் துறந்து ஆத்ம ஞானியாக மாறினார் புத்தர்-போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றார்.

''அரசியலிலே இருந்து கொண்டே ஆத்ம ஞானியாக வாழ்வு நடத்தியவர் காயிதெ மில்லத் ஒருவர்தான்.

''அவரது பண்பால்-ஒழுக்கத்தால்- பழக்கத்தால் - அவரால் ஈர்க்கப்படாத தலைவர்களே இருக்க முடியாது.

''இந்திய-சீனா யுத்தம் ஏற்பட்ட காலத்தில் 'பிடிமண்ணைக் கூட அந்நியருக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது' என்று வீர முழக்கமிட்ட தேசபக்தி உள்ளம் காயிதே மில்லத் அவர்களுக்குச் சொந்தம்.

''அண்ணா அவர்களுக்கும் காயிதெ மில்லத் அவர்களுக்கும் நெருங்கிய பழக்கமுண்டு. இவ்விருவருக்கும் நான் சில நேரங்களில் அணுக்கத் தொண்டனாக இருந்திருக்கிறேன்.

''ஒரு முறை அண்ணா அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் காஞ்சித் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எதிர்பாராத முறையில் அங்குச் சென்று, அவரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார் காயிதெ மில்லத் அவர்கள். அப்போது அண்ணா அவர்கள், 'கண்ணிய மிக்க காயிதே மில்லத் அவர்கள் காஞ்சி நகருக்கு வருகை புரிந்ததால், காஞ்சி புனிதம் பெற்றது' என்று குறிப்பிட்டார்கள்.

''காயிதெ மில்லத் அவர்கள், தன்னலமற்ற - அப்பழுக்கற்ற வாழ்க்கை நடத்தினார். அவருக்கு, அவரது நண்பர்கள் மனமுவந்து கார் ஒன்றை வழங்க முன்வந்தபோது-அதனை ஏற்க மறுத்துவிட்ட பெருந்தகை அவர்.''

திரு. அப்துல் சமது அவர்களின் உரைக்குப் பின்னர், நாட்டு வணக்கத்துடன், விழா இனிது நிறைவேறியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:


—எஸ். சண்முக சுந்தரம்


எல்லோருக்குமான சேமிப்புத் திட்டங்கள்

சுதந்திரத்திற்குப் பின் தேசிய சேமிப்பு இயக்கத்தின் சாதனையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. பல்வேறு வருமானப் பிரிவுகளிலுள்ள மக்களும் தங்கள் சேமிப்புத் தொகைகளைக்கொண்டு முதலீடு செய்யும் வாய்ப்பை பெற்றுள்ளனர். அதே சமயம் நாட்டின் முன்னேற்றத்தில்தாமும் பங்குகொள்ளுகின்றவாய்ப்புகிடைத்தது என்று அவர்கள் பெருமை கொள்ள முடிகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறிய, பெரிய சேமிப்பாளர்களும் முக்கிய அங்கம் வகிக்கின்றனர்.

இன்று சேமிக்கும் ஒவ்வொரு ரூபாயும் எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது!





# அண்ணா எனும் இலக்கியவாதி!

**10**

அண்ணா எல்லாத் துறைகளைப் பற்றியும் சிறப்பாக எழுதினார் என்று முன்னரே குறிப்பிட்டு இருக்கிறேன். நாவல், சிறு கதை, நாடகம், கட்டுரை என்று பல்வேறு துறைகளையும் தேர்ந்தெடுத்து அண்ணா எழுதி இருக்கிறார். எழுதிய அனைத்தையும் அவர் சிறப்பாக எழுதி இருக்கிறார் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. சில சமயங்களில் பிரச்சாரத் தேவையின் விளைவாக இலக்கியத் தரத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு இருக்கலாமே தவிர, அண்ணாவின் படைப்புகள் அனைத்தும் சுவையானவை என்பதில் சந்தேகமில்லை. எதைச் சொன்னாலும் படிப்போருக்குச் சோர்வு இல்லாமல் சொல்ல வேண்டும் என்பதில் அண்ணா மிகுந்த கவனம் செலுத்தினார்.

அவர் கையாண்ட முறைகளில் கடித வடிவில் கருத்துக்களைச் சொல்வதும் ஒன்று. இந்தத் துறையை அவர் வெகு அருமையாகக் கையாண்டார். இதற்கு முன் தமிழில் இந்தத் துறையில் எவரும் பெற்றிராத வெற்றியை அவர் பெற்றார். டாக்டர் மு.வ. அவர்களும் இந்தத் துறையில் வெற்றி பெற்றவர்களுள் ஒருவர். ஆனால் அண்ணா, இயக்கத் தோழர்களுக்குத் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தக் கடிதம் எழுதுவதை ஒரு உத்தியாகக் கையாண்டார். அந்த வகையில் நேரில் மனம் விட்டு உரையாடுவது போன்ற ஒரு லாவகமான நடையை அவரால் கையாள முடிந்தது.

வார்த்தைகள் அருவியின் சலசலப்போடு வளமாக வந்து விழுந்தன. எண்ணங்கள் முத்துக்களை நிரல்படக் கோத்தது போல எழிலுற அமைந்தன. பட்டு நூலில் இழை பின்னப்பட்டது போல, கட்டுரைக் கட்டுக்கோப்பு அவர் எழுதிய கடிதங்களில் இருந்தன. பிரச்சாரம் என்னும் இலக்கிய வடிவம் தரலாம் என்பதை அண்ணா தன்னுடைய கடிதங்களில் தெளிவாக நிரூபித்தார்.

எழுத்துத் துறையில் அண்ணா இப்படி பல்வேறு நிலைகளிலும் வெற்றி பெற்றதற்கு என்ன காரணம்? அடிப்படையில் அவர் ஒரு சிந்தனையாளர்; சுய சிந்தனையாளர். எதைப் படித்தாலும் அதை அப்படியே பிரதிபலித்து விடாமல், அதை ஜீரணித்து தன்னுடையதாக்கிக் கொண்டு, எந்த வடிவத்தில் சொன்னால் தமிழக மக்கள் எளிதில் ஏற்றுக்கொள்வார்கள் என்பதைத் தெரிந்து, உரத்துப் படித்தாலும் ஓசை அழகு செவியில் ரீங்காரமிடத்தக்க வகையில் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அமைத்து அண்ணா எழுதியதால் அந்த எழுத்தில் தமிழ் உரைநடை புதிய ஜீவன் பெற்று, படிப்போரைப் பரவசப் படுத்திற்று.

வெறும் நடை அழகால் மட்டும் அண்ணா தமிழ் இதயங்களை வெல்லவில்லை. அவரே சொல்லி இருக்கிறார், 'நடை என்பது ஒரு 'வான வில்'; அது நெடு நேரம் அழகு தராது' என்று. ஆக, அழகான நடை மட்டும் இலக்கியம் ஆகிவிடாது என்பது அண்ணாவுக்கு நன்கு தெரியும். அழகான நடையைக் கையாளாமல் கசப்பான கருத்துக்களுக்கு மக்களைக் கவர்ந்து இழுப்பது சாத்தியமில்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

அவர் ஒரு சீர்திருத்தக்காரர். பழமை இருளில் ஆழ்ந்து கிடந்த சமுதாயத்தைப் பகுத்தறிவு வெளிச்சத்திற்கு அழைத்துவர விரும்பினார். இருளுக்கே பழகிப் போன சமுதாயத்திற்கு—ஒளி என்பது இன்னது என்றே உணராத ஒரு மக்கள் கூட்டத்துக்கு—ஒளியின் தன்மையை எடுத்துச் சொல்லி அது ஏழு நிற வண்ணங்களின் கூட்டால் அமைந்த ஒன்று என்பதை, அவர்களை உணர வைக்கும் பணியில் அண்ணா ஈடுபடவேண்டியிருந்தது. ஆகவே அவர் தமிழ் மொழிக்குச் சொந்தமான சகல துறைகளையும் கருவிகளாகக் கொண்டு சமுக சீர்திருத்தப் போர்க்களத்திலே சமர் புரிந்தார். தான் பயன் படுத்தும் ஆயுதங்களில் ஏதாவது ஒன்று திறமையாகப் பயன்பட்டாலும் போதும் என்கிற திருப்தி அவருக்கு.

ஆகவேதான், இலக்கிய வாதிகள் அவரை விமர்சிக்கும் போது சிறுகதையில் அவர் தோற்றுவிட்டார் என்கிறார்கள்; நாடகத்தில் முழுமை பெறவில்லை என்கிறார்கள்; கட்டுரையில் இலக்கியத் தரமில்லை என்கிறார்கள்; நாவலில் முழுமையில்லை என்கிறார்கள்; கடித வடிவில் பிரச்சார மிகுதி என்கிறார்கள், பத்திரிகைத்துறையில் ஸ்தாபன ரீதியாக அவர் எந்தச் சாதனையும் புரியவில்லை என்கிறார்கள்.

இவை அனைத்தும் உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் அண்ணா என்கிற சீர்திருத்தக் காரரை மறந்துவிட்டு அவரை இலக்கியவாதியாக மட்டும் பார்க்கின்றவர்கள் தவறான அளவுகோலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவரை அளக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

அண்ணா ஷேக்ஸ்பியர் அல்ல; மனித உணர்ச்சிகளை மட்டுமே சித்திரித்துக் காட்ட!

அண்ணா ஷெல்லி அல்ல; ஓசை அழகோடு சொற்களைத் தேர்ந்தெடுத்து இலக்கிய மாலை புனைய!

அண்ணா மில்டன் அல்ல; புராணக் கதையின் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு மாபெரும் காவியமாக அதை ஆக்கித்தர!

அண்ணா டான்டே அல்ல; எங்கோ மறைந்து போன ஒரு நாகரீகத்தின் சந்து பொந்துகளிலே புகுந்து அதனுடைய அழகைக் காவியமாகப் படைத்துக் கொடுக்க!

அண்ணா உமர் கயாம் அல்ல, தான் பெற்ற சுகத்தை

**பி.சி.கணேசன்**





வார்த்தைச் செருக்கோடு உலகுக்கு உணர்த்த!

அண்ணா தாகூர் அல்ல, இயற்கை அழகில் தான் பெற்ற இன்பத்தை தெய்விகச் சுவையோடு ஊருக்கு எடுத்துச் சொல்ல!

அண்ணா கம்பனும் இல்லை; காளிதாசனும் இல்லை; ஏன்-அவர் பாரதி கூட இல்லை.

'அண்ணா ஏன் எழுத்தாளர் ஆனார்? இந்தக் கேள்விக்கு விடை காணாமல் அவரது எழுத்துலகப் படைப்புக்களை ஆராய்வது களம் அமைக்காமல் சிலம்பம் ஆடுவது போன்ற செயலாகும்.

அண்ணாவின் நோக்கம் சீர்திருத்தம். அதில் வெற்றி பெற எழுத்து அவருக்கு ஒரு கருவி. அந்தக் கருவியால் அவர் மேற்கொண்ட சீர்திருத்த நோக்கம் நிறைவேறிற்று என்பதுதான் பிரச்சினையே தவிர, அண்ணா இலக்கியவாதியாக வெற்றி பெற்றாரா என்கிற கேள்விக்கு மட்டும் விடை காண முயல்வதில் பயன் ஏதும் இருக்க முடியாது.

இருந்தும் அண்ணா எழுதிய எழுத்துக்கள் தமிழ் மொழியை வளப்படுத்தின. அவர் கையாண்ட நடை தமிழின் ஆற்றலைத் தமிழனுக்கு உணர்த்திற்று. எனவே தான் அண்ணாவின் நடையில் வட மொழிச் சொற்கள் மிகுந்து இருந்தன. தமிழ் இசைக்காக அவர் போராடிய போதும், அது குறித்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் வட மொழிச் சொற்கள் தாராளமாக விளையாடின.

மறைமலை அடிகளாரின் தனித் தமிழ்ப் பற்று அண்ணாவுக்கு இல்லை. வீ. கோ. சூரியநாராயண சாஸ்திரி தன்னுடைய பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்ட காலத்தில் அண்ணா வாழ்ந்த போதும் தன்னுடைய எழுத்துக்களில் வட மொழிச் சொற்களைத் தவிர்க்க அவர் முயன்றாரில்லை.

என்ன காரணம்? அண்ணாவுக்குத் தமிழ்ப்பற்று இல்லை என்று சொல்லிவிட முடியுமா? யாருக்கு அந்தத் துணிச்சல் உண்டு?

நடை, சக்தி வாய்ந்ததாக இருந்து, விரும்பிய விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்று அண்ணா கருதினாரே தவிர, தனித் தமிழ்ச் சொற்களைத் தேடி அலைந்து நடை ஓட்டத்தின் இயற்கைத் தன்மையை இழந்து விட அவர் தயாராக இருக்கவில்லை. வட மொழிச் சொற்கள் விரவிய நடை வலு உள்ளதாக இருந்தால் சமூக சீர்திருத்தப் பலனும் கூடுதலாக இருக்கும் என்பது அண்ணாவின் கணிப்பு.

எனவேதான் அவர் படைத்த 'ரோமாபுரி ராணி' நூலிலும் சரி; அவர் எழுதிய 'மாஜி கடவுள்கள்' என்கிற நூலிலும் சரி, அவர் கையாண்ட நடையில் கணிசமான பகுதி வட மொழிச் சொற்கள் இருப்பதைப் பார்க்க முடியும்.

இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகிறது. அண்ணாவின் நோக்கம் சீர்திருத்தம். அவர் கையாண்ட தமிழ் அதற்கு ஒரு கருவி.

அவர் ஆங்கிலச் சொற்களை அழகாக மொழி பெயர்த்துத் தமிழில் பயின்றார். 'நாம் பலர் அவர்கள் மிகச் சிலர்' என்று அடிக்கடி அண்ணா கையாண்ட சொற்றொடர், ஆங்கிலக் கவிஞன் பைரனிடமிருந்து எடுத்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும்.

ஆங்கிலத்தில் 'arm chair politicians' என்று சொல்லுவார்கள். இதை முதன் முதலாக தமிழ்ப்படுத்தி 'சாய்வு நாற்காலி அரசியல்வாதிகள்' என்று வழக்கில் கையாண்டவர் அண்ணா.

இது போல பண்டைத் தமிழ் இலக்கியச் சொற்றொடர்களையும் வழக்கு நடைக்கு அவர் கொண்டு வந்தார். உதாரணமாக 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்', 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' ஆகிய சொற்றொடர்களைக் குறிப்பிடலாம்.

இலக்கியக் கதா பாத்திரங்களின் குண இயல்புகளை வைத்து அந்தப் பாத்திரங்களின் பெயரில் வழக்குச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துவது ஆங்கில மொழியில் நடைமொழியில் உள்ள விஷயம். வட்டி வசூலிப்பதில் கொடுமை காட்டுகிறவனை 'ஷைலக்' என்று அழைப்பது வழக்கம். ஷேக்ஸ்பியர் நாடகத்தில் 'ஷைலக்' கொடுமை உணர்வோடு வட்டி வசூலிக்கும் ஒரு பாத்திரம். ஆங்கில மொழியில் 'பாய்காட்' 'குஸ்லிங்' போன்ற தனி நபர்களின் பெயர்கள் இன்று அகராதியில் ஒரு குறிப்பிடத்தக்க அர்த்தத்தைக் குறிப்பிடும் சொற்களாக இடம் பெற்று விட்டன. தமிழில் எனக்குத் தெரிந்த வரையில் அண்ணாவுக்கு முன் யாரும் இப்படி ஒரு நடைமுறையைக் கையாளவில்லை. அண்ணா மேடைகளில் பேசும் போது அரசியலில் சூதுமதியோடு செயல்படுகின்றவர்களை சாடும் போது 'அரசியல் குடிலர்கள்' என்று வர்ணித்து இருக்கிறார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணியம் என்கிற காவியத்தில் 'குடிலன்' ஒரு பாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இது போலவே இன்றைக்கு 'தென்றல்' என்கிற வார்த்தை வழக்குச் சொல்லாகி இருக்கலாம். 'மாருதம்' என்கிற வார்த்தை பழக்கச் சொல்போல தோற்றமளிக்கலாம். இலக்கியத்தில் மட்டுமே பயிலப்பட்டு வந்த இந்தச் சொற்களைத் தமிழில் சாதாரண வழக்குச் சொற்களாக ஆக்கிய பெருமை அண்ணா அவர்களுக்கு மட்டுமே உண்டு.

ஆக அண்ணா தன்னுடைய சீர் திருத்தப் பணிக்கு, தமிழை ஒரு கருவியாகக் கையாண்ட போது தமிழ் மொழி அவரது கரம்பட்டு பொலிவு பெற்றது. இலக்கியம் புதிய வேகம் பெற்றது. மேடைப் பேச்சு மெச்சத்தக்க அழகு பெற்றது. அரசியல் புதிய மொழிப் பரிமாணம் பெற்றது. எண்ணங்கள் புதிய அழுத்தம் பெற்றன.

அண்ணா அவர்களின் எழுத்துலகப் பிரவேசத்திற்குப் பிறகு தான் கல்லூரி மண்டபங்களிலும் கனதனவான்களின் இல்லங்களிலும், பண்டிதர்களின் சபைகளிலும் மட்டுமே உலவிய தமிழ் மைதானத்திற்குச் சொந்தமான தமிழ் ஆயிற்று. பட்டம் பெற்றவன்தான் பார் வியக்கப் பேச முடியும் என்கிற நிலையை உடைத்தெறிந்து தமிழில் சிந்திக்கத் தெரிந்த எவரும் கருத்துக்களை கடல் மடை திறந்தது போல வெளியிட முடியும் என்கிற சூழ்நிலையைத் தமிழகத்தில் அமைத்துக் கொடுத்த பெருமைக்கு உரியவர் பேரறிஞர் அண்ணா.

அண்ணா தமிழுக்கு என்ன செய்தார்? இந்தக் கேள்விக்கு எளிதில் பதில் சொல்லி விட முடியாது.

தனது சீர்திருத்தப் பணிக்குத் தமிழின் பல்வேறு இலக்கியத் துறைகளைக் கருவிகளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதன் மூலம் அண்ணா எனும் அரசியல் மேதை தமிழ் இலக்கியத்துக்கு மகத்தான சேவை செய்தார். தமிழ் எழுத்து நடையிலும் பேச்சு நடையிலும் அண்ணா சகாப்தம் என்று அழைக்கப்படும் அளவுக்கு ஒரு பெரிய சகாப்தத்தை உருவாக்கி விட்டுச் சென்றார். எத்தனையோ இலக்கியங்கள் தமிழுக்குச் செய்கின்ற சேவைகளை விட மேலானதொரு சேவையை அண்ணா அமைதியாகச் செய்தார்; அடக்கமாகச் செய்தார்.

அண்ணா எனும் இலக்கியவாதியை அளக்க சம்பிரதாயமான அளவுகோல்களைப் பயன்படுத்தலாகாது. காலத்தின் தேவை பல்வேறு துறைகளிலும் பூர்த்தி செய்ததைப் போலவே இலக்கியத்துறையிலும் அவர் செய்தார் என்பதுதான் உண்மை. அண்ணாவின் அரசியல், சமூக கோட்பாடுகள் வெற்றி பெற்று முழுமை ஆகின்ற நிலையிலும் அண்ணா எனும் இலக்கியவாதியின் அடிச்சுவடுகள் காலத்தின் வேகத்தில் மறையாது தனித்தன்மையோடு விளங்கும் என்பது உறுதி.

(முற்றும்).



# வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்

முறையாகச் சேமிக்க விரும்பும் குறைந்த வருமானப் பிரிவினருக்கானது இந்த அஞ்சல் அலுவலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் சேமிக்கப்படும் குறிப்பிட்ட தொகை 5 ஆண்டுகளுக்குப் பின் ஒரு கணிசமான தொகையாக வளருகிறது.

வயது வந்த தனி நபர் அல்லது வயது வந்த இருவர் கூட்டாகத் துவக்கலாம். மைனர், தன் பெயரிலோ காப்பாளர் பெயரிலோ துவக்கலாம்.

ஒரு கணக்கில் டெபாசிட் செய்வதற்கு வரம்பேதும் இல்லை. குறைந்த பட்சம் ரூ. 5 சேமிக்க வேண்டும். 5ன் பெருக்கல் தொகையில் எவ்வளவு வேண்டுமானாலும் சேமிக்கலாம். மாதா மாதம் இத்தொகையைச் செலுத்த வேண்டும். மேலும், அதிகமாகச் சேமிக்க விரும்பினால், புதிய கணக்குகளைத் துவக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக் கொடுக்கவும். சேமிப்புக் கணக்கு வசதியுள்ள எந்த அஞ்சல் அலுவலகத்திலும் இதற்கான படிவம் கிடைக்கிறது.

மாதத்தில் ஏதாவது ஒரு நாளில் பணத்தை டெபாசிட் செய்தால் போதும். முன் பணமாக டெபாசிட் செய்ய விரும்பினால் கீழ்க்கண்டவாறு தள்ளுபடி வசதி கொடுக்கப்படும்:

1. 5 ரூபாய் சேமிப்புக் கணக்கில் 6 மாதத்திற்கு முன் பணமாக டெபாசிட் செய்தால் 50 காசு தள்ளுபடி உண்டு.

2. 5 ரூபாய் கணக்கில் 12 மாதங்களுக்கு டெபாசிட் செய்தால் ரூ. 2 தள்ளுபடி உண்டு.

ஒவ்வொரு கணக்கிற்கும் அஞ்சல் அலுவலகத்திலிருந்து தனித் தனி 'பாஸ்' புத்தகம் கொடுக்கப்படும். பணம் டெபாசிட் செய்யும்போதும் காலாவதியில் பணம் எடுக்கும்போதும் அல்லது இடைவெளியில் பணம் எடுத்தாலும் கணக்குப் புத்தகத்தைக் கொடுத்தல் வேண்டும்.

ஆண்டு 9.25 சதவிகித கவர்ச்சிகரமான கூட்டு வட்டி உண்டு. வட்டிக்கு வரி விதிக்கப்படும்.

5 ஆண்டு காலாவதிக்குப் பின், தொகை முழுதும் எடுக்கப்படாது இருப்பின், அவ்வாறு இருக்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 ஆண்டு வரை தொடர்ந்து வட்டி கிடைக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

அஞ்சலக வங்கியின்

# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை
குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும்
நடைபெறும்.

## ரூ. 20½ இலட்சத்திற்கு

## 11,116 பரிசுகள்.

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக்
கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு இலட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | .. | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | .... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புக் கணக்குத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விவரங்களுக்கு
அருகிலுள்ள தபால் நிலையத்தோடு
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002

பதிவு எண். M. 8676

அடுத்த இதழ்

# தமிழரசு

அதிக பக்கங்களுடன் - கண்கவர் வனப்புடன்

## தமிழக அரசின் முதலாண்டுப் பணிகளின் தொகுப்பு மலராக வெளிவருகிறது!



இந்த அரசு பதவியேற்ற ஓராண்டுக்குள்
எத்தனையோ போராட்டங்கள் !
இயற்கையின் எதிர்பாராத சீற்றங்கள் !!

அவை அனைத்தையும்
மனிதாபிமான உணர்வு கொண்டு—
புதிய அணுகுமுறையின் மூலம் சந்தித்து—
பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு கண்டு
தன் சக்திக்கு மீறிய சலுகைகளை வழங்கி
ஒரு புதிய வரலாற்றை
இந்த ஓர் ஆண்டில் படைத்துள்ளது தமிழக அரசு!

நமது அரசின் இந்தப் பணிகளை
அற்புதமான ஒரு கருத்துக் கருவூலமாகத்
தொகுத்துத் தருகிறது 1-7-'78 "தமிழரசு" இதழ்!